# நீனாம் தரும் சிந்தனைகள்.


சிந்தனைச் செம்மல்.

பேராசிரியர் டாக்டர். ந. சந்தினி



அருள் வாழ்வு பதிப்பகம்.

4, தனையாசித் தெரு, மயிலை, சென்னை,

- 600004

# சீனம் தரும் சிந்தனைகள்

'சிந்தனைச் செம்மல்'
பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி

அருள் வாழ்வுப் பதிப்பகம்
4, தலையாரித் தெரு, மயிலை, சென்னை-600004

முதல் பதிப்பு: 2-5-1989
(பேராசிரியர் டாக்டர் ந.ச. அவர்களின் 63வது பிறந்த நாள்)

உரிமம்: திருமதி எழிலரசி பாலசுப்பிரமணியன்

விலை: ரூ. 20/-

அச்சகம்: ஜீவன் அச்சகம், சென்னை-600005

முதல் பதிப்பு: 2-5- 1989
(பேராசிரியர் டாக்டர் ந.ச. அவர்களின் 63வது
பிறந்த நாள்)

உரிமம்: திருமதி எழிலரசி பாலசுப்பிரமணியன்

விலை: ரூ. 20/-

அச்சகம்: ஜீவன் அச்சகம், சென்னை-600005

# பதிப்புரை

'ஆய்வே வாழ்வு; வாழ்வே ஆய்வு' எனத் தாம் கூறிய ஆய்வு மொழிக்குத் தாமே தக்கதோர் எடுத்துக்காட்டாக விளங்கியதோடு, தமிழ்ப்பணியைத் தம் தொழில், தொண்டு, தொழுகை என உயிர் மூச்சு உள்ளவரை கடைபிடித்து வாழ்ந்தவர் 'சிந்தனைச் செம்மல்' பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள்.

'உலக உறவு' வளர/மலர வேண்டுமானால், உலகைச் சுற்றி வரவேண்டும்; உலக மக்களைக் கண்டு மகிழ வேண்டும்; அவர்களுடைய உணர்வுகளை நேரில் அறிய வேண்டும் என்னும் வேட்கை கொண்ட பேராசிரியர் அவர்கள், அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, கிரீசு, சிங்கப்பூர், பிரான்சு, மலேசியா, ஜப்பான், ஜெர்மன், ஹாங்காங், ஹலாந்து போன்ற உலக நாடுகளுக்குப் பயணங்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

தம் பயணங்கள் எல்லாம் தமிழர்க்குப் பாடங்கள் ஆக வேண்டும் என்னும் நல்லுணர்வோடு அவற்றை ஒற்றுமை ஒளி, கலைக்கதிர், விடுதலை, ஜூனியர் விகடன் போன்ற பல்வேறு இதழ்களில் வெளியிட்டு வந்தார்கள்.

அவற்றையெல்லாம் தொகுத்துத் தமிழ் உலகிற்கு வழங்கினால், பெரும்பயன் தரும் என்னும் எண்ணத்தில், அவரே உருவாக்கிய அருள்வாழ்வுப் பதிப்பகத்தின் வழிச் 'சீனம் தரும் சிந்தனைகள்' என்னும் பெயரில் இந்நூலை வெளியிடுகின்றோம்.

முதலில், இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளைத் தம் இதழ்களில் வெளியிட்டுதவிய திருமதி சாந்தி

மோகனராசு (ஒற்றுமை ஒளி), அமரர் பேராசிரியர் டாக்டர் ஜி. ஆர். தாமோதரனார் (கலைக்கதிர்), திரு. எஸ். பாலசுப்பிரமணியம் (ஜூனியர் விகடன்); திரு. கி. வீரமணி (விடுதலை) ஆகியோர்க்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அந்நன்றியின் அடையாளமாக அவர்களுக்கே இந்நூலையும் படையலாக்கு கிறோம்.

இந்நூல் உருவாவதற்கு முழுமையான பொறுப் பேற்றுக் கொண்டவர் சென்னைப் பல்கலைக் கழகத் திருக் குறள் ஆய்வு மைய இணைப் பேராசிரியர் - பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின் மாணவர் - 'குறள் ஞானி' டாக்டர் கு. மோகனராசு அவர்கள்; அவர்களுக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலை வெளியிட ஆக்கமும் ஊக்கமும் தந்து ஆற்றுப் படுத்தியவர் என் கணவர் டாக்டர் ம. பெ. பாலசுப்பிர மணியன் அவர்கள்; தோன்றாத் துணை நின்றவர்கள் பேராசிரியர் டாக்டர் சூ.இன்னாசி, டாக்டர் மு. நாகநாதன் ஆகியோர்; அவர்களுக்கும் என்/எம் நன்றி.

இந்நூலை நல்ல முறையில் அட்சிட்டுதவிய ஜீவன் அச்சகத்தார்க்கும் அங்கே பணியாற்றும் பணியாளர் களுக்கும், அட்டைப்படம் வரைந்துதவிய திரு. ஜமால் அவர்களுக்கும் என் நன்றி உரியது.

தங்கள்,

நாள் : 2-5-1989 எழிலரசி பாலசுப்பிரமணியன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சீனம் தரும் சிந்தனைகள் | ... 9- 90 |
| 2. | செந்தமிழ்ப் பாரதி போற்றிய சீனத்துச் சியூசின் | ... 91- 98 |
| 3. | ஜெர்மன் தரும் சிந்தனைகள் | ... 99-122 |
| 4. | வேலை இல்லாத் திண்டாட்டம் விலகிட | ... 123-128 |
| 5. | ஆத்திகம் சொல்லும் ஒழுக்க நடைமுறைகள் நாத்திக சீனாவில்தான் உள்ளன | ... 129-138 |
| 6. | அனைத்திந்திய வானொலியில் ஒரு கலந்துரையாடல் | ... 139-149 |

# படையல்

இந்நூலில் வரும் கட்டுரைகளை
வெளியிட்டுதவிய
'ஒற்றுமை ஒளி' இதழின் ஆசிரியர்
திருமதி சாந்தி மோகனராசு அவர்கள்,
'கலைக்கதிர்' இதழின் ஆசிரியர்
அமரர் பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன் அவர்கள்,
'ஜூனியர் விகடன்'| இதழின் ஆசிரியர்
திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்கள்,
'விடுதலை' இதழின் ஆசிரியர்
திரு. கி. வீரமணி அவர்கள்
ஆகியோருக்கு
இந்நூல்
அன்புப் படையல்

# 1

# சீனம் தரும் சிந்தனைகள்

*('ஒற்றுமை ஒளி' இதழில் 2-5-83 முதல்
1-4-84 முடிய தொடர்ந்து வந்த தொடர்)*

# 1

# ஜூன் - 14

ஜூன்—14. இந்தத் தேதியை 1953 முதல் யான் மறப்பதில்லை. காரணம் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் தலைமையில் திருவரங்கத்தில் திரு. வி. க., பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வ. முதலியோரின் அஞ்சல் வாழ்த்துடன் என் திருமணம் நடந்த நாள், அந்த நாள். பேராசிரியர் டாக்டர் தெ. பொ. மீ. நேரில் வந்து வாழ்த்தியது நாங்கள் செய்த பெரும் பேறு. இப்போது நம்மிடையே வாழ்ந்து கொண்டுள்ள பேராசிரியர்கள் அ. ச. ஞானசம்பந்தம், ம. ரா. போ. குருசாமி முதலியவர்களும் திருமணத்திற்கு வந்திருந்தார்கள். தமிழரசு கழகமே தமிழகத்தை வாழ்விக்கும் என்ற பெருநம்பிக்கையின் காரணமாகத் திவான் பகதூர் தி. மு. நாராயணசாமிப் பிள்ளை போன்ற பொது வாழ்வுப் புகழ் பெற்ற முதியவர்கள் திருமணத்திற்கு வந்திருந்தும், சிலம்புச் செல்வர் தலைமையில் எங்கள் கலப்புத் திருமணம் நடைபெற வேண்டும் என்ற என் பெரு விழைவு வெற்றி பெற்றதே என் திருமணத்திலும் எனக்கு இன்பம் தருவதாக அந்நாளில் இருந்தது.

யான் துளுவ வேளாளர் வகுப்பு; என் துணைவியார் கம்மாளர் வகுப்பு. எங்கள் திருணத்தின்போது அவர்கள் பி. ஏ., பி.டி.; எங்கள் குடும்பத்தினும் குறைவான செல்வ வளமுடைய—ஏன் வறுமை நோக்கிய—குடும்பம்தான்; பெண் அழகு என்றும் சொல்ல முடியாது. எவரும் பெண் பற்றி எந்தப் பரிவுரையும் சொல்லவில்லை; ஆனால் என் துணைவியாரின் அன்பு என்னை ஆட்படுத்திவிட்டது.

எங்கள் வாழ்க்கைப் பயணமே ஓர் இரயில் பயணத்தில் தான் தொடங்கியது. 1952-இல் நான் காஞ்சிப் பச்சையப்பர் கல்லூரியில் விரிவுரையாளன் ; அந்த ஆண்டில் என் பெருந்துணையோடு கலப்பு மணம் புரிந்து கொண்ட ஒரு குடும்பத்தைப் பாதுகாக்கும் முழுப் பொறுப்பை நானே மேற்கொண்டிருந்தேன் ; இளமை முதற்கொண்டே காந்தி சகாப்தத்தால் விளைந்த இலட்சிய உணர்வுதான். அதனால் திருச்சிராப்பள்ளி டவுன் இரயில் நிலையத்திலிருந்து காஞ்சிபுரத்துக்குச் செங்கற்பட்டில் இறங்கிச் செல்லாமல் நேராகச் சென்னை வந்தேன். இரயிலில் கூட்ட நெரிசல் மிகுதியாக இருந்தது. நான் 'ஆண்சிங்க' மல்லவா? ஓரிடத்தை முண்டியடித்துப் பிடித்துக் கொண்டு அந்த இடத்தைத் 'தக்க'வருக்குத் தரலாம் என்று தீர்மானித்தபோது என் வருங்காலத் துணைவியாரே உரியவர்களாகத் தென்பட்டார்கள். எனவே, நின்று கொண்டிருந்த அவர்கட்கு அவ்விடத்தைக் காணிக்கையாக்கினேன் : இரவெல்லாம் நான் நின்று கொண்டே பயணம் செய்தேன்; இல்லை, தவம் செய்தேன்.

சென்னை சேர்ந்ததும் உதவி பெற்ற உள்ளம் என்ன செய்கிறது என்று பார்த்தேன். ஒன்றும் செய்யாமல் கழட்டிக் கொள்ளுமோ என்ற அச்சமும் கவலையும் எனக்கு இல்லாமல் இல்லை! எனவே, முற்றிலும் முயற்சியில்லாமல் ஊழை நம்பிக் 'கோட்டை' விடக் கூடாது என்ற எண்ணத்தில்—இல்லை! திட்டத்தில், 'இரவு லேடி வெல்லிங்டன் கல்லூரிக்குப் போக வேண்டும் என்றீர்களே! தனியே போய் விடுவீர்களா? வழி தெரியுமா? யாரும் அழைத்துப் போக வருவார்களா?' என்று எழும்பூர் இரயில் நிலையத்தை அணுகும்போது கேட்டேன். 'யாருமில்லை, என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டுள்ளேன்!' என்றார்கள். 'எனக்குக் கல்லூரியும் கல்லூரிப் பேராசிரியைகளும் நன்றாகத் தெரியும்; நான் துணைக்கு

வரட்டுமா?' என்று கேட்டேன். 'ரொம்ப நன்றி' என்றார்கள். நானும் வழித்துணையாகப் போனேன்; அவர்களும் வாழ்க்கைத் துணையாகவே அமைந்தார்கள்.

யான் உலகப்பயணம் புறப்பட்ட ஜூன் 14 ஆம் நாள் எவ்வளவு அழுத்தமாக என் நினைவில் இருந்தது—இருக்கக் கூடியது—இருக்க வேண்டியது என்பதை மற்றவர்கள் ஆழ நினைவு கூறவே இக்குறிப்பு. ஆனால் 1982 ஜூன் 14ஆம் நாள் சில காரணங்களால் எனக்கு மண நினைவு நாளாக அமையவில்லை; பிண நினைவு நாளாக அமைந்துவிட்டது; வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளும் அளவுக்கு அன்று சில நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. அந்த நாளுக்குச் சற்றொப்ப ஏழு மாதங்கட்கு முன் என் மனைவி இறந்த 'இழிவு' காரணமாக நான் அடையாத துயரம் கூட அன்றைக்கு ஏற்பட்டது. அப்படியும் உயிரை இறுகப் பிடித்துக் கொண்டு உயிரை விட்டாலும் வானத்திலோ—வேறு எங்கோ விடுவதே மேல் என்ற எண்ணத்தில் விசாக்களை—போக முடியாத நாடுகட்கும் போவதற்கு விசாக்களை வாங்கிக் கொண்டு சூன் 14ஆம் நாள் இரவு மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு விரைந்தேன்.

மேற்கண்ட சிறு முன்னுரை ஏன் என்ற வினா மற்றவர் கட்கு எழக்கூடும்; 55-வது வயது — 5 நாடுகள் — 55 நாள்கள் என் உலகப் பயணம் உருவாகிய சூழலையும் மற்றவர்கள் தெரிந்து கொள்வது பல்லாற்றானும் பயன் தரும் என்பதே என் பணிவார்ந்த விடை.

முன்னுரையாக மற்றொன்றையும் நன்றி மறவாமல் இங்கே குறிப்பிட வேண்டும். சீனப் பயணம் பற்றிய எண்ணத்தை எனக்கு முதல் முதல் ஊட்டியவர் சென்னைப் பல்கலைக் கழகப் பொருளியல் துறை விரிவுரையாளர்—புகழ் பெற்ற எழுத்தாளர்—நூலாசிரியர்-கவிஞர்-மொழிபெயர்ப்பாளர் — நாட்டுப் பற்றாளர் — சிறைசென்ற செம்மல்

திரு. கே.ஆர். ஜமதக்கினியின் மருமகர்—என்னினும் சிறந்த படிப்பும் பண்பும் படைத்தவர்—டாக்டர் மு. நாகநாதன் அவர்களே. 1953-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் யான் ஆய்வு மாணவனாக இருந்தபோது சீனா செல்லும் வாய்ப்பு ஒன்று வந்தது. அது இந்தியப் பல்கலைக் கழகங்கள் சார்பில் ஆசிரியர்களும் மாணவர்களும் கொண்ட ஒரு குழு சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் தலைமையில் உருவாக்கிய ஏற்பாடே ஆகும். அக்குழுவிற்குச் செல்ல விண்ணப்பங்கள் வேண்டப்பட்டன. என்னைப் போலவே அப்போது என்னோடு தத்துவத் துறையில் ஆய்வாளராக இருந்து, இப்போது அத்துறையில் பேராசிரியராக இருக்கும் டாக்டர் பி. கே. சுந்தரம் அவர்களும் விண்ணப்பம் செய்திருந்தார்கள். யானும் விண்ணப்பம் செய்திருந்தேன் ? அப்போது துணைவேந்தராக இருந்த டாக்டர் சர் ஏ. எல். முதலியார் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை. பிறவிப் பண்பாகவே எதையும் பார்க்க வேண்டும்; தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பம் படைத்தவன் யான். எனவே, என்னைப் பல்லாற்றானும் அறிந்து அருள் பாலித்து வந்த சர். ஏ. எல். முதலியார் என்னைத் தேர்ந்தெடுக்காதது வருத்தமே. அவர் தேர்ந்தெடுத்த 'அவர்' என்னைப் போலவே பல்கலைக் கழகத்தில் ஆய்வு மாணவராக இருந்தவர்; இப்போது எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை ! அவர் சீனா போய்வந்தபின் என்ன செய்திகளை எவருக்குச் சொன்னார் என்பதும் தெரியவில்லை !

சர் சி. பி., சீனப் பயணம் பற்றிக் கொடுத்த அறிக்கையையும் தேடிக் கொண்டிருக்கிறேன். கிடைத்ததும் சொல்வேன் !

இந்த முதல் வாய்ப்பை இழந்த எனக்கு இருபது ஆண்டுகட்குப் பின்பு டாக்டர் மு. நாகநாதன் 'வாருங்கள், சீனாவுக்குப் போய் வரலாம்' என்று சொன்னபோது

மனைவியை இழந்து உடல் நலம் இழந்து மனநலமும் இழந்து வருந்திக் கொண்டிருந்த எனக்கு, அந்தச் சீன அழைப்பு 'சீனி'யாக இல்லை. புறப்படுவதற்குச் சில நாள் முன்வரை 'பார்க்கலாம், பார்க்கலாம்' என்று தலைவர் காமராசர் கையாண்ட தமிழ் நடையையே கையாண்டு வந்தேன். கடைசியாக 'இருப்பதைவிட எங்கேனும் பறந்து போய் இறப்பதே மேல்' என்ற மனச் சுழலில்—சூழலில்—பயணமாக முடிவு செய்தேன்.

இந்த நேரத்திலே என் ஆருயிர் நண்பர் பெருங் கவிக்கோ வா. மு. சேதுராமன் வழக்கம்போல் என்னைப் பார்க்க வந்தார். தொலைபேசியில் ஒரு விமானக் கம்பெனியோடு யான் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்து விட்டு—வழக்கம்போல் என்னிடம் தயக்கத் துடனும் அச்சத்துடனும் 'எப்ப ஐயா போகிறீர்கள் ? எப்படி ஐயா போகிறீர்கள்? எவ்வளவு ஐயா டிக்கட் பணம்?' என்று கேட்டார். ஒரு குறிப்பிட்ட விமானக் கம்பெனியின் பெயரைச் சொல்லிப் 'பத்தாயிரம் கேட்கிறார்கள்?' என்றேன்; 'ஐயோ ! பன்னிரண்டாயிரம் கொடுத்தால் ஏர் இந்தியாவில் சலுகைப் பயணச் சீட்டு .கிடைக்கும்' என்றார். 'அப்படியா!' என்று அதிசயத்துடன் ஏர் இந்தியா அலுவலகத்திற்கும்—பாரத் டிராவல் சர்விசுக்கும் ஓடினேன். 'ஆமாம், உண்மைதான்' என்று சொல்லி, அவர்கள் வேண்டும் உதவிகளைச் செய்தார்கள். இதெல்லாம் நடந்தது ஜூன் ஏழாம் தேதி—பயணம் ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு !

# 2

# நள்ளிரவில் நட்பும் பகையும்

அவசர அவசரமாக என் உலகப் பயணம் ஆரம்பம் ஆகிறது. என் மனதில் மரணம் பற்றிய கவலையும் இல்லை. காரணம் 1983 ஜூன் 3-ஆம் நாள் என் ஒரே மகளின் திருமணத்தை—எங்கள் திருமணத்தினும் முற்போக்கான அரிசனக் கலப்புத் திருமணத்தை என்னால் இயன்ற அளவில் விரைவாகவும் சிறப்பாகவும் செய்து முடித்திருந்தேன்- மனைவி இறந்த ஆறு மாதத்துக்குள்.

கடைசி நாட்களில் என் மனைவிக்குக் கடவுள் நம்பிக்கை போய்விட்டது. ''கோயில், கோயில்'' என்றும் ''சாமியார், சாமியார்'' என்றும் என்னோடு அலைந்து கொண்டிருந்தாள் அவள். 1981, நவம்பர், தீபாவளி இரவு நாங்கள் மூகாம்பிகையை வழிபடப் புறப்பட்டதும் அவளுக்காகவே. காரணம் நான் சில மாதங்கட்கு முன்பு அந்தக் 'கொல்லூர்' (?!) போயிருந்தேன். கொட்டும் மழை; அப்படியிருந்தும் அம்பிகையை வழிபட்டு ஜோக் அருவியையும் பார்த்துவிட்டுத் திரும்பினேன். யான் பெற்ற இன்பப் பேறெல்லாம் என் மனைவியும் பெறவேண்டும் என்பது என் தனிவாழ்வின்—குடும்ப வாழ்வின் ஒரு பெருங்குறிக்கோள். அதற்கு அடுத்த நிலையில் எங்கள் ஒரே மகள் எங்களினும் சிறப்புப் பெறவேண்டும் என்பதுதான். இவ்வுண்மை என் மனைவி உயிருடன் இருந்தபோதே யான் வெளியிட்ட 'மங்கல மனைமாட்சி' என்ற சிறு நூலில் பொறித்துள்ள உரிமை உரையால் உணரலாகும். ஆம், கணவன் மனைவி காதலுக்கும்—பெற்றோர் பிள்ளைகள் பற்றுக்கும் சாட்சிகள் கேட்கும் காலம் இந்தக் காலம் !

இந்த நிலையில் 'மூகாம்பிகைக் கோயிலுக்கு என்னை விட்டுவிட்டுத் தானே போனீர்கள்?' என்று என் அன்பு மனைவி வருந்தியதால்—அவள் உள/உடல் நலம் கருதியே கோழிக்கோடு பல்கலைக்கழகக் கூட்டம் ஒன்றின் காரண மாக நான் போக வேண்டியிருந்ததால் அவளையும் முதல் வகுப்பில் அழைத்துச் சென்றேன். ஊழ்வினை என்ற ஒன்றை நம்பவைப்பது போலக் கடைசியாக அந்தக் கூட்டமும் கூடியது; ஆனால் நடக்கவில்லை; பல்கலைக் கழக உட்காரணங்களால், சில மணித்துளிகளில் கூடிய அந்தக் கூட்டம் கலைந்தது. மூகாம்பிகைக் கோயிலுக்குப் போய் ஜோக் அருவியையும் பார்த்து விட்டுத் திரும்பும் போதே—பட்டப் பகலில்—வெய்யில் வேளையில் என் மனைவி நரம்பு அதிர்ச்சி அடைந்து அதிலிருந்து மீளாமலே மாண்டாள்! அவள் மரணப்படுக்கையில் வீழ்ந்தபோது நல்ல நினைவுடனேயே நவின்ற சொற்கள் 'நான் கடவுளை நம்பவில்லை' என்பதுதான். சர்வ வல்லமை படைத்தவன் தன்னைத் தொழவந்தவளுக்குத் தந்த பெருந்துன்பம் அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை! இது தவறு என்று ஆத்திகர்கள்—ஏன்? நரம்பு மருத்துவ அறிவியலில் சிறந்த சில டாக்டர்களே கூடக் கூறினர். ஆனால் அவளாலும் என்னாலும் இதை முழுமையாக நம்ப முடிய வில்லை; ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மனைவி போனபின்—மகள் திருமணமும் முடிந்தபின்—என் உடல் நிலையில் என் தந்தையினும் தமிழுக்கும் தமிழருக்கும் யான் செய்யக் கூடியன எல்லாம் செய்தபின் என்ன கவலை? என் கவலையற்ற மனத்திற்கு மற்றுமொரு காரணமும் உண்டு. அது 'தனக்குவமை இல்லாதான் தாள்' சேர்ந்தமை—அல்லது கண்டமை கூட! இல்லை; கண்டால் தான் விள்ள முடியாது; விண்டால்தான் கண்டிருக்க முடியாதே! இவ்வாறு பழமொழியே (பழ மறையே !?) சாற்றுகிறதே! எனவே, என் கவலையற்ற தன்மைக்கு அன்றும்—இன்றும் காரணம் நான் போதுமான ஆயுள்

ஒப்பந்தங்கள் (காப்பீடுகள் = insurances) செய்திருந்தமையே. ஜனநாயகம் என்ற பெயரால் பண நாயகமே பெரிதும் நடக்கும் இந்நாட்டில் என் ஒரே மகளுக்கு இது இன்றியமையாததுதானே! மேலும், என் மகளே சொல்லியது போல் (என் பகைவர்களும் சொல்வது போல!) செலவாளியாகிய என்னையும் கட்டுப்படுத்தி, என் மனைவி என் பணத்தையும் தன் பணத்தையும் சேமிப்புகளில் போட்டு வைத்த பணம் தக்கவாறு என் மகளுக்கும் என் தாய்த் தமிழுக்கும் பயன்படும் வகையில் என் மகளின் ஒப்புதலுடன், என் நண்பர்கள் அறிவுரைகள் படி, யான் எழுதிவைத்த உயில்கள்தான்! ஆம், ஆயுள் காப்பே (insurances) ஆண்டவன் காப்பு! உயில்களே உடைமைக் காப்பு—ஓரளவுக்கேனும்.

மேலும் யான் உலகப் பயணத்தில் உயிர்துறக்க நேரிட்டால் எனக்காக—என் உடலுக்காக ஒரு சல்லிக் காசும் செலவழிக்கக் கூடாது என்று என் தம்பியிடமும் என் மகளிடமும் உறுதியாகத் தெரிவித்திருந்தேன். என் சட்டைப் பையிலும் முகவரிப் புத்தகம் (டாக்டர் மு. நாகநாதன் தந்தது) ஒன்றில் முதல் பக்கத்திலேயே என் கையெழுத்தில் இதை எழுதி வைத்திருந்தேன்.

போக முடியாமல் போன நாடுகட்காகவும் விசாக்களைத் தேடி நான் அலைந்து கொண்டிருந்தபோது என் உலகப் பயணத்திற்குத் துணி முதலியனவற்றைப் பெட்டிகளில் வைக்க என் மகள் உதவினாள்; மருந்துகள் வைக்க என்று ஒரு கைப்பையும் தன் கணவனுடன் சென்று வாங்கித் தந்தாள். மருந்துகள், ஒரு புதைமிதி முதலியன வாங்க டாக்டர் பொற்கோ உடனிருந்து உதவினார்.

யான் பெரிதும் விளம்பரம் விரும்பாதவன்; ஆரவாரத்தை வெறுப்பவன். இது தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்களிடமும் பேராசிரியர் மு. வ. அவர்களிடமும் யான்

கற்ற பாடம். கருவிலேயே என்னிடம் அமைந்திருக்கக் கூடிய இந்தத் 'திரு' மேற்குறித்த பெரியவர்களால் மேம் பட்டிருக்க வேண்டும். எனவே, என் துறையில் இருப்பவர் களிடம் விமான நிலையத்திற்கு வழியனுப்ப வரக்கூடாது என்று கட்டளை இட்டேன். ஆனால் அந்தக் கட்டளையை மீறி டாக்டர் பொற்கோ அவர்களும் டாக்டர் கு. மோகன ராசு அவர்களும் எழுத்தர் திரு. மா. பத்மநாபனும், திரு. சின். கோதில் மொழியன் முதலிய ஆய்வு மாணவர் களும் விமான நிலையம் வந்தனர். பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் யார் தடுத்தாலும் வந்தே தீரும் அன்பினர்; எனவே அவரும் வந்திருந்தார். நள்ளிரவு விமானம் புறப்படும் வரை காத்திருந்தனர்.

யான் வீட்டிலிருந்து விமான நிலையம் செல்ல எனக்கும் என் மனைவிக்கும் தெரிந்த ஒரு குடும்பத்தினர் கார் கொடுத்து உதவினர். அவர்கள் தந்த அந்தக் காரிலேயே என்னை வழியனுப்ப வந்தவர்களைத் திருப்பியனுப்ப நள்ளிரவில் அது உதவியது. கார் கொடுத்த குடும்பம் விமான நிலையம் போகும்முன் என்னை அவர்கள் வீட்டிற்கு வரச்சொல்லி மாலையிட்டு வழியனுப்பியது. அதற்கு நன்றி பாராட்டும் வகையில் யான் என் உலகப் பயணத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்புமுன் அவர்கள் வீட்டிற்குப் போய் அன்பளிப்பு ஒன்றைக் கொடுத்துவிட்டே திரும்பி னேன்.

விமான நிலையத்தில் யான் கண்ட காட்சி ஒன்று என்னை வியப்பில் ஆழ்த்தியது; வேதனையையும் கிளம் பியது. என் வளர்ப்புத் தந்தை திவான்பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளைக்கு மிகவும் வேண்டிய ஒரு கோயில் குருக்கள் வந்திருந்தார். அவரையும் அவருடன் அமெரிக்காவுக்குப் பயணமாகிக் கொண்டிருந்த இன்னொரு

சாத்திரிகளையும் வழியனுப்ப ஒரு நண்பர் கூட்டம் வந்திருந்தது. அக்கூட்டத்தில் யான் நெருக்கடிக் காலத்தில் இடைக்காலப் பதவி விலக்கம் அடைவதற்குத் தூபம் போட்டுத் துணைபுரிந்த ஒரு பார்ப்பனரையும் பார்க்க நேர்ந்தது. நான் குத்தூசி போலப் 'பார்ப்பனத் துவேஷி' இல்லை. ஆனால் வடமொழிக்கும்—வடஆரியக் கருத்து கட்கும் அடிமைப்பட மறுக்கும் தமிழன். என் உறுதி காரணமாக என்னைத் தீர்த்துவிட விரும்பும்—என்னைப் போலவேத் தமிழ்த் துறையில் இருப்போரைக் கொண்டே—என்னால் வளர்க்கப்பட்ட என் மாணவர்கள் நண்பர்களைக் கொண்டே—அவர்கட்குச் சில சலுகைகளைக் காட்டியே—என்னைத் தீர்த்திட எண்ணும் ஓரிரு பார்ப்பனர்கள் உண்டு. அவர்களுள் ஒருவர் குருக்களையும் சாத்திரிகளையும் வழி யனுப்பக் குடும்பத்துடன் வந்திருந்தார். குருக்களையும் சாத்திரிகளையும் தங்கள் குடும்பத்துடன் நிறுத்தி வைத்துப் பலமுறை நிழற் படம் எடுத்தார், அந்த நெருக்கடிக்கால வீரர்! கோவில் குருக்கள் என்மீது அன்புடையவர். எனவே அவர் என்னையும் படம் எடுக்கும் போதெல்லாம் உடன் நிற்க வற்புறுத்தினார். வேறு வழியில்லாமல் நெருக்கடிக் கால வீரரும் இசைந்தார். இந்த நெருக்கடிக்கால வீரர் பற்றி ஒரு முக்கியக் குறிப்பினைக் கொடுக்க வேண்டும். இவர் வைதிகத்தை எதிர்க்க எழுந்த சமணப் பணக்காரர் கட்கு உயிர் நண்பர்!

குருக்களை 'எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டேன். 'அமெரிக்காவுக்குத்தான்' என்று உறவோடு குறிப்பிட் டார். 'என்ன சேதி?' என்றதும், 'எப்போதும்போல் கும்பாபிஷேகம்தான்!' என்றார்; 'உடன் சாத்திரிகள் எதற்கு?' என்றேன். அவர் பெரிய படிப்பாளி! பிரவசனம் செய்வதற்கு?' என்றார். பெருமூச்சு விட்டேன். தமிழா! அமெரிக்கத் தமிழர்கள் உன்னைத் திருக்குறள் பற்றியும், சங்க நூல்கள் பற்றியும், சிலப்பதிகாரம் மணிமேகலை பற்றியும், பன்னிரு திருமுறைகள் திவ்வியப் பிரபந்தங்கள்

பற்றியும் விரிவுரைகள் ஆற்ற அழைக்கும் நாள் எந்நாளோ? நீதான் உன் உடன் பிறப்போடேயே அழுக்காற்றால்—அவசரத்தால் போரிட்டு மடிந்(த்)துவிட முடிவு கட்டி விட்டாய் போலிருக்கிறதே! நான்கூட பிராமணனாய்ப் பிறந்திருந்தால் இளமையிலேயே சமஸ்கிருதம் படித்திருந்தால்—காட்டிக் கொடுக்கும் திராவிடச் சாதியில் பிறவாமல் இருந்திருந்தால் - எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும் போலிருக்கிறதே! நாத்திகம் பேசினாலும் திராவிடனாய்ப் பிறந்து நாத்திகம் பேசுவதினும் ஆரியனாய்ப்—பார்ப்பனனாய்ப்—பிறந்து நாத்திகம் பேசினால் அதிக மதிப்பு இருக்கும் போல் இருக்கிறது. என்ன பாவம் செய்து தமிழனாய்—பிராமணன் அல்லாதானாய்ப் பிறந்தேனோ?

கோவில் குருக்கள் திவான்பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளையின் 'வளர்ப்பு மகன்' என்ற காரணத்தால் என்னை வலிந்து வலிந்து அழைத்து—இழுத்துத் தன் பக்கத்திலேயே வைத்துக் கொண்டார். விமான நிலைய அதிகாரிகளுள் ஒருவர் பம்பாய்க்குப் போயிங்கில் இடம் ஒதுக்கும் அதிகாரம் படைத்த ஒருவர்—குருக்களை விழுந்து வணங்கி 'இங்கேயே உட்காருங்கள்—கால் நீட்டிக்கொண்டு உறங்குதற்கு வசதியான இடம் தருகிறேன்' என்றார். குருக்கள் திவான்பகதூர் பிள்ளை அவர்கள் தம்மீது வைத்த அன்பை எல்லாம் என் மீது பொழிவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். எனவே அதிகாரியிடம் 'இவருக்கும்' என்று பல்லெல்லாம் காட்டி வேண்டினார்! எனக்கே என்னவோ போல் இருந்தது! அதிகாரியோ 'அப்படியே! தங்கள் பக்கத்திலேயே' என்றார்!

பூவோடு சேர்ந்த நார் ஆனேன்!

கடவுளை நம்ப மறுக்கிறாயே! பார்த்தாயா இதுதான் கடவுள் செயல்! இல்லாவிட்டால் இந்த நாள் இந்த விமானத்தில் உன் 'தந்தை'யாருக்கு வேண்டிய இந்தக் குருக்கள் உன்னை வழியனுப்ப வந்து உதவுவதுபோல்

வருவானேன் என்கிறீர்கள் அல்லவா? இது 'தற்செயலா?' 'தெய்வச் செயலா?' என்மனம் குழம்புகிறது!—இல்லை—தெளிகிறது? ! நான்தான் 'பகுத்தறிவு என் கைவாள் ! கடவுள் நம்பிக்கை என்கேடயம்!' என்றுதானே சொல்கிறேன். என் கடவுள் நம்பிக்கை, ஆயுள் காப்பு உறுதிச் சீட்டுப் போலத்தான் என்றுதானே சொல்கிறேன்! நான் சொல்வதென்ன? வேலிக்கு ஓணான் போல என் ஆருயிர் நண்பர் டாக்டர் அவ்வை துரை. நடராசன் சாட்சியாக, எண்பது வயதுக்கு மேற்பட்ட திரு. பெ. ந. அப்புசாமி ஒரு சில நாள்கட்கு முன்புதானே 'உயிர் என்றும் கடவுள் என்றும் தனியாக உடலை—உலகைக் கடந்து ஒன்று இல்லை' என்று ஓங்கி உரைத்தார்? ஏன்? இன்று (10-5-83) காலை கூட என் வீட்டிற்கு வந்த முதுபெரும் புலவர் அ. கு. ஆதித்தர் 'வினை—பிறவி—கடவுள் என்பதெல்லாம் மனிதனை அச்சுறுத்தி நல்வழிப்படுத்த கட்டப்பட்ட கட்டுக்கதை' என்கிறாரே! இப் பழந்தமிழ்க்கிழம் நாளும் மயிலையிலிருந்து திருவல்லிக்கேணி போய் அரசடி கற்பகத்தை வணங்கும் வழக்கம் உடையவர் ஆயிற்றே!

பக்கத்திலிருந்த 'படித்த' சாத்திரியாரிடம் பணிவுடன் 'சாமி! உயிர்போகும் பிரச்சினை! உயிர் என்றும் கடவுள் என்றும் தனியே உண்டா? என்ன நிருபணம்?' என்று ஆர்வமுடன் கேட்டேன்? சாத்திரியார் கண்கள் சுழன்றன! சொருகின! வாய் கொட்டாவி விட்டது! நள்ளிரவு! போயிங் விமானம் கும்மிருட்டில் பம்பாய் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது! நானும் கொஞ்ச நேரம் தூங்கினேன்!

பம்பாயில் விமானம் பொத்தென்று இறங்கியதும் குருக்களும் சாத்திரிகளும் அமெரிக்க விமானத்தை நோக்கி ஓடினர்! நானோ மறுநாள் மாலை பம்பாயிலிருந்து கல்கத்தா—பாங்காக்—ஆங்காங் போகும் விமானத்தில் ஏறத் தவம் புரியும் பொருட்டுப் பம்பாயில் ஏர் இந்தியாவே ஏற்பாடு செய்திருந்த நட்சத்திர ஓட்டல் ஒன்றுக்கு நகர்ந்தேன்!

# 3

# அதிகாலை ஆங்காங்

'ஏர் இந்தியா'வே ஏற்பாடு செய்திருந்த நட்சத்திர ஓட்டலுக்கு நான் போவதற்குள் விடியற்காலை மணி நான்காகி விட்டது. தனியாளாக என்னுடைய பெட்டிகள் புத்தகக் கட்டுகள் (அன்பளிப்பிற்காக), மருந்துப்பை, சில்லரைச் சாமான்கள்!மூட்டை இவற்றையெல்லாம் நானே-தனியாளாக-முன்பின் பழக்கம் இல்லா நிலையில்-சக்கரத் தள்ளுவண்டியில் வைத்துக் கொண்டு ஒவ்வோரிடமாக 'எங்கே தங்குவது?', 'அதற்கு அனுமதிச் சீட்டு எங்கே வாங்குவது?' 'நட்சத்திர ஓட்டலுக்கு எப்படிப் போவது" என்றெல்லாம் விசாரித்து விசாரித்துச் சாமான்களோடு மாடிக்கும் கீழுக்குமாக அலைந்து விளக்கம் பெறுவதற்குள் படாதபாடு ஆகிவிட்டது. யாரைப் பார்த்தாலும் அச்சம்; ஐயம்; திருட்டுப் பயம்; ஏமாற்றி விடுவார்களோ என்ற கலக்கம். அப்பப்பா! பயணம் போனால் தனியே போகக் கூடாது. அப்படிப் போனாலும் நாமே தூக்கக் கூடிய ஓரிரு கைப்பெட்டிக்கு மேல் எடுத்துச் செல்லக் கூடாது. அந்தப் பெட்டிகளும் அடியில் சிறுசிறு சக்கரம் வைத்தவைகளாக இருக்க வேண்டும். அப்பெட்டிகளில் இருக்கும் கயிறு ஒன்றைப் பிடித்துக் கொண்டே நாட்டுப்புறங்களில் மாடு கன்றுகளை - நகர்ப் புறங்களில் நாய்க்குட்டிகளை - ஏன்பெரிய நாய்களை இழுத்துச் செல்வது போல் இழுத்துச் சென்று விடலாம்.

பயணம் என்ற சொல்லிற்குள்ளேயே கங்காருக் குட்டிகள் போல் 'பணம்', 'பயம்' என்ற சொற்கள் உள்ளன. 'பயம்' என்ற சொல்லுக்கு 'அச்சம்' என்ற

பொருளோடு 'பயன்' என்ற பொருளும் இருத்தல் கருதத் தக்கது. சற்று எழுத்து மாற்றம் செய்தால் பயணம் 'பணயம்' என்றும் ஆகும்!

நான்தான் பெரிய முட்டாள் ஆயிற்றே! என் இனிய எதிரிகள் அடிக்கடி என்னிடம் இரக்கப்பட்டு நடிப்பாக வேனும் சொல்வதுபோல் 'உலக அனுபவம்' இல்லாத வனாயிற்றே! வாழ்க்கையை எதிலும் 'லேசாக' எடுத்துக் கொள்ளாமல் 'கனமாக' எடுத்துக்கொள்பவன் ஆயிற்றே! பஞ்சு மூட்டையில் பலமுறை முட்டிப் 'பயில்வான்' என்று பட்டம் எடுக்கத் தெரியாமல் பாறையில் ஒரு முட்டு முட்டி என் 'பச்சை இரத்தமே என்னைப் பார்த்துச் சிவப்பாய்ச் சிரிப்பதைக் காண்பவன் ஆயிற்றே! ஒரே ஒரு உதாரணம் இப்போதே சொல்வதுதான் சரி. என்னுடைய 55 நாள்-5 நாடுகள் பயணத்தில் நான் பயன்படுத்தியது எல்லாம் 5 வேட்டி 5 சட்டைக்கு மேல் இல்லை. இதுவும் ஆங்காங் கிலும், சைனாவிலும், ஜப்பானிலும்தான்-காரணம் இவை யெல்லாம் ஆசிய நாடுகள்-ஆங்காங்கு ஓரிரு நண்பர் களேனும் இருந்தார்கள் உடன் வர. ஜப்பானை விட்டு-டோக்கியோவை விட்டு ஜூலை 15-ஆம் தேதி புறப் பட்டவன் ஆகஸ்டு எட்டாம் தேதி சென்னை திரும்பும்வரை 23 நாட்கள் ஒரே பாண்டு (Pant) தான்! ஒரே புஷ் ஷர்ட்டுதான்! உங்களால் நம்ப முடிகிறதா? (அந்தப் பாண்ட்டையும் புஷ் ஷர்ட்டையும் ஓராண்டு கழித்து நேற்றுதான் என் மகள் சலவைக்குப் போட்டு வாங்கினாள்). நம்ப முடிந்தாலும் நகைப்பாய் இல்லை?! ஆம். இளமையிலேயே அடியேன் 'பரதேசி' (இரு பொருளிலும்) விருப்பம் உடையவன் ஆயிற்றே. அப் பொழுது மற்றதெல்லாம் வீண்சுமைதானா? சுமையே தான்! சுமை மட்டுமல்ல லண்டனில் மட்டும் ஏர் இந்தி யாவையே சேர்ந்த ஒரு கிழ ஆங்கிலப் பெண் அதிகாரியின் கண்டிப்பால் நூறு ரூபாய் அளவுக்கு அபராதமும் கட்டி

னேன். உங்களுக்கு ஒரு கேள்வி கேட்கத் தோன்றலாம். ஆமாம்! இவ்வளவு நாள் ஒரே பாண்ட் கோட் போட்டால் புழுக்கத்தாலும் புழுதியாலும் அழுக்காகி விடாதா என்று! ஆம். சரியான கேள்விதான், ஆனால் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் நம் நாட்டைப் போல் புழுதி ஏது? புழுக்கம் ஏது? இன்னொரு கேள்வி உங்கட்குக் கேட்கத் தோன்றலாம். 'அப்படியானால் அந்த நாட்டு மக்களெல்லாம் உங்களைப் போல் வாரக் கணக்காக ஒரே ஒரு பாண்ட்டும் புஷ்கோட்டும்தான் போடுவார்களா?' என்று. அந்த நாட்டு மக்களெல்லாம் என்னைப் போல் ஏதோ கொஞ்சம் இருந்தும் பரதேசிகள் இல்லை! இல்லாமலும் பரதேசிகள் இல்லை; நான் ஒரு பழமொழியைச் சற்று மாற்றிச் சொன்னால், பரம்பரையில் ஆண்டி பஞ்சமில்லா விட்டாலும் ஆண்டி. சிலம்புச் செல்வர்தான் அடிக்கடி ஒன்று சொல்வார்; 'வறுமைவேறு; வறுமைப்புத்தி வேறு; வறுமை இருக்கலாம்; வறுமைப்புத்தி கூடாது' என்று.

(சென்ற ஆண்டு 26-ந்தேதி சைனாவில் இருந்தபோது இவரை அடிக்கடி நினைவு கூர்ந்தேன்; என் பொது வாழ்வுத் 'தந்தை' அல்லவா?) நம் நாட்டு வேதாந்தம் அல்லது சமய நம்பிக்கைகளில் ஒரு வகையே செல்வச் சீமானாய் இருந்தாலும் தோற்றத்தில்-தோற்றத்தினும் மன நினைவில் - வாழும் வாழ்க்கையில் - வறியவனாய் வாழவேண்டும் என்றுதானே செப்புகிறது?

இந்து மதத்தினும் பல மடங்கு அதிகமான புராணக் கதைகளையும் கற்பனைகளையும் கொண்ட பௌத்த மதம் தன்னைப் பின்பற்றுபவர்கள் அரசர்களாய் இருந்தாலும் அவ்வப்போது ஆண்டிகளைப் போல வாழ வேண்டும் என்றே வற்புறுத்துகிறதே! சென்ற சில நாட்களுக்கு முன்பு சென்னை மகாபோதி சங்கத்தில் அடியேன் புத்தர் பிறந்த—ஞானம் பெற்ற—மறைந்த— முப்பெருநாளில் பேச அழைக்கப்பட்ட போது அதுவரை காணாத காட்சி

ஒன்று கண்டேனே! மூன்று மாதமே புத்தத்துறவியாக இருந்து முதல் படியாகத் தன்னைச் சோதித்துப் 'பார்க்க'ப் போகும் ஒரு மகன் மொட்டை அடித்து வெள்ளாடை அணிந்து கொண்டு தன் பெற்றோர்களை விழுந்து வணங்கி அவர்கள் கையாலேயே காவி உடைகள் பெற்றார்; சில வினாடிகளில் உள்ளே போய்க் காவி உடை அணிந்து வந்து நின்றதும் அவர்தம் கால்களில் அவர்தம் பெற்றோர்கள் விழுந்து வணங்கினார்களே! (இந்து மதத்திலும் இப்படிப்பட்ட காட்சிகள் இருக்கும்!)

பம்பாய்க்குப் போய்விட்ட என் மனம் மறுபடியும் எங்கெங்கோ எதை எதையோ மேய்ந்து விட்டுச் சென்னைக்கே வந்து விட்டது பார்த்தீர்களா? தொழு(வ) மாட்டுப் புத்தி! அப்படி ஏன் உங்களையே நீங்கள் தாழ்த்திச் சொல்கிறீர்கள் என்கிறீர்களா? எங்கள் ஊரில்-பிறந்த ஊரில்-இரு பழமொழிகள் உண்டு-என் மனைவி அடிக்கடி சொல்லுவார். அவற்றைச் சொல்லாம் என்று நினைக்கிறேன்? 'ரங்கர் ஊரெங்கும் சுத்தினாலும் சீரங்கம்தான் வரனும்; 'ஊரெல்லாம் சுற்றி எங்க ஊர் முக்தி' இப்பழமொழிக்கு வேறு பாடபேதங்களும் இருக்கலாம்.

எப்படியோ ஒரு வகையாக இரந்து இரந்து செய்தி களையும் வழிகளையும் தெரிந்து கொண்டு 'ஏர் இந்தியா' ஏற்பாடு செய்திருந்த நட்சத்திர ஓட்டலுக்குப் போனேன் - இருட்டில். பெட்டிகள், பைகள், புத்தகக் கட்டுகள் ஆகிய வற்றோடு எந்தப்பெட்டிக்குள்ளும் அடக்க முடியாத கனம் நிறைந்த கம்பளிக் கோட்டு ஒன்றையும் குடுகுடுப்பைக் காரன், பூமாட்டுக்காரன் போலச் சுமந்து கொண்டிருந் தேன். எதையும் விட்டுவிடாமல் எப்படியோ எல்லா வற்றையும் எடுத்துக்கொண்டு இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்த நட்சத்திர ஓட்டலுக்குள் நுழைந்தேன். உலகம் உறங்கினும் உறங்கா உவகைமிக்க ஆண்களும்

ஆண்களைவிடப் பெண்களும் அங்கே வேலை செய்து கொண்டிருந்தனர்; இந்திரபோகக் காட்சியாக இருந்தது. எனக்கு உரிய அறையையும் அதன் அழகையும் பெருமை யையும் காட்டுவது போன்ற பெரிய பொன்னிறத் திறவு கோலையும் தந்தார்கள். ஏசி (Air Condition) அறையில் 'ஓசி'யில் தங்குவது போன்ற உணர்வு என்னைக் கிளு கிளுப்பூட்டியது! வாழ்க ஏர் இந்தியா CENTAUR ஓட்டல்!

முன் நாள் இரவு கண் விழித்தமையால் உறக்கம் அழுத்தியது; 5 நட்சத்திர ஓட்டல் ஆதலால் பகல்போல் நிலவு; கற்பனைக்குப் பஞ்சமில்லை. ஒரு நிகழ்ச்சி:- அறைமணி அடித்தது; அறை உறக்கத்தல் கதவைத் திறந்தேன். ஓர் இளம் பெண் ('ஏதாவது வேலை' என்ற பொருளில்) 'any services' என்றாள்/ர். பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்ப்பது போலப் பார்த்தேன்! அசடு வ ழி யு ம் என் முகத்தைப் பார்த்து விட்டு அருவறுப்பாலோ 'இவன் என்ன மாந்திரிகனோ' என்று என் தாடிக்கோலமாகிய தவக்கோலத்தைப் பார்த்து விட்டுப் பயந்தோ பைய (=மெல்ல) நகர்ந்து விட்டாள் அப்பெண். கொஞ்ச நேரம் தூங்கிவிட்டு ஓட்டலை ஒரு முறை சுற்று (Circular) மாடிப் பாதை வழியாகவும் மற்றொரு முறை சுற்றுத்தளப் பாதை வழியாகவும் வலம் வந்து பார்த்தேன்! வட்ட வடிவில் கட்டப் பட்ட ஓட்டல்! மேலேயும் சரி கீழேயும் சரி ஒரு சுற்றுச் சுற்றி விட்டுப் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி வந்து விடலாம். ஆமாம் உலக உருண்டை போலத்தான் அந்த ஓட்டலும்! என் உலகப் பயணத்தை அழகாக நினை வூட்டியது அது! இடையிலேதான் நீச்சல் குளம், அழகு நிலையம், நீராவிக் குளியல் (Steam path) அறை, நகைக் கடை, புத்தகக்கடை, அழகுப் பொருள்கடை, பலநாட்டுப் பலநிறத்துப் பலவகை அழகினரும் உணவு உண்ணும் கூடம், வரவேற்புக் கூடம் எல்லாம்! இதையெல் லாம் பார்க்கும்போது 'எல்லாம் நமக்காகத்தான்!

நம்முடையதுதான்' என்று நினைப்பது என் வழக்கம். அந்தப் போலி நினைப்பில்தான் எவ்வளவு இன்பம்! ஆமாம். இந்த உலகில் இன்னும் காற்றுக்கும் கற்பனைக்கும்தான் யாரும் வரி போடவில்லையே!

ஒரு காலைச் சிற்றுண்டியும் ஒரு நண்பகல் விருந்தும் (lunch) ஏர் இந்தியா இலவசமாகத் தருகிறது—இந்த 'எண்பது நாள்களில் உலகைச் சுற்றி' பயணச்சீட்டிற்கு—அதுவும் உடனே விமானத் தொடர்பு இல்லாத போது—இல்லாத இடத்தில்! நான் அடுத்துப் போக வேண்டிய இடம் ஆங்காங். அதற்கு மறுநாள் மாலைதான் விமானம். இந்தத் தாமதத்தால் கிடைத்த பயன்தான் பம்பாய் நட்சத்திர ஓட்டலில் சில மணிநேர—பாதி இரவு, பாதி பகல்—எல்லாம் பாதி பாதி தான்!—சுகபோகம். ஆமாம் என் போன்றோர் நிலைக்கு இதுவே பெரிய சுகபோகம் அல்லவா?

நட்சத்திர ஓட்டல்களில் நகத்தில் அழுக்குப்படாமல் வாழ—வாழ்ந்து மகிழ—எவ்வளவோ வசதிகள். குடி, கூத்தி எல்லாச் சுகமும் கிடைக்கும். அந்த ஓட்டலில் பல அறைகளில் 'தொந்தரவு செய்யாதீர்கள்?' என்ற பொருளில் 'Please Don't Disturb' என்ற பலகை தொங்க விடப்பட்டிருக்கும். நல்லது, கெட்டது இரண்டுக்கும் தொந்தரவுக் கூடாது அல்லவா? ஓட்டலைச் சுற்றிச் சுற்றி வந்த நான் என் அறைக்குள் இருப்பவற்றை எல்லாம் ஆராய்ந்தேன். தங்குவோரைப் படிக்க— இல்லை—பார்க்கவாவது தூண்டும் பகவத்கீதை, பைபிள் (இதை யெல்லாம் நம் எம். எல். ஏ., எம். பி., அமைச்சர்கள் எத்தனையோ முறை பார்த்திருப்பார்கள்! ஆனால் தமிழக அரசு நடத்தும் ஓட்டல்களிலும் பயணியர் விடுதிகளிலும் பெரிய ஓட்டல்களிலும் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்போடு கூடிய ஒரு புத்தகத்தை வைக்கலாமே. மூவேந்தர்கட்கே எட்டாத எண்ணம் இவர்கட்கு எப்படி

எட்டும்?) சோப்பு, சீப்பு சிறுபொருள்களிலிருந்து குட்டிக் குளிர்பதனப் பெட்டி (Fridge) வரை பலவும் அறையில் நிறைந்திருந்தன. காலையில் கதவடிச் சந்தின் வழி இலவச மாகத் தள்ளப்படும் ஆங்கில நாளேடு! வேண்டும் போது விரும்பிய இசை கேட்கப் பலவழி இசை ஒலி பரப்பு! ஆனால் அனுபவிக்கத்தான் காசும் இல்லை; காலமும் இல்லை; கட்டுக் கழுத்தியும் இல்லையே!

காலைச் சிற்றுண்டியையும் நண்பகல் விருந்தையும் முடித்துக் கொண்டேன் — மிகுந்த எச்சரிக்கையோடு. காரணம் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் ஒரு 'காப்பி' குடித்தாலும் கட்டணம் பத்து ரூபாய்! மாலை ஆறுமணி அளவிலேயே புறப்பட வேண்டிய விமானத்திற்கு வழக்க மான கூடுதல் முன்னெச்சரிக்கையோடு மாலை மூன்று மணிக்கே தயாராகி விட்டேன்! தங்கியிருந்த அறையில் எந்த எந்த உதவிக்கு எந்த எந்தத் தொலைபேசி எண்ணுக்குக் கூப்பிட வேண்டும் என்ற அழகான குறிப்பு அட்டை இருந்தது. என்னிடம் தனியே இருந்த சில புத்தகக் கட்டுகளை ஒன்றாகக் கட்டி வாங்கிக் கொள்ள லாம் என்று 'சரக்குக் கட்ட' (Packaga) உதவும் ஆளை வரச்செய்யும் எண்ணைச் சுழற்றினேன். உடனே பெரிய ஆபீசர் போன்ற ஒருவர் கையில் அழகான சரக்கு கட்டும் தாள்களுடன் பந்தாகச் சுற்றிய நாடாக் கயிற்றுடன் வந்தார். என் புத்தகங்களை ஒன்றாகக் கட்டித்தர வேண்டி னேன். அவர் உடனே 'O. K' என்று சிலமணித் துளிகளில் மிக அழகாகப் பொட்டணம் செய்து தந்தார். அதுவுமேகூட எனக்கு மிகப்பெரிய அழகாகவும் மகிழ்வாகவும் இருந்தது.

பம்பாயில் இரண்டு விதமான நிலையங்கள் உண்டு. ஒன்று உள்நாட்டுப் பயணத்திற்கு; மற்றொன்று வெளி நாட்டுப் பயணத்திற்கு. ஓட்டலிலிருந்து மாறும் (Transit) விமானப் பயணிகளை இலவசமாக ஏற்றிச் செல்லும் பேருந்தில் **வெளிநாட்டுப் பயணத்திற்காக** (அதுவரை உள் நாட்டுப் பயணம்தானே!) விமான நிலையம் போய்ச்

சேர்ந்தேன். அங்கே இருந்த சுங்கவரி இல்லா மது-ஆடம் பரப் பொருள்களை எல்லாம் விற்கும் கடைகளை எட்டி யிருந்தே பார்த்தேன். விமானம் புறப்படும் நேரம் நெருங்க வும் வழக்கம் போலப் பயணச் சீட்டுகளைக் காட்டி விமானம் ஏறும் அட்டைகளை (Boarding Cards) வாங்கிக் கொண் டேன்; பளு சாமன்களுக்கு உரிய Luggage அட்டைகளை யும் வாங்கிக் கொண்டேன். ஆமாம், ஒரு சிறு கைப் பெட்டியைத் தவிர பாரமான சாமான்களை விமானம் தன் பெருவயிற்றில் தூக்கிக் கொண்டு வரத் தனியே கொடுத்து விட வேண்டும். ஆட்களையும், சாமான்களையும் சேர்த்து ஒரு விமானம் சுமக்கக் கூடிய பாரம் இதற்குமேல் இருக்கக் கூடாது என்ற கணக்கும் இருக்கிறது! ஆம். அளவறி தல்தானே பேரறம்!

சென்னையில் குருக்கள்—அடிக்கடி அயல்நாடுகட்குக் கும்பாபிஷேகத்துக்குப் போகும் குருக்கள்—காட்டிய வழியை மறவாமல், விமானம் ஏறும் டிக்கட்டுகளை வழங்கும் பெண்மணியிடம் முதலில் போய் 'அம்மா, கால் வலி அதிகம்; விமானத்தின் நடுவில் இருக்கும் கதவுப் பாதையை ஒட்டிய வரிசையில் சன்னல் ஓரம் உட்கார டிக்கட் கொடுங்கள்' என்று கேட்டு வாங்கிக் கொண்டேன். இது எனக்கு எப்போதும் வழக்கம்; பகலோ இரவோ சன்னல் ஓரமாக உட்காருவதையே— அதுவும் ஆவரோ, சின்ன போயிங் (ஏர் பஸ் அல்லாதது) விமானங்களில் இடம் அல்லது வலப்புறம் உள்ள கடைசி வரிசை சன்னல் ஓரச் சீட்டுகளையே யான் விரும்புவது வழக்கம். காரணம்?............நேரில் மட்டுமே சொல்வேன்!

இதற்கிடையில் ஒவ்வொரு சூழலிலும் ஒவ்வொருவரிடம் (பெரிதும் அயலாரிடம்) நட்புக் கொண்டு புதிய புதிய செய்திகளைத் தெரிந்து கொள்ளும் பழக்கம் கொண்ட நான் அயல் நாட்டவராகக் காணப்பட்ட ஒருவரிடம் பேச்சுக் கொடுத்தேன். பாவம் அவர் ஒரு பாலத்தீனியர்

என நினைக்கிறேன். அவர் முதல் நாளே டெல்லி வந்து விட்டாராம்; பாங்காங் போகிறாராம். அங்கே அவர் தன் நாட்டுக்கு வந்திருந்தபோது காதலித்துக் கட்டிக் கொண்ட மனைவி இருக்கிறாராம்; ஒரு குழந்தையும் இருக்கிறதாம்! முன் இரவு டில்லி விமான நிலையத்தை விட்டு வெளியேறவும் அவரைச் சுங்க அதிகாரிகள் அனும திக்கவில்லையாம்; எவ்வளவோ கெஞ்சியும் அதிகாரிகள் இரங்கவில்லையாம்; அவரும் அயல் நாட்டுப் பயணிகள் பகுதியை விட்டு இறங்கவில்லையாம்; குளிக்க வில்லை யாம்; குடிக்கவில்லையாம். மனைவியைக் காணப் போகி றாராம்! மனைவியை இழந்த நானோ எவரெவரையோ எங்கெங்கேயோ காணப் புறப்படுகிறேன்.

பம்பாயில் விமான நிலையத்தில் அங்கும் இங்கும் எங்கும் நகர முடியவில்லை. சாமான்களைப் பார்த்துக் கொள்வதே பெரும்பாடாக இருந்தது. இரண்டாவது; பார்த்தால் எதையும் வாங்குவதற்குப் பணமும் இல்லை. இருந்த பணத்தைச் செலவழிக்காமல் பார்த்துக் கொள் வதே பெரும்பொறுப்பாக இருந்தது.

விமானம் புறப்படும் நேரம் நெருங்கியது. இதை ஒட்டி ஏற்பட்ட இரு அனுபவங்கள்—உலகப் பயணம் முழுதும் தொடர்ந்து வந்த—தொடர்ந்திருந்த இரு அனு பவங்கள் இங்கே நினைவுகூரத்தக்கன. ஒன்று சென்னையி லும் கூட இல்லாத—பம்பாய் முதலிய பெரிய விமான நிலையங்களில் இருக்கும் இரு வசதிகள். ஒன்று, தானே உயரும் மாடிப்படி (Escalcater). இது முப்பது நாற்பது படிகள் கொண்ட வரிசை; மெல்ல மேலே நகர்ந்து கொண்டே இருக்கிறது. ஓரத்தில் இருக்கும் கைப்பிடியை லேசாகத் தொட்டுக் கொண்டு நிலைக்குத்தாக—எச்சரிக்கை யாக மெல்ல நகரும் முதற் படியில் நின்று கொண்டால் சில நொடிகளில் மேல்தளத்துக்குக் கொண்டுபோய் விட்டு விடும். கொஞ்சம் கவனமில்லாமல் நின்றால் அல்லது கைப்

பிடியைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்தால் நகரும் முதற் படியில் கால் வைத்ததும் சமநிலை (Balance) இழந்து விழ நேரிடும் அல்லது மேல்தளத்தில் நகரும்படித் தொடும் போது தளத்தில் கால் ஊன்றத் தெரியா விட்டால் கால் விரல்கள் இடித்துக் கொள்ள நேரிடும். நான்தான் பெரிய பெரிய ஆபத்துக்களில் எல்லாம் தப்பி வந்துள்ளேனே! அதனால் கொஞ்சம் தள்ளாடினாலும் சமாளித்துக் கொண்டேன்.

விமானத்தில்—பெரிய வீடு போன்ற ஏர் இந்தியா விமானத்தில் ஆம் என் நெடுநாள் ஆசைக் கனவாகிய ''ஜம்போ''வில் அதுவும் 'ராஜேந்திர சோழனில்' நட்ட நடுப்பகுதியில்—நெருக்கடி நேரக் கதவு(த்திறப்பு) அருகில் இடப்புறம் முதல் வரிசை சன்னல் ஓர இருக்கையில் உட்கார்ந்து கொண்டேன். ராஜேந்திர சோழன் என்ற பெயரே என்னையே 'ராஜேந்திர சோழன்' ஆக்கியது. ஊடே ஒரு ஐயமும். 'ராஜராஜ சோழன்' என்ற பெயர் ஏன் இல்லை? தலைவர் கலைஞர் போற்றினார் என்பதாலோ? விமானம் பம்பாயில் இருந்து கல்கத்தாவை நோக்கிப் பறக்கத் தொடங்கியது. ஆம்! இந்தியாவின் மேற்கு நுழைவாயிலில் (Gateway of India) இருந்து கிழக்கு நுழைவாயிலாகிய கல்கத்தாவை நோக்கி ஒரே நெட்டாகப் பறந்தது விமானம். விமானத்தில்—பெரிய விமானம்—வீடு போன்ற விமானம்—விமானப் பேருந்து AIR BUS விடப் பெரிய விமானப் பெரு வீடு அல்லது இரட்டைப் பேருந்து விமானம்—அல்லவா? மது, மங்கை—மயக்கம்—திரைப்படம் எல்லாவற்றிற்கும் இடம் உண்டு! புதிய சூழல்—உறக்கம் வரவில்லை; அயர்வு—உறக்கமும் வந்தது! ஏர் இந்தியா விமானத்தில் ஒரு சிறந்த வசதி உண்டு. காதில் பொருத்திய மெல்லிய தொலைபேசி மென் குழாய்கள் வழியாகவே நான்கு வகை இசைகளை நம் வானொலிப் பெட்டியில் முள்ளை நகர்த்தினால் கேட்பது போலத் திருகைத் திருகத்

திருகக் கேட்கலாம். பலவகை (முக்கியமாக ஐரோப்பா, வடஇந்தியா) இசைகளைச் சிலபோதும் தமிழிசையைப் பலபோதும் கேட்டுக் கொண்டும் கேளாதே தூங்கிக் கொண்டும் இருந்தேன்.

கல்கத்தாவை அடுத்து பாங்காங்கில் விமானம் இறங்கியது; வெளிவிளக்குகள் மட்டும் நகரத்தை அடையாளம் காட்டின. எவ்வளவோ காலம் பார்க்க விரும்பியும்—விசா இருந்தும்—உடனுக்குடன் விமான வசதி இல்லாததால் இறங்கிப் பார்க்க முடியவில்லையே என்று ஏங்கினேன். ஏக்கத்திலேயே தூக்கம் அழுத்தியது. அதிகாலை—பாவேந்தர் பாடிய பின்வரும் ஒப்பற்ற உவமையை நினைவு படுத்தும் வகையில் —

**தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த**
**கலப்பென இருந்ததன் கட்டுக் குலைந்தது**
**புலந்திடப் போகும் பொழுது**

அரையுறக்கத்தில் இருந்த என் காதில் கருமாரி அம்மன் பாட்டும் கலைமகளாம் எம்.எஸ்ஸின் சுப்ரபாதமும் ஒலித்துக்கொண்டிருந்தன. அரையுறக்கத்தில் இருந்த யான் புதையல் கண்டவன் போல் விழித்துக் கொண்டேன். ஆ! ஆ! என்ன அழகான காட்சி! இயற்கையும் செயற்கையும்—இணைந்து இன்புறுத்தும் காட்சி! செயற்கையும் இயற்கையின் எட்டத்து உறவுதானே! தீவு தீவுகளாகத் தெரியும் காட்சி! தென்னை, பனை, கமுகு போல் உயர்ந்து உயர்ந்து தெரியும் கோபுர உச்சிக் கட்டடங்கள்! பார்த்தாலே ஆசிய நாகரிகம் அகன்று அமெரிக்க நாகரிகம் உதயமாகும் உள்ளங்கவர் காட்சி! ஓர் அரை மணிநேர அளவுக்கு ஆகாய விமானத்திலிருந்தே ஆங்காங்கை மெல்ல மெல்லப் பார்த்து மகிழும் வாய்ப்பான வளமான காட்சி! வாழ்க்கைப் பேறெல்லாம் வடிவெடுத்து வந்து விட்டது போன்ற வண்ணம்! எண்ணம்! அடிக்கடி அட்லாஸ் பார்த்து

விமானம் போகும் திசை அறிந்து இடப்புறச் சன்னல் ஓரச் சீட்டை வாங்கிய என்னை நான் மெச்சினேன்; உச்சி குளிர்ந்தேன். யான் மதிக்கும் பாரதி, பாவேந்தர் முதலான தமிழ்க் கவிஞர்கள்—ஏன்? உலகத்து உள்ள உள்ளங்கள் எல்லாம் என்னிரு விழிகளை அவர்கள் விழிகளாகக் கொண்டு பார்க்கக் கூடாதா என்று அவாவினேன். எந்த அவாவும் கூடாது என்ற கருத்தை அறிந்தவன்தான்! ஆயினும் என் தாயுள்ளத்தில் தன்னல மலட்டுத்தனத்திற்கு இடமேது?

---

பிற்குறிப்பு: *சரியாக ஓராண்டு நிறைவுக் கட்டுரை போல் இக்கட்டுரை 14/15—6—83 ஆம் நாள் எழுதப்பெற்றது.*

# 4

# நால் - மூ - நீர் நாடு

உலகத்து நாடுகள் நிலப்பரப்புகள் ஒவ்வொன்று றுக்கும் நாற்பால் எல்லைகள் இருத்தல் இயல்பு. ஒரு புறம் மட்டுமே நீர்ப்பரப்பு; இருபுறங்களில் நீர்ப்பரப்பு; முப்புறங் களில் நீர்ப்பரப்பு; நாற்புறமும் நீர்ப்பரப்பு என நால்வகை நில—நீர் நிலைகள் உண்டு. இலங்கை போல் நாற்பாலும் நீர் சூழ்ந்த நிலத்தைத் தீவு என்றும் இந்தியா போல் முப்பால் நீர் சூழ்ந்த நிலத்தைத் தீபகற்பம் என்றும் வழங்கு வர். இவற்றை முறையே நால்நீர் நிலம் என்றும் மூநீர் நிலம் என்றும் தமிழ்ப்படுத்தலாம். அந்நிலம் தனி நாடானால் நாடெனவே நவிலலாம்.

15 – 6—82 அதிகாலை நான் கண்ட ஆங்காங் தீவும் இருநீர் நாடாகிய சீனாவின் கௌலூன் மூநீர் நிலத்தின் ஒரு சிறு பகுதியும் சேர்ந்த நாடுதான் — பிரிட்டிஷ் காலனி தான்—ஆங்காங். 1997-இல் அங்கே பிரிட்டிஷ் காலனி ஆதிக்கம் ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தப்படி ஒழியும். அப்போது ஆங்காங் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி இப்போது இங்கிலாந்துக்கும் சீனாவுக்கும் பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. அண்மையில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாச்சர் இது குறித்துப் பீஜிங் (பீகிங்) சென்றிருந்தது நாளிதழ் படிப்பவர்கட்கும் வானொலி கேட்பவர்கட்கும் நன்கு தெரியும் (இவை இரண்டும் அறிவு வளர்ச்சிக்கும் இன்றியமையாதன என்பதற்காகவும் இக் குறிப்பு ஈண்டுப் பொறிக்கப்படுகிறது).

இருபதாம் நூற்றாண்டின் இமயத் தமிழ் வெற்றி கலைக்களஞ்சியம். அதில் '**ஹாங்காங்**' என்ற தலைப்பில் உள்ள குறிப்பு வருமாறு :

'இங்கிலாந்தின் நேரடி ஆட்சியின் கீழுள்ள ஒரு குடியேற்ற நாடு. இதில் ஹாங்காங் தீவும் சீனாவில் இத்தீவிற்கு எதிராகவுள்ள கௌலூன் (Kowloon) தீபகற்பமும் 355 ச. மைல் பரப்புள்ள புதிய நிலப்பகுதிகளும் (New Territories), பல சிறிய தீவுகளும் அடங்கும். மொத்தப் பரப்பு 391 ச. மைல். ஹாங்காங் தீவு மட்டும் 32 ச. மைல் பரப்புள்ளது. இங்குள்ள துறைமுகம் மிகவும் சிறந்தது; இங்கிருந்து உலகின் கண்ணுள்ள எல்லாவிடங்களுக்கும் கப்பல்கள் செல்கின்றன. இது தூரக் கிழக்குப் (Far East) பகுதியிலுள்ள சிறந்த வாணிகத் தலங்களுள் ஒன்றாகும். புதிய நிலப்பகுதிகளிலும் பல வாணிக மையங்கள் உள்ளன. நூற்பு எந்திரங்களும், இரும்பு, ரப்பர், எனாமல் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. மீன் பிடித்தல், கப்பல் கட்டுதல், ஆடை தயாரித்தல் முதலிய தொழில்களும் நடைபெறுகின்றன. தலைநகர் விக்டோரியா. மக்கள் 17,50,000 (1940).

1839-இல் பிரிட்டிஷார் இத்தீவைக் கைப்பற்றிக் கொண்டனர். 1841-இல் சீனர் இதை அவர்களுக்கே கொடுத்ததுமல்லாமல் அடுத்தவாண்டில் செய்து கொண்ட நான்கிங் உடன்படிக்கையின் மூலம் அதனை உறுதியும் செய்தனர். கௌலூன் தீபகற்பம் 1860-இல் ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டது. புதிய நிலப்பகுதிகள் 1898-இல் ஆங்கிலேயருக்கு 99 ஆண்டுக்கால அனுபோக உரிமையுடன் வழங்கப்பட்டன. 1941 லிருந்து 1945 வரை இப்பகுதிகள் ஜப்பானியர் வசமிருந்தன. உலகப் போரில் ஜப்பானியர் தோல்வியுற்றதும், இப்பகுதிகள் ஆங்கிலேயர் வசமாயின'.

தமிழ்க் கலைக்களஞ்சியத்தினும் பன்மடங்கு விரிவுடையது Encyclopaedia Britannica—Macropaedia. இதன் சாறாக உள்ள தொகுதிகள் Encyclopaedia—வின் Micropaedia. இவ்விரு தொகுதிகளில் முன்னதில் நால்—மூநீர் நாடு ஆங்காங் என்பதை அழகுறக் காட்டும் ஒளிப் படம் ஒன்றும் ஆங்காங் நிலப்பகுதியை விளக்கும் நிலப்படம்

ஒன்றும் உள்ளது. பின்னதில் ஆங்காங் பிரிட்டிஷ் காலனி என்பதைக் காட்டும் கொடியும் கிழக்காசியாவில் அது எங்கே உள்ளது என்பதைக் காட்டும் நிலப்படக் குறிப்பும் உள்ளன. ஆங்காங் பற்றி அழகிய வண்ணப் படங்கள் நிறைந்த புத்தகங்கள் உண்டு. அவை ஆங்காங்கே நேரில் காணாதவருக்கும் ஓரளவு ஆங்காங் அழகைக் 'காட்டும். என்ன இருந்தாலும் கண்ணுக்குக் கண்ணா—நேருக்கு நேராகப் பார்ப்பது தனி இன்பம்தான். அதற்கு நிகர் ஏதும் இல்லை! மேற்குறித்த இரு கலைக்களஞ்சியங்கள் தரும் குறிப்புகளுள் மிக மிக முக்கியமானது, ஆங்காங்கில் வாழும் மக்களுள் 99% சீனர்கள் என்பதே. அடுத்த முக்கிய குறிப்பு மேற்குறித்த கிழக்காசியப் பகுதியிலிருக்கும் சீனாவின் தென் பகுதியில் ஆங்காங்குக்கு எதிராக வடக்கே இருக்கும் கௌலூன் மூநீர்ப் பகுதியின் தென் முனையிலிருந்து காண்டோன் செல்லும் இருப்புப் பாதையில் சீனாவின் எல்லைப்புற ஊராகிய லோவூவை எட்ட 28 மைல் ஆகிறது. இந்த எல்லைப் புறத்தில் பயணிகள் 1949-இலிருந்து 300 மூவடி தூரம் நடக்க வேண்டும்-சீனாவுக்குள் நுழைய—இதில் எவ்வித இடர்ப்பாடும் இல்லாதவாறு வசதிகள் உள்ளன. சீனாவின் தென் வாயிலாக உள்ள ஆங்காங்கின் எதிர்காலம் 1997—ற்கு அப்புறம்தான் தெரியும். சீனா ஆங்காங்கை எப்படிப் பயன்படுத்த நினைக்கிறதோ அப்படி அது அமையும். சீன மேலாட்சியில் ஆங்காங் உள்ளாட்சி உடையதாக அமையுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

இனி, குடுகுடுப்பைக்காரன் போல் கோட்டும் வேட்டியும் அணிந்து கொண்டு பெட்டிகளுடனும் பைகளுடனும் ஆங்காங் விமான நிலையத்தில் இறங்கிய என்னைச் சுங்க அதிகாரிகள் மேலும் கீழும் பார்த்து ஏனோ வெளியே விடாமல் தடுத்து விட்டார்கள். என்னுடன் ஒரு பாகிஸ்தானியையும் தடுத்து விட்டார்கள். பின்னர்தான் எல்லா இந்தியர்களையும் பாகிஸ்தானியர்களையும் சுங்க

அதிகாரிகள் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன். முக்கிய காரணம், ஆங்காங்கில் பிறந்து குடியுரிமை பெற்றவர்கள் தவிர பிற நாட்டார் ஆங்காங்கில் குடி புகுந்து அந்தக் குறை நாட்டின் (Colony) குறைகளை/நெருக்கடிகளை மிகுதியாக்கி விடக் கூடாது என்ற அச்சம்தான். இது உலகெங்கும்—வளம் கொழிக்கும் நாடுகளிலும் உள்ளதுதான்.

சுங்க அதிகாரி என்னைத் தடுத்து 'நில்லுங்கள்; அங்கே சென்று அமருங்கள்; நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்' என்றார். அரைமணிக்கு மேல் காத்திருந்தேன். என் உள்ளம் என்னவெல்லாமோ எண்ணியது. 'என்ன செய்வார்களோ ? திருப்பி அனுப்பி விடுவார்களோ ? சிறையில் தள்ளுவார்களோ ?' என்றெல்லாம் நினைத்தேன்—கலங்கவில்லை. காரணம் நான்தான் துணிந்து விட்டேனே ! 'சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் எம்மாத்திரம் ?' எந்த அனுபவத்தையும் ஏற்பதே இன்பம்.

ஆங்காங் விமான நிலையம் மிகத் தூய்மையாக இருந்தது. விமானத்தில் வந்தவர்கள் எல்லாம் போய் விட்டார்கள். நானும் அந்தப் பாகிஸ்தானி நண்பரும் (!) (ஆம் ! சூழ்நிலைதானே நட்பைத் தோற்றுவிக்கிறது (!) தனியே திருக்கழுக்குன்றம் பறவைகள் போல் உட்கார்ந்திருந்தோம். 'ஏன் நம்மை அனுமதிக்கவில்லை ?' என்று அவரிடம் கேட்டேன். 'தெரியவில்லையோ ?' என்றார், திகைப்புடன்-நகைப்புடன் ! அரைமணி கழித்து ஒரு இளம் சீனப்பெண் (பிலிப்பைன் பெண்ணாகவும் இருக்கலாம். காரணம் ஆங்காங்கில் ஆயிரக்கணக்கான பிலிப்பைன் மக்கள் இருக்கிறார்கள். துல்லியமாக வேறுபாடு காண முடியவில்லை!) என்னிடம் வந்து, அழகிய மரத்தடுப்புகளால் (?) ஆகிய அறைக்குள் அழைத்துச் சென்று அமரச் செய்தார். என் கடவு அட்டை (Pass port)-ஐக் கையில் வைத்துக் கொண்டார். விசாரணை தொடங்கியது, சரளமான ஆங்கிலத்தில்.

*அவர் :* **உங்கள் பெயர் என்ன ?**
*நான் : டாக்டர் என். சஞ்சீவி*

**நீங்கள் என்ன செய்கிறீர்கள் ?**
பேராசிரியன் (Professor)

**எங்கே ?**
*சென்னைப் பல்கலைக்கழகம்*

**எந்தப் பொருளில்?**
*தமிழில்*

**தமிழா? அது என்ன ?**
*தமிழ் ஒரு பழைய மொழி*

**யார் பேசுகிறார்கள் ?**
*தமிழ் மக்கள்*

**எவ்வளவு பேர் ?**
*ஆறு கோடிக்கு மேல்*

**அவ்வளவு பேரா ?**
*ஆமாம்*

**எங்கே இருக்கிறார்கள் ?**
*தமிழ் நாட்டில்-இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில்-இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மருஷியஸ், தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களில்.*

**இங்கெல்லாமா?**
*ஆமாம்*

**நான் கேள்விப்பட்டதே இல்லையே!**
*(நாணத்தை அடக்கிக் கொண்டு) நான் சொல்வது உண்மைதான் அம்மா!*

**ஆங்காங்கில் தமிழர் இருக்கிறார்களா?**
*இருக்கிறார்கள் அம்மா! தமிழ்ச் சங்கம் கூட ஒன்று இருக்கிறது!*

**உங்களுக்கு எப்படித் தெரியும் ?**
*கேள்விப் பட்டிருக்கிறேன்! வரும் ஜூலை 4-ஆம் தேதி ஆங்காங்கில் தமிழ்ச்சங்கத்தில் பாரதி விழா! நானும் பேசுகிறேன்.*

**இன்னும் யார் பேசுகிறார்கள் ?**
*தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சர்!*

**அப்படியா? நான் இந்தி, உருது, சமஸ்கிருதம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். தமிழ்-தமிழர் என்றே கேள்விப்பட்டது இல்லையே!**

*இப்பொது நான் சொல்கிறேன் அம்மா! நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்! நம்புங்கள்.*

**தமிழ் வேறு; சமஸ்கிருதம் வேறா?**
*ஆமாம் அம்மா!*

**எப்படி?**
*முக்கிய வேறுபாடு சமஸ்கிருதம் மக்களால் பேசப் படாத ஏட்டு மொழி; தமிழ் கோடிக் கணக்கான மக்களால் பேசப்படும் மொழி.*

**இந்திக்கும் தமிழுக்கும் என்ன வேறுபாடு ?**
*இந்தி சில நூற்றாண்டு வரலாறே உடைய மொழி; தமிழ் பல நூற்றாண்டுகள்-கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றி வளர்ந்து வளமும் வனப்பும் பெற்றமொழி.*

**சரி. நீங்கள் எதற்காக ஆங்காங் வந்துள்ளீர்கள்?**
*சீன அரசு தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சர் தலைமையில் ஐந்து அறிஞர்கள் கொண்ட ஒரு கல்விக் குழுவை அழைத்துள்ளது. அக்குழுவில் நானும் ஒருவன் !*

**எதற்காக அந்த அழைப்பு ?**
*நட்புறவுக்காக.*

**சீனாவில் தமிழர் இருக்கிறார்களா ?**

*சிலர் அலுவல் பார்க்கவும் கல்வி கற்கவும் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். பீகிங் வானொலி தமிழ் ஒலிப்பரப்புச் செய்கிறது. அங்குள்ள தென் கிழக்கு ஆசிய ஆய்வு நிலையத்தில் தமிழாய்வும் செய்ய முற்பட்டுள்ளார்கள்.*

**அப்படியா ? அங்கே போய் நீங்கள் என்ன செய்வீர்கள் ?**
*முதலில் சீனாவை எவ்வளவு நன்றாகத் தெரிந்து கொள்ள முடியுமோ அவ்வளவு நன்றாகத் தெரிந்து கொள்வேன்; தமிழார்வம் உடையவர்க்குத் தமிழ் பற்றிய செய்திகளைத் தெரிவிப்பேன்.*

**சீனத்திற்கும் தமிழுக்கும் தமிழருக்கும் என்ன உறவு ?**
*வரலாற்றுத் தொடர்புதான் ! பண்பாட்டுத் தொடர்பு தான். வேறு எந்த இந்திய மொழிகளிலும் இல்லா அளவுக்குத் தமிழ் மொழியில் சீனத் தொடர்புடைய சொற்கள் உண்டு. வேறு எந்த நாட்டோடும் தொடர்புடைய தமிழ்ச் சொற்கள் அவ்வளவுக்கு இல்லை ! இது பற்றி நான் ஒரு பட்டியல் தயாரித்துக் கட்டுரையே எழுதியுள்ளேன்.*

**சான்றுகள் சில சொல்லுங்கள்**
*சீன அவரை, சீனக்கிளி, சீன வெடி ......................*

**போதும்; போதும்; நீங்கள் பெரிய ஆராய்ச்சியாளர்தான் ! நீங்கள் என்ன சொல்லித் தருகிறீர்கள் ?**
*தமிழ்*

**ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் ?**
*ஒரு மணி, இரண்டு மணி*

**புத்தகங்கள் எழுதியிருக்கிறீர்களா ?**
*ஆம். 16 புத்தகங்கள்*

**கட்டுரைகள் ?**
*நூற்றுக்கு மேல் !*

**சரி, நீங்கள் ஆங்காங்கில் எங்கே தங்குவீர்கள் ? எவ்வளவு நாள் தங்குவீர்கள் ?**
*சைனா கட்டடம் (China Building) என்று ஒன்று ஆங்காங்கில் இருக்கிறது அல்லவா ?*

**ஆமாம்**
*அங்கே ஓமன் பாங்கில் தமிழ் நண்பர் இருக்கிறார் ! அவரோடு இப்போது இரண்டு நாள் இருப்பேன். ஏற்கெனவே சீனா செல்லும் குழுவில் இடம் பெற்றிருக்கும் என் நண்பர்கள் மூவர் நேற்றிரவே கோலாலம்பூர் வழியாக ஆங்காங் வந்திருப்பார்கள். அவர்களுடன் இரண்டு நாள் கழித்துச் சீனா போய் விடுவேன். மறுபடி ஜூலை 2-ஆம் தேதி திரும்பவும் ஆங்காங் வருவேன். 4-ஆம் தேதி ஆங்காங் தமிழ்ச் சங்கத்தில் பாரதி விழா. அதில் நானும் தமிழ் நாடு கல்வி அமைச்சரும் பேசுவோம். பின்பு ஜூலை 7-ஆம் தேதி இங்கிருந்து டோக்கியோவுக்குப் போய் அங்குள்ள பல்கலைக் கழகத்தில் தமிழ் பற்றி விரிவுரைகள் செய்வேன். அப்புறம் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிற்குச் சென்றுவிட்டு இந்தியா திரும்புவேன்.*

**என்ன இவ்வளவு பெரிய பயணமா ? நீங்களா ? தனியாகவா ?**
*ஆமாம்.*

**நீங்கள் என்ன மதம் ?**
*இந்து.*

**இந்து மதத்திற்கும் புத்த மதத்திற்கும் அடிப்படை வேறுபாடு என்ன ?**
*இந்து மதம் கடவுளை நம்புகிறது; புத்த மதத்தில் அந்த நம்பிக்கை இல்லை.*

**சரி, சீனா கட்டடத்தில் தமிழர் ஒருவர் இருக்கிறார் என்கிறீர்களே ! அவர் குடும்பத்துடன் இருக்கிறாரா ?**
*ஆமாம்.*

**என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? சைனா பில்டிங் எனக்குத் தெரியும். அங்கு யாரும் குடும்பத்துடன் தங்குவதில்லையே !**

*அம்மா! நான் ஆங்காங்குக்குப் புதியவன். இதோ அவர் வேலை பார்க்கும் இடத்தின் முகவரியும் தொலைபேசி எண்ணும் இருக்கிறது. இந்த எண்ணுக்குத் தொலைபேசி செய்து அவரிடம் பேசிய பின்தான் எனக்கு மற்ற விவரங்கள் தெரியும்.*

**உம். சீனா போய், ஜப்பான் போய், அமெரிக்கா போய், ஐரோப்பிய நாடுகட்குப் போய் இந்தியாவுக்குத் திரும்பிப் போவதாகச் சொல்கிறீர்களே அதற்கெல்லாம் பணம் இருக்கிறதா ?**

*எங்கள் இந்திய அரசு அனுமதிக்கும் அந்நியச் செலவாணிதான் என்னிடம் இருக்கிறது.*

**அது எவ்வளவு ?**

*200 டாலர்*

**இந்தப் பணத்தில் நீங்கள் என்ன செய்ய முடியும் ?**

*ஏற்கனவே விமானச் சலுகைச் சீட்டு வாங்கி விட்டேன். அதன்படி எண்பது நாள்களுக்குள் இந்த உலகை ஒரு சுற்று சுற்றலாம். சீன அரசின் விருந்தினராகச் செல்வதால் ஒரு சல்லிக்காசும் செலவில்லை. மற்ற இடங்களில் போதுமான நண்பர்கள் இருக்கிறார்கள். உணவுக்கும் உறையுளுக்கும் இடர் இல்லை.*

**சரி, சீன அரசு அழைத்ததற்கான ஆதாரத்தைக் காட்டுங்கள்.**

*(சீன அரசு அழைத்த அழைப்பையும் அதை ஏற்று இந்திய அரசு தந்த இசைவுக்கு உரிய ஆணையையும் காட்டினேன்.)*

**சரி, இருங்கள் இதைப் படம் எடுத்துக்கொண்டு முடிவு சொல்கிறேன்.**

சீனப்பெண்மணி சிலமணித்துளிகளில் படம் எடுத்துக் கொண்டு என் மூலப் பிரதியை என்னிடமே தந்துவிட்டு, 'இனி நீங்கள் போகலாம்' என்றார். சற்றொப்ப ஒரு மணி நேரத்திற்கு என்னை விசாரணை செய்த அந்தச் சீனப் பெண்மணியின் முகத்தில் ஒருவித மெய்ப்பாடும் இல்லை. அனுமதி கிடைத்த மகிழ்ச்சியில் / தைரியத்தில் அந்தப் பெண்மணியைப் பல கேள்விகள் கேட்க விரும்பினேன். பொதுவாகவே இத்தகைய ஆய்வுப் பயித்தியம் எனக்கு உண்டு. இரவெல்லாம் சரியாகத் தூங்காத அயர்வாலும் சரக்குக் கூடத்தில் வந்திருக்கக் கூடிய பெட்டிகளை எடுத்துக் கொண்டு ஆங்காங்குள் புகுந்து கோலாலம்பூர் வழியே வந்திருக்கக் கூடிய தோழர்கள் திருவாளர்கள் நாகநாதன், சீனிவாசன், நடராசன் ஆகியோர்களைச் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வத் துடிப்பாலும் சீனப் பெண்மணியை ஒரே ஒரு கேள்வி கேட்க மட்டுமே (மட்டுமேனும்) நேரம் இருந்தது ; கேட்டேன்.

என்னை ஏன் இவ்வளவு நேரம் விசாரித்தீர்கள் ?

**நீங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர் அல்லவா ? அதனால் தான் !**

சீனப் பெண்ணின் பேச்சுத்திறன் என்னை ஒரு சில வினாடிகள் மூச்சுத்திறன் அற்றவன் ஆக்கியது. மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் 'நன்றி' என்று நகர்ந்தேன்.

5

# மறைக்காடர் குடும்ப மாண்பு

ஆங்காங் விமான நிலையத்தில் அந்த ஆரணங்கு நடத்திய விசாரணை முடிந்ததும் 'வெற்றி வீரன்' போலப் பயணிகளின் சரக்குகள் (luggages) இறக்கி வைக்கப்படும் இடத்துக்கு விரைந்தேன். அந்த இடம் வெறிச்சிட்டுக் கிடந்தது ; திகில் அடைந்தேன். இக்கட்டுரையின் வாசகர் களில் சிலர் விமான நிலையத்தை—அதன் பல்வேறு பிரிவு களைப் பார்க்காமல் இருத்தல் கூடும். அதனால் சரக்குகள் இறக்கி வைக்கப்படும் இடம் குறித்துச் சில சொற்கள் : விமானத்தில்—அதன் அடிவயிற்றில் சுமந்து வரும்—பல்வகைப் பெட்டி, படுக்கை, தட்டுமுட்டுச் சாமான்கள் விமானம் தரை இறங்கிய உடனே விமானத் திடலுக் குள்ளேயே காத்திருக்கும் சரக்கு வண்டிகளில் கொண்டு வரப்படும். U வடிமாக இருக்கும் இழுவையில் அவை வைக்கப்படும். U வடிவிலேயே அவை சுழலும். பயணிகள் தங்கள் பொருள்கள் வந்ததும் அவரவர் களும் தாவிப் பிடித்துப் பக்கத்தில் இருப்பவர்களை இடித்தும் இடிக்காமல் எடுத்துச் செல்வர். இதில் சிலர்க்குச் சில எரிச்சல் மூட்டும் நிகழ்ச்சிகள் நடைபெறும். முக்கியமாக மூன்று :

1. பயணச்சீட்டு வாங்கும் வரிசையில் முதலில் நின்று சீட்டு வாங்கி முதலில் சரக்குகளைப் போட்டு அவற்றிற் குரிய சான்றுச் சீட்டுகளை வாங்கி இருப்போம். ஆனால் விமானம் வந்து இறங்கியதும் கடைசியில் நம் சரக்குகள் வரும். ஆம், முதலில் போட்டது கடைசியில் வந்தால் எப்படி இருக்கும் ?!

2. போட்ட சரக்குகளில் முதலில் சில வரும். ஆனால் ஒன்றோ இரண்டோ கடைசியில் வரும்; அதுவரை காத்துத் தொலைக்க வேண்டும்.

3. ஒரேமாதிரி பெட்டிகள்/பொருள்கள் வரும். எது நமது என்று கையில்/பையில் இருக்கும் சரக்குச் சீட்டு எண்ணோடு சரி பார்த்து உரியதைத் தேடிப் பிடிக்க வேண்டும்.

மேற்கண்ட சிக்கல்கள் எதுவும் எனக்கு ஆங்காங் விமான நிலையத்தில் ஏற்படவில்லை. காரணம் வைக்கப் பட்ட விசாரணையை முடித்துக் கொண்டு சரக்குகள் வரும் இடத்திற்குப் போனபோது' அங்கும் ஒருவரும் / ஒன்றும் இல்லை. அதிர்ச்சி அடையாமல் எப்படி இருக்க முடியும்? எவரோ நம் பொருள்களையும் கடத்திச் சென்று விட்டார்கள் என்றே எண்ணினேன். எதிரே வந்த எவரோ ஒருவரைப் பார்த்து என் குறையைக் கூறினேன். 'எந்த விமானத்தில் வந்தீர்கள்?' என்றார். 'ஏர் இந்தியா' என்றேன். 'அதோ கம்பெனி அலுவலகம். அங்கே விசாரியுங்கள்' என்றார். விசாரித்தேன். 'அதோ அந்த இடத்தில் இருக்கின்றனவா?' என்று ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினார்கள். ஓடிப் போய் பார்த்தேன். அனைத்தும் ஒரு தாய் வயிற்றுப் பூனைக் குட்டிகள் போல் ஒன்றாய்க் குந்தி இருந்தன. என்னைக் கண்டு குறுநகை பூத்தன. மறுபடியும் வெற்றி வீரனாய் அவற்றைத் தள்ளுவண்டியில் (விமான நிலையத்தில் சௌகரியமாய் இருப்பவை— அவற்றை விமான நிலையத்தில் வரிசையாய்த் தள்ளி வைக்கும் ஏவலர்கள் திறமே திறம்!) வைத்துக் கொண்டு பயணத்துறை (Tourism) அலுவலகங்கள் இருக்கும் இடம் நோக்கினேன்.

அங்கே கம்பியூட்டர்கள் இயங்கிக் கொண்டிருந்தன. தொலைபேசி உதவிக் கேட்டேன். எதிரே இருந்த பொதுத் தொலைபேசிகளைச் சுட்டிக் காட்டினார்கள். அவற்றுள்

ஒன்றிடம் சென்று அது இயங்கும் முறையை அறிந்து கொண்டேன். சென்னையில் இருந்து புறப்படும் முன் டாக்டர் மு. நாகநாதன் திரு. மறைக்காடர் அலுவலக எண்ணைக் கொடுத்திருந்தார். திரு. மறைக்காடர் மறை மலை அடிகளார் பேரர் என்றும் பண்பாட்டின் திருவுருவம்– பெரு உருவம் என்றும் யான் எண்ணும்படி நல்லுரைகள் நவின்றிருந்தார்.

திரு. மறைக்காடர் பேசினார். சில நாட்களுக்கு முன்பு டாக்டர் மு. நாகநாதன் கடிதம் எழுதியிருந்தார் என்றும் அதற்குப் பின்பு ஒன்றும் தெரியாது என்றும் கூறினார். நான் 'நேற்று இரவே அவர்கள் ஆங்காங் வந்திருக்க வேண்டும் என்றும், அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை என்றும், இரண்டு நாளில் சீனாவுக்குப் போக இருக்கிறோம் என்றாலும் எனக்குத் தங்குமிடம் எதுவும் தெரியாது' என்றும் உரைத்தேன்.

திரு. மறைக்காடர் மனம் நெகிழ்ந்து, 'எனக்கு அலுவலக நேரம்; இப்போது எங்கும் நகர முடியாது. ஆனால் வீட்டிற்குத் தொலைபேசி செய்து மனைவியையும் மகளையும் வண்டி கொண்டு வந்து உங்களை வீட்டிற்கு அழைத்துப் போக ஏற்பாடு செய்கிறேன்; உங்கள் அடையாளம் என்ன ? விமான நிலையத்தில் எங்கே இருக்கிறீர்கள் ?' என்றார். நான் என் அழகிய திருவுருவத்தை வருணித்தேன். 'வேட்டி கட்டியிருப்பேன்; தாடி உண்டு; குடுகுடுப்பைக்காரன் போல் இருப்பேன்; பொதுத் தொலைபேசிகள் இருக்கும் இடத்தில் இருப்பேன்? பார்த்தாலே அடையாளம் தெரியும்' என்றேன்.

'சில மணி நேரங்கள் காத்திருக்க வேண்டும்; மனைவியிடமும் மகளிடமும் பேசி ஏற்பாடு செய்கிறேன்' என்றார்.

'எவ்வளவு நேரமாயினும் காத்திருப்பேன்; புகலிடம் வேறு இல்லை' என்றேன்.

சில மணி நேரங்கள் சொன்ன இடத்தில் சொன்னபடி காத்திருந்தேன். போவோர் வருவோர் என்னை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு போவதுபோல் தோன்றியது. காலையில் ஒன்றும் சாப்பிடவில்லை. பட்டினி. அதைப் பற்றி—எதைப் பற்றியும் கவலை இல்லை—நான்தான் உலகத்தைப் பார்க்க வேண்டும் என்று புறப்பட்டு விட்டேனே!

சில மணி நேரம் கழித்து ஓர் இளம் பெண்-மாநிறம், அயலக உடை-என்னிடம் வந்து 'நீங்கள்தான் டாக்டர் சஞ்சீவியா?' என்று கேட்டார். 'ஆம்' என்றேன். 'நான் மறைக்காடர் மகள். அம்மாவும் வந்திருக்கிறார்கள். உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்லச் சொல்லியுள்ளார்கள். வாருங்கள் போகலாம்' என்றார்.

சற்று நேரத்துக்கெல்லாம் திருமதி மறைக்காடரும் வந்தார்கள்—புன்முறுவலுடன் 'வணக்கம்' சொன்னேன். 'வணக்கம்' சொன்னார்கள். திருமதி மறைக்காடர் மகள் என் பொருள்களைக் காரில் ஏற்றினார்கள். அம்மாவும் பெண்ணும் முன் வரிசையில் உட்கார்ந்து கொண்டார்கள். அம்மாவே வண்டியை ஓட்டினார்கள். வீடு போய்ச் சேர ஒரு மணிக்கு மேல் ஆகியிருக்கும். அவ்வளவு தொலைவு. வழிநெடுக வானுயர் கட்டடங்கள்: விமானத்தில் இருந்து பார்த்த ஆங்காங்கை இப்போது தரையில் இருந்து பார்த்தேன். சுற்றியும் கடல்; தீவு; இடையிடையே மலைகள். மலைகள் மேல் அடுக்கடுக்காய்க் கட்டடங்கள்; கட்டடங்கள் மேல் எல்லாம் பச்சைப்பசுங் கொடிகளும் செடிகளும். ஆம். எவ்வளவுச் செயற்கையில் சிக்கினாலும் மனிதனுக்கு இயற்கையில் கிடைக்கும் ஆறுதல் / இன்பம் வேறெங்கே கிடைக்கும். கடல்—நிலம்—மலை—மாடிகள்—வானம்—எல்லாம் கையகத்துள்—கண்ணகத்துள். வையகமும் வானகமும் கையகம் / கண்ணகம் ஆனால் எப்படி இருக்கும்?' 'தனக்குள் எல்லாம்' என்ற நிலையில் அகந்தை

வருமா? அடக்கம் வருமா? அவரவர் இயல்பு போல. எனக்கென்னவோ தன்னை மறந்த நிலை—உறக்க / ஓய்வு நிலை—பொறுப்பு நிலை—பொறுமை நிலை.

காரோட்டிய அம்மையாரிடம் அவர்கள் ஆங்காங்கு எப்போது வந்தார்கள்? — ஊர் பிடித்திருக்கிறதா? — எத்தனை குழந்தைகள்? என்ன செய்கிறார்கள்?—விலைவாசிகள் எப்படி இருக்கின்றன? என்று அடுக்கடுக்காய் வினாக்கள் கேட்டேன். அவர்களும் பொறுமையாய் ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லி வந்தார்கள்? அந்தப் பதிலைக் கேட்கும் போதெல்லாம் சென்னை எங்கே? ஆங்காங் எங்கே? 'வாழ்தல் வேண்டிதானே உற்றார் உறவினரைப் பிரிந்து வந்துள்ளார்கள்? புதிய சூழலுக்கு ஏற்ப எப்படியெல்லாம் தங்களைத் தமிழ் மக்கள் வளர்த்துக் கொள்கிறார்கள்? ஊரிலேயே இருந்தால் இந்த வளர்ச்சியெல்லாம் ஏற்படுமா? 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடல்' தமிழர்தம் தொன்மை மரபுதானே! மேலும் மேலும் தேடாததும் தேடியதைப் பாதகமாக்குவதும் தேடிய இடங்களில் தமிழையும் தமிழ்க்கலைகளையும் போதுமான அளவு நிலைநாட்டாததும்தானே குறை என்றெல்லாம் எண்ணிக் கொண்டே மகிழ்வுந்தில் சென்று கொண்டிருந்தேன்.

கடைத்தெருக்கள் வந்தன; கடலுக்குள் செல்லும் சுரங்கப் பாதைகள் வந்தன. அந்தப் பாதைக்குள்தான் கார்கள் எவ்வளவு விரைவாகப் போகின்றன! அந்தப் பாதைகள்தான் எவ்வளவு ஒளிமயமாய் உள்ளன! நம் சென்னையில் Reserve Bank எதிரில் உள்ள சுரங்கப்பாதையிலும் மற்ற இடங்களில் உள்ள சுரங்கப்பாதைகளிலும் மழை பெய்தாலும் பெய்யா விட்டாலும்கூட எவ்வளவு அழுக்குநீர் அருவிகள்—பிச்சைக்காரர் கூட்டம்! ஆங்காங் சுரங்கப் பாதைக்குள் நுழையும் ஒவ்வொரு முறையும் ஒரு சுங்கத் தீர்வை தரவேண்டும். காசு கொடுத்தும் ஒரு

சில மணி நேரங்கள் சொன்ன இடத்தில் சொன்னபடி காத்திருந்தேன். போவோர் வருவோர் என்னை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு போவதுபோல் தோன்றியது. காலையில் ஒன்றும் சாப்பிடவில்லை. பட்டினி. அதைப் பற்றி—எதைப் பற்றியும் கவலை இல்லை—நான்தான் உலகத்தைப் பார்க்க வேண்டும் என்று புறப்பட்டு விட்டேனே !

சில மணி நேரம் கழித்து ஓர் இளம் பெண்-மாநிறம், அயலக உடை-என்னிடம் வந்து 'நீங்கள்தான் டாக்டர் சஞ்சீவியா ?' என்று கேட்டார். 'ஆம்' என்றேன். 'நான் மறைக்காடர் மகள். அம்மாவும் வந்திருக்கிறார்கள். உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்லச் சொல்லியுள்ளார்கள். வாருங்கள் போகலாம்' என்றார்.

சற்று நேரத்துக்கெல்லாம் திருமதி மறைக்காடரும் வந்தார்கள்—புன்முறுவலுடன் 'வணக்கம்' சொன்னேன். 'வணக்கம்' சொன்னார்கள். திருமதி மறைக்காடர் மகள் என் பொருள்களைக் காரில் ஏற்றினார்கள். அம்மாவும் பெண்ணும் முன் வரிசையில் உட்கார்ந்து கொண்டார்கள். அம்மாவே வண்டியை ஓட்டினார்கள். வீடு போய்ச் சேர ஒரு மணிக்கு மேல் ஆகியிருக்கும். அவ்வளவு தொலைவு. வழிநெடுக வானுயர் கட்டடங்கள்: விமானத்தில் இருந்து பார்த்த ஆங்காங்கை இப்போது தரையில் இருந்து பார்த்தேன். சுற்றியும் கடல்; தீவு; இடையிடையே மலைகள். மலைகள் மேல் அடுக்கடுக்காய்க் கட்டடங்கள்; கட்டடங்கள் மேல் எல்லாம் பச்சைப்பசுங் கொடிகளும் செடிகளும். ஆம். எவ்வளவுச் செயற்கையில் சிக்கினாலும் மனிதனுக்கு இயற்கையில் கிடைக்கும் ஆறுதல் / இன்பம் வேறெங்கே கிடைக்கும். கடல்—நிலம்—மலை—மாடிகள்—வானம்—எல்லாம் கையகத்துள்—கண்ணகத்துள். வையகமும் வானகமும் கையகம் / கண்ணகம் ஆனால் எப்படி இருக்கும் ?' 'தனக்குள் எல்லாம்' என்ற நிலையில் அகந்தை

வருமா ? அடக்கம் வருமா ? அவரவர் இயல்பு போல. எனக்கென்னவோ தன்னை மறந்த நிலை—உறக்க / ஓய்வு நிலை—பொறுப்பு நிலை—பொறுமை நிலை.

காரோட்டிய அம்மையாரிடம் அவர்கள் ஆங்காங்கு எப்போது வந்தார்கள் ? — ஊர் பிடித்திருக்கிறதா ? — எத்தனை குழந்தைகள் ? என்ன செய்கிறார்கள் ?—விலை வாசிகள் எப்படி இருக்கின்றன ? என்று அடுக்கடுக்காய் வினாக்கள் கேட்டேன். அவர்களும் பொறுமையாய் ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லி வந்தார்கள்? அந்தப் பதிலைக் கேட்கும் போதெல்லாம் சென்னை எங்கே ? ஆங்காங் எங்கே ? ‘வாழ்தல் வேண்டிதானே உற்றார் உறவினரைப் பிரிந்து வந்துள்ளார்கள் ? புதிய சூழலுக்கு ஏற்ப எப்படியெல்லாம் தங்களைத் தமிழ் மக்கள் வளர்த்துக் கொள்கிறார்கள் ? ஊரிலேயே இருந்தால் இந்த வளர்ச்சியெல்லாம் ஏற்படுமா ? ‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடல்’ தமிழர்தம் தொன்மை மரபுதானே ! மேலும் மேலும் தேடாததும் தேடியதைப் பாதகமாக்கு வதும் தேடிய இடங்களில் தமிழையும் தமிழ்க்கலை களையும் போதுமான அளவு நிலைநாட்டாததும்தானே குறை என்றெல்லாம் எண்ணிக் கொண்டே மகிழ்வுந்தில் சென்று கொண்டிருந்தேன்.

கடைத்தெருக்கள் வந்தன; கடலுக்குள் செல்லும் சுரங்கப் பாதைகள் வந்தன. அந்தப் பாதைக்குள்தான் கார்கள் எவ்வளவு விரைவாகப் போகின்றன ! அந்தப் பாதைகள்தான் எவ்வளவு ஒளிமயமாய் உள்ளன ! நம் சென்னையில் Reserve Bank எதிரில் உள்ள சுரங்கப்பாதை யிலும் மற்ற இடங்களில் உள்ள சுரங்கப்பாதைகளிலும் மழை பெய்தாலும் பெய்யா விட்டாலும்கூட எவ்வளவு அழுக்குநீர் அருவிகள்—பிச்சைக்காரர் கூட்டம் ! ஆங்காங் சுரங்கப் பாதைக்குள் நுழையும் ஒவ்வொரு முறையும் ஒரு சுங்கத் தீர்வை தரவேண்டும். காசு கொடுத்ததும் ஒரு

இயந்திரம் டிக்கட் தரும். இப்போது இந்த முறைகள் எல்லாம் நம் சென்னை போன்ற நகரங்களில் உள்ள ஓட்டல்களிலும் பெரிய கடைகளிலுமே வந்துவிட்டன. வருங்கால உலகம் எலெட்ரானிக்—இயந்திர உலகம்தானே!

திருமதி மறைக்காடர் காரை மலை அடுக்கத்தில் உள்ள புல அடுக்கு மாடிக் கட்டடத்தருகே ஓரிடத்தில் நிறுத்தி விட்டுத் தம் வீட்டுக்குத் 'தூக்கி' (Lift) வாயிலாக அழைத்துச் சென்றார்கள். என் பொருள்கள் எல்லாம் தனி ஓர் அறையில் வைக்கப்பட்டன. அங்கே இருந்த தனிக் கட்டிலில் உண்டபின் ஓய்வு கொள்ளச் சொன்னார்கள். முன்பின் தெரியாத ஒரு தமிழ் அன்னையின் உள்ளம் காட்டிய அன்பு என்னை மிகவும் நெகிழ்வித்தது.

திரு. மறைக்காடர் வீடு ஒரு சமையற்கூடம், ஒரு பொது அறை, இரண்டு படுக்கை அறைகள், ஒரு கழிவு / குளியல் அறை கொண்டது. இரண்டு படுக்கை அறையில் ஓர் அறையில் கழிவு / குளியல் அறையும் உண்டு.

பொது அறையில்—மிகப் பெரியதும் மிகச் சிறியதும் இல்லாத அந்த அறையில் அழகிய நாற்காலிகளும் புத்தகங்கள் குறிப்பேடுகள் முதலியன வைப்பதற்குரிய ஒரு சின்னஞ்சிறிய அலமாரியும் இருந்தன. ஆனால், என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவை உணவு அருந்த சுற்றி உட்காரும் ஒரு நடுத்தரப் பரப்புள்ள வட்ட மேசையும் அதனெதிரே அமைந்த வானொலி/ஒளி இரண்டும் கலந்த பெட்டியுமே ஆகும் அதில் வீடியோ படங்களைப் போட்டுப் பார்க்கும் வாய்ப்பும் இருந்தது.

மறைமலையடிகள் படத்தை என் கண்கள் தேடின; காணவில்லை ; வருந்தினேன். எல்லாம் இருந்தும் அந்தப் படம் இல்லாதது எனக்குப் பெருங்குறையாய் இருந்தது. அதைப் பின்னர் திரு. மறைக்காடர் வீட்டுக்கு வந்ததும் நேரம் / நெஞ்சம் அறிந்து கூறினேன். அவரும் வருந்தினார்.

திருமதி மறைக்காடரும் அவர் திருமகளாரும் உணவருந்த அழைத்தனர். நான் குளித்து விடுவதாகக் கூறினேன். சரியென்று குளியலறையைக் காட்டினார்கள். வெந்நீர் தண்ணீர் இரண்டையும் அளவாகக் கலந்து எப்படிக் குளிப்பது என்றும் அறிவுரை / நெறியுரை கூறினார்கள். எச்சரிக்கையாக நடந்து கொண்டேன். காரணம் முன்னம் ஒருவர் நெறியறியாது குளிக்கப் போய் வெந்நீரில் வெந்ததை டாக்டர் அவ்வை நடராசன் சொல்ல (இத்தகு செய்திகளைச் சொல்வதில் அவருக்குள்ள ஆர்வமும் ஆற்றலும் உலகறிந்தவை) அதைப் பெருங்கவிக் கோ தமது 'உலகப் பயணம்' நூலில் குறித்திருப்பதை என்னால் எப்போதும் மறக்க முடிவதில்லை. 23 ஆண்டு களுக்கு முன்பு சிங்கப்பூர்—மலேசியா சுற்றுப் பயணத்தில் அடியேனே இதை ஓரளவு அறிந்திருந்தேன். ஆனால் அப்போது காணாத ஒரு புதுமை என நினைக்கிறேன்— குளியல் தொட்டியின் மேலே "ஷவர்" எனப்படும் நீர்ச் சொரிவுகள் இருக்கும்; இப்போதோ நம் "கார்மெகானிக்" கடைகளில் காரைக் கழுவப் பயன்படுத்தப்படும் பீச்சுக் குழாய்கள் இருந்தன. அவற்றின் துணைகொண்டு உடம்பின் எப்பகுதியிலும் நீரைப் பீச்சலாம்—பாய்ச்சலாம். அதில் கிடைக்கும் ஊற்றின்பம் / ஊக்க இன்பம் பெரிது. சென்னையிலேயே செல்வர் வீடுகளில் இந்த வசதி இருக்கும்! அறைக்கு அறை தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ள வீடுகள் உண்டோ! ஆனால் நம் போன்றவர்கள் நம்மூரில் பார்க்க முடியாத வியப்புகளை—வசதிகளை எளிமையாகக் காண இத்தகைய அயல்நாட்டுப் பயணங்கள் என் போன்றார்க்குப் பயன்படல் முன்னை செய்த நல்வினை போலும்!

வெதவெதப்பான நீரில் குளித்ததுமே விறுவிறுப்பான உடல்நிலை ஏற்பட்டது. காரணம் வெதவெதப்பான நீர் வேகமாக உடல்மீது பாய்வதால் நரம்புகள் விரிவுற்று இரத்த ஓட்டம் பெருகும் போலும்! சென்னையிலேயே

தினம் குளிக்கும்போது வெந்நீரிலாயினும் தண்ணீரிலாயினும் நான் மறவாமல் நினைக்கும் ஒரு திருக்குறள் உண்டு. அது : 'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப் படும்' என்பதாகும். இந்தக் குறள் நினைவோடேயே யான் நாளும் குளியலறை விட்டு நாளும் வாழ்க்கைக் குளியலில் ஈடுபடுவது வழக்கம். புனைவு இல்லாத இந்த நினைவு என்னைப் பெரிதும் வாழ்வித் துள்ளது.

திருமதி மறைக்காடர் மின் சாதனங்கள் துணை கொண்டு மிகவிரையில் தயாரித்த அறுசுவை உணவை—இல்லை—அமுதை உண்ண வட்ட மேசையின் ஒருபால் அமர்ந்தேன். திருமதி மறைக்காடரும் அவர் மகளும் எதிரே அமர்ந்தார்கள். மேசைமேல் ஒரு பெரிய வட்டத் தட்டு இருப்பதைப் பார்த்தேன். பலவகை மரக்கறி உணவுகளும் மலர்ந்திருக்கக் கண்டேன். சற்று நேரத்தில் பெரிய வட்ட மேசைமேல் இருந்த உள்வட்டத் தட்டு மெல்ல சுழன்றது ; திருமதி மறைக்காடர் சுழற்ற கீழ்த் தட்டில் சோறும் கறியும் வேண்டியபோது வேண்டிய வாறு போட்டுக் கொள்ள அந்த உள்தட்டுச் சுழற்சி பயன் பட்டது. ஆம், ஒருவர் பரிமாறும் உழைப்பையே செய்யும் வேலை மிச்சமாகிறது. இதை எளிதாக நம் வீடுகளில் செய்யலாமே என்று தோன்றியது. இதுபோல் இன்னும் எவ்வளவு எவ்வளவோ வசதிகளை எளிமையாகச் செய்து கொண்டு வாழ்கின்ற வையகத்தை நினைந்து வியந்து மகிழ்ந்தேன்.

தமிழ்ச் சுவை ததும்பும் உணவு உண்டபின் கண்கள் சொருகின; கொஞ்ச நேரம் டி.வி. பார்க்க முயன்றேன். என் இயல்புக்கு அறவே பிடிக்காத குத்து—கொலை—கொள்ளைக் காட்சிகள் வந்தன. போதும் என்று போய்ப் படுத்து விட்டேன்.

இரவு எட்டுமணி இருக்கலாம். திரு. மறைக்காடர் வீட்டிற்கு அலுவலகத்திலிருந்து திரும்பினார். எப்படி அவரை அறிந்து கொண்டேன் என்கிறீர்களா? வீட்டுக் கதவு மூடப்பட்டிருந்தது. திடீரென அழைப்பு மணி அடித்தது. செல்வி மறைக்காடர் ஓடிப் போய்க் கதவி லிருந்த ஒரு சிறு கண்ணாடி வழியே பார்த்தார்; அப்புறம் கதவை திறந்தது. நாகரிக உலகம் எவ்வளவு நடுக்கத்தில் வாழ்கிறது என்பதை உணரத் தொடங்கினேன். அடையா நெடுங்கதவம் என்பதெல்லாம் பழங்கற்பனை. ஆங்காங் கிலேயும் அமெரிக்காவிலும் இப்படிக் கண்ணாடி வழி காண்பதோடு இல்லாமல் தொலைபேசி செய்துதான் யாரென்று ஒருவர் அறிவித்தால்தான் கதவைத் திறக்கும் நிலை இருக்கக் கண்டேன். ஆம், பிறர் துன்பம் கண்டு அஞ்சும் நாகரிகம் பழம்நாகரிகம்; பிறர் துன்புறுத்துவர் என்று அஞ்சி அஞ்சி வாழ்வதே இன்றைய நாகரிகம்.

திரு. மறைக்காடர் நல்ல உயரம்; மலர்ந்த முகம்: மறைமலை அடிகளை மிக இளம் வயதிலேயே நேரில் பார்த்துப் பழகிய எனக்கு—அவர்தம் நூல்களில் ஈடுபாடு கொண்ட எனக்கு—மறை மாணிக்கவாசகம் அவர்களையும் நன்றாக அறிந்த எனக்கு—ஆங்காங்கில் அவர் பேரரைப் பார்க்க நேர்ந்தது அளவிலா மகிழ்வு தந்தது. பாடுபட்ட குடும்பத்தினர்—வழியினர் நல்ல நிலையில் இருப்பதைக் கேட்கும் போதும் என் உள்ளம் உருகும். மறைமலை அடிகள் குடும்பத்தார் அனைவரும் நன்றாக இருப்பது தமிழ்—தமிழர் பெற்ற பேறு. ‘மறைமலை அடிகளார் குடும்பம்’ என்றே ஒரு தனி நூல் எழுதலாம். அந்த அளவிற்கு ஒருவரும் ‘சோடை’ போகாமல் ஒவ்வொரு துறையில் சிறந்திருப்பதை நினைக்கும் போதெல்லாம் செந்தமிழ் இன்பம் திருக்குறள்—திருவாசகத் தேனாய்த் தித்திக்கிறது.

மனைக்குள் நுழைந்த திரு. மறைக்காடர் ஆங்கில உடைகளைந்து முடித்துக் கொண்டு திருநீறு அணிந்து

என்னிடம் அளவளாவ வந்தார். அவர் உரையாடலால் அவர் பச்சையப்பர் கல்லூரியின் பழைய மாணவர் என்றறிந்து பெருமகிழ்வு எய்தினேன். அப்புறம் ஆங்காங் சிறப்புகளைக் கேட்டேன்; சொன்னார்கள். கேட்கக் கேட்க வியப்பாய் இருந்தது. ஆங்காங்கில் காலம் பொன்; பொற்காலம் என்பதறிந்தேன். ஆங்காங்கின் தலைமைச் சிறப்பு 'பணப் பரிமாற்றம்' (Money Exchange) தான் என்பதறிந்தேன். நிமிடத்துக்கு நிமிடம் உலகச் சந்தை யில் பணமாறுதல்கள் ஏற்படும். அதைப் பயன்படுத்தித் தொலைபேசியிலேயே வாங்கி- விற்று வாணிபம் புரிவோம்; கமிஷன் பணமே செல்வம் என்றார்கள். பணச்சூதாட்டம் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

சிறிது நேரம் சென்றதும் 'உங்கள் இளைய மகள் ?' எங்கே என்றேன். 'அவள் நேற்று முன் தினம்தான் சென்னைக்குப் போயுள்ளாள்' என்றார். 'தனியாகவா ?' என்றேன். 'ஆம்' என்றார். வியந்தேன். 'எப்படி ?' என்று திருமதி மறைக்காடரை உற்று நோக்கினேன். 'இதற்கு முன்பே எங்களோடு அவள் வந்து பழகியிருக்கிறாள். இங்கே விமானத்தில் ஏற்றி விட்டால் சிங்கப்பூரில் இறங்கி விடுவாள். அங்கே எங்கே போய் எப்படி சென்னை விமானத்தில் ஏற வேண்டும் என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். அதன்படி அவள் நடந்து கொள்வாள்— நடந்து கொண்டாள். சென்னை சேர்ந்து தொலைபேசிச் செய்தியும் வந்து விட்டது' என்றார்கள். எனக்கு வியப் பாகவும் மகிழ்வாகவும் இருந்தது.

திரு—திருமதி மறைக்காடர் குழந்தை போலத் தமிழ்க் குழந்தைகள் எல்லாம் தன்னம்பிக்கையும் திறமையும் உடைய குழந்தைகளாக வேண்டும் என்று அவாவினேன். திரு. மறைக்காடர் குடும்ப மாண்பில் வருங்காலத் தமிழ் இனத்தின் மாண்பே மலர் பொதி மணமாய் இருப்பதை உணர்ந்தேன்; உவந்தேன். அந்த உவகையிலேயே —நாளை ஆங்காங்கைப் பார்ப்போம் என்ற நினைப்பிலேயே— கண்ணயர்ந்தேன்.

# 6

# ஆயிரங் கண்ணோன் அருங்கலச் செப்பு-1

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு (இத்தொடர் பொது வாகத் தமிழ் அறிஞர்கட்கும் அன்பர்கட்கும் பிடித்தது- அவர்களுடைய சரியான பிடி இதுதானே! பேராசிரியர் டாக்டர் மு.வ.வே இத்தொடரில் மிகவும் ஈடுபாடு கொண் டிருந்தார்! அவருக்கு—அவர் கட்டிய மனை 'தாயக'த் திற்கு – நிலம் வாங்க உதவியது பல்கலைக்கழக இடைக் கலை வகுப்பு மாணவர்கட்கு அவர் எழுதிய 'தமிழ் நெஞ்சம்' என்ற பாடப் புத்தகம். முதல்முறை அந்தப் புத்தகம் கட்டடம் செய்யப்பட்டு அச்சகத்திலிருந்து தன்னிடம் வந்ததும் (அப்போது டாக்டர் மு. வ. 32, கந்தப் பிள்ளைத் தெரு, சேத்துப்பட்டு வீட்டில் குடியிருந்தார்) அதைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தார்! தான்(தான்) பெற்ற பிள்ளை ஆயினும் அதைப் பார்த்துப் பார்த்துத் தாய் மகிழ்வது போலப் பேராசிரிய எழுத்தாளனுக்கும் கலைஞ னுக்கும் அந்த மகிழ்ச்சி இருப்பது இயல்பு. அப்படித்தான் பெற்ற குழந்தையைப் பார்க்கும் தாய்போல் பார்த்துக் கொண்டிருந்த பேராசிரியர், 'பார்த்தாயா அப்பா! புத்தகத்தின் தொடக்கத்திலும் 'ஈராயிரம்'; முடிப்பிலும் 'ஈராயிரம்!' என்று சுட்டிக் காட்டி மகிழ்ந்தார். இப்படிப் பட்ட ஓரின்பம்தான்—காலஞ் சென்ற என் மனைவியின் டாக்டர் பட்ட ஆய்வுக்கான திருப்புரை இன்பம். பேராசிரியர் மு. வ. வுக்குப் புகழ் தேடித் தந்த முதல் நூல் கி.பி. 2000 என்பதும் நினையத் தக்கது. பேராசிரியர் 'ஈராயிரம்' அந்தாதிக்கு அடிப்படை இப்போது விளங்கும்!

சரி, இந்த 'ஈராயிரம்' இப்போது நம் நினைவுக்கு வருவானேன்? பொதுவாக, ஈராயிரம்—சரியாகச் சொன்னால், 1800 ஆண்டுகட்கு முன்பு தோன்றிய நூல் தான் 'சிலப்பதிகாரம்'. Thousand eight hundred years ago என்ற முன்னோடி நூலை எழுதியவர் கனகசபைப் பிள்ளை என்ற தமிழறிஞர். இந்த ஆங்கில நூலை அண்மையில் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு வெள்ளி விழாவில் டாக்டர் பட்டச் சிறப்புப் பெற்ற பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் மொழி பெயர்த்துள்ளார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக அது வெளி வந்துள்ளது. ஆராய்ச்சி அறிஞர் வி. கனகசபைப் பிள்ளை பற்றி இருபதாம் நூற்றாண்டுத் தமிழின் இமய வெற்றி யாகிய கலைக்களஞ்சியம் (சில நாட்களுக்கு முன்பு சிங்கப்பூர் அறிவியல்—மாவடை (Zoolgy) கருத்தரங்கிற்குச் சென்று வந்த என் மகள் டாக்டர் திருமதி ச. எழிலரசி பாலசுப்பிர மணியன் அவர்கள், சிங்கப்பூரில் ஆரம்பப்பள்ளி ஆசிரியராக இருக்கும் தமிழர்கள் கூடத் தங்கள் வீடுகளில் Encyclopaedia Brittanica தொகுதிகள் முழுவதையும் வைத்திருப்பதையும் தமிழ்க் கலைக்களஞ்சியத் தொகுதிகளையும் உடன் வைத் திருப்பதையும் அதில் எவரிடமேனும் உள்ளவற்றில் சில குறைந்தால் எவ்வளவு விலை கொடுத்தும் வாங்கத் துடிப் பதையும் குறிப்பிட்டபோது அக்கரைக்குப் போன—அலை கடலுக்கு அப்பால் போன—தமிழர்கட்கேனும் அக்கறையும் கலை ஆர்வமும் தமிழார்வமும் இருப்பதை எண்ணி மெய் சிலிர்த்துப் போனேன். தமிழகத்தில் அப்படி ஒரு நிலை பொதுவுடைமை ஆட்சி வந்தேனும் வராதா என்று ஏங்கினேன்) தரும் இரத்தினச் சுருக்க விவரம் வருமாறு :—

கனகசபைப் பிள்ளை, வி. (1855—1906) ஆங்கில மும் தமிழும் அறிந்த அறிஞர். இவர் தந்தை விசுவநாதப் பிள்ளை ; யாழ்ப்பாணத்து மல்லாகம் என்னும் ஊரினர் ; வின்ஸ்லோ பாதிரியார் தமிழ் அகராதிக்கு உதவி புரிந்தவர். கனகசபைப்

பிள்ளை பி. ஏ. பட்டம் பெற்றவர். சென்னை அஞ்சல் துறையில் சூப்ரிண்டெண்டாக வேலை பார்த்தார். இவரியற்றிய 1800 ஆண்டுகட்கு முந்திய தமிழர் என்னும் ஆங்கில நூல் ஆராய்ச்சித் துறையிலே சிறப்புற்றது. மற்றும் களவழி நாற்பது, கலிங்கத்துப் பரணி, விக்கிரம சோழனுலா முதலிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 'இந்தியப் புராதனக் கலைஞன்' (Indian Antiquarry) என்னும் ஆங்கில இதழில் வெளியிட்டர்.

சிலப்பதிகாரத்தைப்பற்றி—ஏன் ? — சீவகசிந்தாமணியைப் பற்றிப் பேரும் கேள்விப் படாநிலையில், டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் இருந்த காலத்தில், அந்நூல்களைப் பற்றியும் சங்க இலக்கியங்களைப் பற்றியும் ஐயருக்கு அறிவுறுத்தியவர் இக்கட்டுரையாளனின் முன்னோர்களுள் ஒருவராகிய சேலம் இராமசாமி முதலியார். அந்தச் சிலப்பதிகாரத்தில் இருக்கும் 30 காதைகளுள் ஒன்று "ஊர் காண் காதை". அக்காதை கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் மதுரை மாநகரைக் காணும் காட்சியைக் காட்டுகிறது. அக்காட்சியை விளக்கும் ஒவ்வோர் அடியும் சிறப்புடையதே; ஆயினும் இதுபற்றி இளங்கோ அடிகளார் கூறிய ஈரடிகள் எப்போதும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கும். ஒரு காரணம் அந்த அடிகளைச் சிலம்புச் செல்வரின் மெய்ப்பாடுகள் நிறைந்த பேச்சுகளில் விளக்கமுடன் அடியேன் கேட்டதுதான் எனலாம்.

ஆயிரங் கண்ணோன் அருங்கலச் செப்பு
வாய்திறந் தன்ன மதிலக வரைப்பு

மேற்கண்ட ஈரடிகள் நெஞ்சையள்ளும் சிலப்பதிகார அடிகள். இந்த அடிகளை இப்போது பார்க்கும் போதும்-படிக்கும் போதும் சேரநாட்டு இளங்கோ அடிகள் மதுரையை வருணித்த வருணனைக்குப் புரட்சித் தலைவர்

பொன்மனச் செம்மல்—ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு நடத்திச் சேர்த்த புதுப்புகழ், நன்றியுடன் என் நெஞ்சில் நிழலாடும். தலைவர் கலைஞர் பூம்புகாருக்குப் புதுப்புகழ் சேர்த்தார். ‘மதுரை மீட்ட சுந்தரபாண்டியரோ’ மாமதுரைக்கு மாநாட்டுப் புகழ் சேர்த்தார். பேரறிஞர் அண்ணாவோ தமிழகத் தலைநகருக்கே தனிப்புகழ் சேர்த் தார்; இருந்த போதும் – இறந்த போதும்.

இதெல்லாம் சரி, ஆங்காங் பற்றிய பயணக் கட்டுரை யில் இந்தச் சிலப்பதிகார மேற்கோள் விளக்கம் எல்லாம் ஏன்? என்று கேட்பீர்கள். ஒரே வரியில் பதில் சொல்லி விட்டு விளக்கம் செய்கிறேன். ஆங்காங்கை என்னால்— இளங்கோ இலக்கியத்தில் தோய்ந்த என்னால்—வேறு சொற்களால் வருணிக்க முடியாது. காரணம் நான் தமிழன்; என் இதயம் எதையும் தமிழ்க் கண்கொண்டும் பார்க்கும் இதயம். மேலும் இலக்கியனுக்கு எதையும் தான் கற்ற இலக்கியத்தோடு பொருத்திப் பார்ப்பது - நினைத்துப் பார்ப்பது இயல்பு. அதுவே அழியாத் தமிழன்—இழியா இலக்கியத்தின் இமய வெற்றியும் ஆகும். காலங்கடந்தும் கருத்தைக் கவ்வுவதே கலையின்—கன்னித் தமிழின் வெற்றி!

ஆங்காங் உலகிலேயே சிறந்த துறைமுகங்களுள் ஒன்று; ஆழ்கடல் துறைமுகங்களுள் ஒன்று இதன் சிறப்பை— சிறப்பின் சிற்சில பகுதிகளை-நான் பார்த்தது சிலமணி நேரங்கள்தான். ஆனால், இப்பயணக் கட்டுரைக்கு ஆங்காங்கின் சிறப்புகளை—அதன் விவரங்களை அறிய பல்கலைக் கழகத்திலும் அமெரிக்க நூலகத்திலும் நான் படித்ததோ பலமணி நேரங்கள். காரணம் நாம் வாழும் ஊரிலேயே பல பகுதிகளை நாம் பார்த்திருக்க மாட்டோம் (அதுவும் சென்னை போன்ற நகரங்கட்கு இது மிகவும் பொருந்தும்); ஆனால், பயணக் கட்டுரைகளில் நாம் பார்த்ததை மட்டுமே எழுதினால் போதாது; நாம் கண்டதன்-கேட்டதன் அடிப்படையாகக் கற்பவர் நெஞ்சில்

நாம் கண்ட இடங்களின் சிறப்புகளின் சிகரங்களேனும் தென்படச் செய்ய வேண்டும். இதற்கு ஒளி ஓவியங்கள் (Photoes) பெரிதும் பயன்படும்; முடியா நிலையில் சொல் லோவியங்கள்-செய்திச் சித்திரங்களே-துணை புரியும்; அவ்வகையில் இக்கட்டுரையிலும் சிலகுறிப்புகள் பொறிக்கப் படுகின்றன.

முதலில் ஒரு நாட்டின் / இடத்தின் சிறப்பறிய சில அடிப்படையான புள்ளி விவரங்கள் அறியப்பட வேண்டும். அடுத்த நிலையில் இயற்கை, மக்கள் எண்ணிக்கை-வாழ்க்கை அடிப்படையிலான காட்சிகளும் கருத்துகளும் தேவைப்படும். இந்த இயற்கை வாழ்க்கை இரண்டன் பரிமாறும் இயல்புகள், வாழ்வின் வடிப்பு இரண்டையும் அடிப்படையாகக் கொண்டதே வரலாறு.

இனி, ஆங்காங் பற்றிய அடிப்படைக் குறிப்புகளைக் காண்போம். இதற்குச் சிறப்பாகத் துணைபுரியும் நூல்கள் பல; சில வருமாறு :

1. The Statemen's year book (*119 ஆம் பதிப்பு*)
   Edited by John Paxton, Honk Kong
2. Pan Am's World Quide
3. Encyclopaedia Brittanica

**ஆங்காங் தீவு இருக்குமிடம்**

முத்தாற்றின் முகவாயிலிற்கு 32 கி.மீ. கிழக்கே உள்ளது; சீனாவின் பெருநகராகிய காண்டனிற்கு 130 கி.மீ. தென்கிழக்கில் உள்ளது; மணிகள் அறுப்போர் தீவு (Stone Cutters Island) என்று பெயர் பெற்ற தீவுகள் உள்ளிட்ட நூற்றுக் கணக்கான தீவுகள் சூழ்ந்தது.

**ஆங்காங் நிலப்பரப்பு**

78.12 சதுர கி. மீ. மேற்குறிப்பிட்ட ஆங்காங் தீவின் நிலப்பரப்பு. இத்துடன் இத்தீவின் எதிரில் உள்ள

கௌலோன் தீபகற்பத்தின் நிலப்பரப்பு 10.48 சதுர கி.மீ.

**ஆங்காங் நாட்டின் திட்டமிட்ட இறுதிநிலை மக்கள் தொகை**

90 இலட்சத்து 18 ஆயிரம். 1981-ல் மக்கள் தொகை 50 லட்சத்து 15 ஆயிரம்.

**ஆங்காங்கில் வளர்ந்து வரும் வருவாயும் செலவும்**

**(டாலர்களில்)**

| | 1977-'78 | 1978-'79 |
|---|---|---|
| வருவாய் : | 10,232,600,000 | 12,557,000,000 |
| செலவு : | 8,996,900,000 | 11,090,100,000 |

| | 1979-'80 | 1980-'81 |
|---|---|---|
| வருவாய் : | 16,796,000,000 | 30,290,300,000 |
| செலவு : | 13,872,000,000 | 23,593,500,000 |

மேற்கண்ட கணக்குப்படி எந்த ஆண்டிலும் வரவுக்கு மேல் செலவில்லை என்பது முதற்கண் சிந்திக்கத் தக்கது; அடுத்து, ஆண்டுதோறும் வருவாய் அதிகரிப்பதும் அதற்கு ஏற்பவே செலவு செய்யப்படுவதும் சிந்திக்கத்தக்கன. இச்சிந்தனை ஆழமாகும்போது பொதுவுடைமை உலகில் தனிநாடுகள் அயல்நாடுகளைத் தாக்க படைகள் வைத்துக் கொள்ளும் தேவை இல்லாதபோது - கையகலம் கூட— இல்லை—கட்டைவிரல்—சுண்டு விரல் நாடுகளும் மொழி முதலான அடிப்படைகளில் தனித்தியங்கல் முடியும்-தகும் என்பது தெளிவாகும்.

மேற்படி ஆங்காங்கில் 1981-ல் மட்டும் பயணிகளாக (Tourists) வந்தோர் தொகை இருபத்தைந்து லட்சம் பேர்! இத்தொகையைத் தமிழ் நாட்டுக்கு வந்த பயணிகள் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்க உடனடி வசதிகள் இல்லை!

**மேலும் சில விவரங்கள்**

*ஆங்காங்கில் திரைப்பட அரங்குகள் (1981-இல்) : 81. இவற்றில் இருக்கைகள்* (seats) : *95, 508. திரைப்படம் பார்த்தோர் 610 லட்சம் பேர். ஆலிவுட்டைவிட ஆங்காங்கில் அதிகத் திரைப்படங்கள் தயாராகின்றன. இப்புள்ளி விவரங்களைத் தமிழகத்தோடு ஒப்பு நோக்கவும் உடனடி வசதிகள் இல்லை !*

**மிக முக்கியமானது**

*1981-இல் மட்டும் ஆங்காங்கிலிருந்து பதிவு செய்து வெளிவந்த இதழ்கள் 115. ஆங்கிலத்தில் மட்டும் 4; எஞ்சியன எல்லாம் பெரும்பாலும் சீனத்தில்.*

**பல்கலைக் கழகங்கள்** *2. ஒன்று ஆங்காங் பல்கலைக் கழகம்; மற்றொன்று ஆங்காங் சீனப் பல்கலைக் கழகம்.*

**ஆங்காங்கில் 1981-இல் மட்டும் பணிபுரிந்த மருத்துவர்கள் 3600 பேர்.**

**ஆங்காங்கின் தனிப்பெருஞ் 'சிறப்புகள் சில**

1. *நூற்றுக் கணக்கான அனைத்துலக வங்கிகள்*
2. *அணி/மணி தயாரிப்புத் தொழில்*
3. *அனைத்துலக வாணிபச் சந்தை*
4. *அனைத்து நாட்டு உணவுகளும் விற்கும் கடைகள்*

**சமயத் துறையில் ஆங்காங்கின் தனிச்சிறப்புகள்**

*பத்தாயிரம் புத்தர் கோயில்கள்*

**சுற்றுலாப் போக்கில் சிறப்புடையனவற்றில் சில**

1. *கடற் பூங்கா* (Ocean Park)
2. *உச்சி* (Peak)

*இன்றைய நாளிதழ்கள் படிப்பவர்கள் ஆங்காங் பற்றியும் சீனா பற்றியும் ஜப்பான் பற்றியும் நாளும்*

செய்திகள் வந்து கொண்டிருப்பதை அறிவர். நேற்றும் (17-11-83) இன்றும் (18-11-83) கூட இந்து நாளிதழில் ஆங்காங்—சீனம் தொடர்பான செய்தி ஒன்று வந்திருப்பதைப் பார்த்திருக்கக் கூடும். அதன்படி, ஆங்காங்கை பிரிட்டிஷ் காலனியாக்க சீனா உடன்பட்ட 99 ஆண்டு உடன்படிக்கை 1997ஆம் ஆண்டு முடிவடையப் போகிறது! அப்புறம் ஆங்காங்கின் நிலை யாது என்பதே கிழக்காசியா பற்றிய இன்றைய பெருங் கேள்விகளுள் ஒன்று. மெல்ல இது பற்றிய விளக்கமும் பொழுது புலர்வது போன்று ஏற்பட்டு வருகிறது. நேற்றைய (17-11-83) இன்றைய (18-11-83) இந்து நாளிதழ்களும் சீனா ஆங்காங்கை நேரடியாகத் தன் ஆதிக்கத்தின் கீழ் (இப்போதைக்கேனும்!) வைத்துக் கொள்ள விரும்பவில்லை என்று தெரிவிப்பதாகத் தெரிகிறது! இது குறித்துச் சீனாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே அவ்வப்போது அடிக்கடி நடந்து வரும் பேச்சு வார்த்தைகள் பண்பும் பயனும் நிறைந்தனவாய் உள்ளன என்று உரைக்கப்படுகின்றன. ஆங்காங்கைச் சீனா தன் நாட்டில்(திபெத் போன்ற சில பகுதிகட்குப் பெயரிட்டிருப்பது போன்று) தன்னாட்சிப் பகுதியாக் (Autonomous Region) அறிவிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், அமெரிக்காவையும் திக்குமுக்காடச் செய்யும் வகையில் முன்னேறும் ஜப்பான் போன்ற தொலை கிழக்கு நாடுகள் தொட்டு அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களின் முன்னேற்றங்களை எல்லாம் எளிதில் கண்டறியப் பயன்படும் வழி உலகின் கிழக்கிற்கும் மேற்கிற்கும் நுழைவாயிலாகப் —புழைவாயிலாகப் பயன்படும் வகையில் ஆங்காங்கை ஒரு தலைமுறைக் காலத்திற்கேனும் தலைமை நாடாகிய (Mainland) சீனாவைப் போல அல்லாமல் சற்று நெளிவு சுளிவுடன் வைத்திருப்பதே ஆகும் என்பது சாதாரண அறிவுடையவர்கட்கே தெரியும்போது சாதனைகள் பல படைத்த சீனாவுக்கா தெரியாது?

சில நாட்கட்கு முன்பு வந்த தமிழ்நாட்டுச் செய்தி ஏடுகள் தமிழக அமைச்சர்— தலைமை அமைச்சர் தானோ? — தெரிவித்ததாக ஒரு சேதியை வெளியிட்டுள் ளன. அது சிங்கப்பூருக்கும் ஆங்காங்குக்கும் பொறியியல் வல்லுநர்களை அனுப்பி, பழங்காலத்தில் கரிகாலன் 'காடு கெடுத்து நாடாக்கியது போல', 'கடல் கெடுத்து நிலம்' ஆக்கும் முயற்சிகளைக் கற்றுவரச் செய்வோம் என்பதாகும். இதனால் ஆங்காங்கின் நிலப்பரப்பு இவ்வளவு என்று துல்லியமாகக் கூற இயலவில்லை! காரணம் 'கடல் தூர்க்குவனே' என்று கரிகாலன் கூறியதைப் புறநானூற்றுப் பாட்டு ஒலிப்பதிவு செய்து உரைப்பது போலத் தினம் தினம் திரைகடல் தூர்க்கப்படுகிறது—சிறிது சிறிதாகவேனும் சிங்கப்பூரிலும் ஆங்காங்கிலும்! இனி ஆங்காங்கை என்னைப் போல் சில நாள்களில்— நேரங்களில் —சில மணி நேரங்களில் பார்த்தவர்கட்கும்— ஏன்? - பல காலம் அங்கிருந்தும் பார்த்தும் படித்தும் அறியாதவர்கட்கும் பயன்படும் வகையில் சில குறிப்புகளைத் தருதல் தகும்.

சீனாவின் தென் வாயிலில் சிறந்து விளங்குவது ஆங்காங். சற்றொப்ப பொட்டுப் பொட்டான 230 தீவுகளைச் சுற்றிச் கொண்டிருக்கும் பகுதியே ஆங்காங். ஆங்காங்கிற்கு 90 மைல் வடக்கே சீனாவின் துறைமுக நகரம் காண்டோன் உள்ளது. ஏறத்தாழ 404 சதுரமைல் (1046சதுரமீட்டர்) மொத்த பரப்புள்ளது ஆங்காங். ஆங்காங் தீவும் அதற்கடுத்துள்ள சிறு தீவுகளும் 29 சதுர மைல்கள் பரப்பின. முந்நீர் நாடாகிய (தீபகற்ப) சைனாவின் கொசுப் பகுதியாகிய (!) கௌலோன் பகுதியும் மணி அறுப்போர் தீவும் மூன்றே முக்கால் சதுரமைல் பரப்பின. புதிய நிலப்பகுதிகள் சற்றொப்ப 966 சதுர மைல்கள் உடையன. கௌலோன் தீபகற்பப் பகுதியில் ஏராளமான துறைமுக வசதிகள் உள்ளன. ஆங்காங்கின் தலைநகரம் விக்டோரியா. இங்கிருந்து— இங்குள்ள உச்சி

யிலிருந்து பார்த்தால்—அதுவும் இரவு நேரத்தில் முகில் கூட்டங்கள் மூடி மறைக்கா நேரத்தில்—பார்த்தால், 'ஆயிரங் கண்ணோன் அருங்கலச் செப்பு' வாய் திறந்து நவமணி ஒளி வீசிய நற்காட்சி கிடைக்கும்.

ஆங்காங்கின் மக்கட் தொகை 1941-இல் 1,500,000; 1947-இல் (இந்திய நாடு விடுதலை பெற்ற ஆண்டில்) 4,000,000. இந்த மக்கள் பெருக்கத்திற்கு மறைமுகக் காரணம் சீனாவில் ஏற்பட்ட புயல் வேக அரசியல்—பொருளாதார மாறுதல்கள்தான் என்பர். 'தன் கையைத் தானே ஊன்றிக் கரணம் போட'த் தொடங்கிய ஆங்காங் சுண்டுவிரல் நாடு— எப்படி முன்னேறுகிறது என்பதற்குச் சிறந்த எடுத்து காட்டு: 1960-ல் 73% ஆக இருந்தது உள்ளூர்ப் பொருள்கள் ஏற்றுமதி; இப்போது 80ஆக உயர்ந்து விட்டது.

காண்டோன், ஆங்காங் ஆகிய துறைமுக நகரங்கள் தென்சீனாவில் 1,216 மைல் (1957 கி.மீ.) தொலைவிற்குப் பாயும் ஹிசிசியாங் (சியாங்-ஆறு) ஆற்றுப் படுகைப் பகுதியில் அமைந்துள்ளன. ஹிசிசியாங் வடசீனாவில் உள்ள ஆறுகள் சிலவற்றை நோக்கச் சிறிதாயினும் 173,000 ச.மைல் (448,000 ச.கி.மீ.) வண்டல் மண்டலத்தைக் கிளை ஆறுகளுடன் சேர்ந்து உருவாக்குகிறது. சுருங்கச் சொன்னால் — மேற்குறித்த வண்டல் மண்டலம் பார்வைக்கும் பயனுக்கும் நம் சோழ மண்டலத்தை—நஞ்சை நிறைந்த தஞ்சையை— ஒத்ததாகும். இப்பகுதியே தமிழ் நாட்டுத் தஞ்சை, திருச்சி மாவட்டம் போல மக்கள் தொகை நிறைந்த பகுதி ஆகும். காரணம் வெளிப்படை—முப்போகம் முகிழ்க்கும் நிலவளப் பகுதி. இப்பகுதி மேற்படி ஆறு சில இடங்களில் 280 அடி ஆழம் கூடப் பெறுகிறது. அதிக அகலமான ஓரிடம் 1,120 அடி. மேற்கண்ட ஆற்றின் விரிந்துபரந்த வண்டல் பகுதி காவிரி நாடனைய கழனி நாடாக உள்ளது; நெல்லும் கரும்பும்,

கனிகளும் காய்களும் நிறைய விளைகின்றன. இப் பகுதியில் மே, சூன் மாதங்கள் மழை மாதங்கள்' ஆம் நமக்கு அப்போது கோடை! காடுகளும் மலைகளும் நிறைந்த இந்தப் பகுதியில் மூங்கிலும் கற்பூரமும் ஏராளம். வளமார்ந்த இப்பகுதியில் மட்டும் 10,000,000 பேர் வாழ் கின்றனர். காண்டோனைத் தலைநகராகக் கொண்ட இம்மாவட்டத்தில் அயல்நாட்டு உள்நாட்டு வாணிபங் கட்குத் துணைபுரிவது ஹிசியாங் ஆறே ஆகும். கோடை மழை இப்பகுதியைக் கொழுக்கவும் செய்கிறது; கொடுமைக் குள்ளாக்கவும் செய்கிறது. இந்தப் பகுதியில் 17,18,19,20 ஆம் நூற்றாண்டுகளில் முறையே 29, 26, 36, 24 முறை வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டுள்ளன.

ஆங்காங் பகுதி தொன்மையான பகுதி; எரிமலைத் தன்மையுடையது. 136,00,000 லிருந்து 190,000,000 ஆண்டுகள் தொன்மையுடையது. இப்பகுதி திடுமென கடலிலிருந்து எழுந்ததாகும். ஆங்காங் பகுதியில் மிக உயர்ந்த மலையின் உச்சி 3,140 அடி (957 மீட்டர்கள்) செங்குத்தான மலைகள் நிறைந்துள்ள தீவு ஆங்காங். கடற்குகைகள் பாறைக் குகைகள்.

பெரிதும் மலைநிலமான ஆங்காங்கின் துறைமுக, தொழில், குடியிருப்புப் பகுதிகள் தெற்கேயும், வேளாண் மைப் பகுதி வடக்கேயும் உள்ளன.

கிழக்காசியப் பகுதி சூறாவளிக்குப் (Typhoons) பேர் போனது. நாம் காணும் புயலினும் கொடுமையான இந்தச் சூறாவளிகள் அடிக்கடி ஆங்காங்கில் ஏற்படும்.

ஆங்காங்கின் தற்போதைய நிலப்பகுதி நம் கரிகாலன் கூறியதாகப் பழைய புறப்பாட்டு புகல்வது போல, மலை அகழ்ந்து கடல் தூர்த்தலால் உண்டாகியதே. 1958 லிருந்து இம்முயற்சி பெருஞ்செலவில்—பெருவிலையில் உருவாகி வருகிறது.

ஆங்காங் நாட்டில் கி. பி. 11 ஆம் நூற்றாண்டு தொட்டுத் தொடர்ந்து இருக்கும் குடியிருப்புப் பகுதிகளும் உள்ளன; புதிய குடியிருப்புகளும் பூத்துள்ளன. பழைய குடியிருப்புகளைச் சுற்றிக் கோட்டை மதில்களும் அகழிகளும் உள்ளன. வெள்ளப் பெருக்குக்கு அஞ்சி வீடுகள் உயரத்தில் உள்ளன. அடித்தளத்தை உயரமாக்க அகழ்ந்த நிலப்பகுதிகள் அழகிய குளங்கள் ஆக்கப்படுகின்றன!

ஆங்காங்கில் பல்வேறு இனத்தவரின் மரபுகளைக் காட்டும் பல்வகைக் குடியிருப்புகள் உள்ளன. தோப்பும் குளமும் தொன்மைக் குடியிருப்புகளின் அடையாளங்கள். இக்குடியிருப்புகளில் வாழ்ந்த பழங்கால மக்கள் மலைகளில் வாழும் காற்றும் (வளி), வெள்ளத் தெய்வங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அரணாக இத்தோப்புகளைத் தோற்றுவித்தனர் என்பர். குளங்களில் உள்ள நீர், மீன் வளர்ப்பிற்கும் வேளாண்மைக்கும் பயன்படுத்தப்படுகின்றது. ஆங்காங் கோயில்களில் கடல் கடவுளர்கட்கும் இடம் உண்டு.

ஆங்காங்கில் 90% மக்கள் சீனர்கள். சீனரல்லாத ஆங்காங் மக்களுள் பெரும்பாலோர் காமன் வெல்த் நாடுகள் (இந்தியா போன்றவை), அமெரிக்கா, போர்ச்சுகல், ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து வந்தவர்கள்.

1973-இல் ஆங்காங்கிற்கு வந்து போன மக்கள் 30,000 என்றும் அவர்கள் 10,000 படகுகளில் வந்தனர் என்றும் ஒரு கணக்கு உரைக்கின்றது.

ஆங்காங்கின் பெருவளம் மீன்வளமே. மீன் ஏற்றுமதியே இங்குப் பெரியதாக நடைபெறுகிறது. தைத்த ஆடைகள் தயாரிப்பதும் பொம்மைகள் செய்வதும் பெருந்தொழில். எலெக்ட்ரானிக் சாமான்கள் தயாரித்தலும் கட்டடங்கட்டலும் பழுது பார்த்தலுமாகிய தொழில்கள் வளர்ந்து வருகின்றன.

ஆங்காங் தீவிலிருந்து கௌலோன் முநீர் நாட்டிற்குத் (தீபகற்பத்திற்கு) அடிக்கடி படகுகள் போகின்றன. ஆங்காங்கில் 1957-லிருந்து ஒரு தொலைக்காட்சி நிலையம் உள்ளது. இரு தனியார் வானொலி நிலையங்களும் ஓர் அரசு வானொலி நிலையமும் உள்ளன.

# 7

# ஆயிரங்கண்ணோன் அருங்கலச் செப்பு -II

சீனாவின் தெற்கு வாயிலாய் உள்ள ஆங்காங்கில் எண்பதுக்கு மேற்பட்ட இடங்கள் பார்த்தற்குரியன (Places of interest) என்று என்சைக்கிளோபீடியா பிரிட்டானிகா பட்டியல் செய்து நிலப்படத்துடன் (Mab) குறிக்கிறது. ஆனால், சீனாவுக்குச் செல்லுமுன் எங்கட்கு இருந்த இரண்டே நாள்களில் நானும் டாக்டர் து. நடராசனும் டாக்டர் சீனிவாசனும் முதன் முதலாகப் பார்த்து மகிழ்ந்தவை சிலவே. டாக்டர் மு. நாகநாதனுக்குத்தான் இது இரண்டாம் முறை ஆயிற்றே!

ஆங்காங்கில் யான் கண்ட காட்சிகளுள் மிகச் சிறந்தது கடலின்கண் முத்து போல் சுடர்விடும் ஆங்காங்கின் கடல்—துறைமுகக்—கப்பல் கூடத்தின் அழகுதான் நீலத்திரைக் கடலின் நித்திலமாய்—நித்திலக் குவியலாய்—விளங்கும் ஆங்காங்கைச் சுற்றிச் சுற்றி நிற்கும் சிறியதும் பெரியதுமான கப்பல்களையும், ஆங்காங் தீவுக்குள் உயர்ந்தும் தாழ்ந்தும் உயர்ந்தும் தாழ்ந்தும் மொய்த்திருக்கும் பல அடுக்குக் கோபுரங்கள் போன்ற மாளிகைகளையும் பார்க்கும் போது—பழந்தமிழ் இலக்கியங்களில் படிந்த என் கண்கட்கு— அந்நாளில் அருமைத் தமிழகத்தில் வாழ்ந்த வேந்தர்களும் வேளிருமே நினைவுக்கு வந்தார்கள். அவர்கட்குக் கடல் கடந்தும் வாழ்ந்த அக்கால மன்னர்கள் பெரியதும் சிறியதுமாக அனுப்பிய கப்பக் கப்பல்கள் என்ற நினைவே எழுந்தது.

முழங்கு கடல் முழுவதும் வரினும் வழங்கத் தவாஅ வளமுடையதாக இருந்த பூம்புகார் இப்படித்தான் இருந்திருக்குமோ என்ற கருத்தே என்னைக் கவ்வியது; என் நினைவுகளில் கவிந்தது.

மேற்கண்ட காட்சியைக் காண அமைந்துள்ள இரு வழிகள் என் கண்களையும் கருத்தையும் பெரிதும் கவர்ந்தன. ஒன்று கடலுக்கடியில் செல்லும் கரவுப்பாதை. ஓரிடத்தில் கடலைத் தூர்த்துக் கட்டப்பட்டுள்ள இப்பாதை நெடியது; பெரியது; அகன்றது; அழகியது; தூய்மையானது. இரவு பகல் எந்நேரமும் ஒளிமயமாய் உள்ள இப்பாதை மேற்கே-அல்ல-கிழக்கேயும் வளர்ந்து வரும் அறிவியல்-பொறியியல்-ஆற்றலின் வெற்றி அடையாளம்.

இரண்டாவதாக (இரண்டாந் தரமாக அல்ல) என்னைக் கவர்ந்தது கடற்சோலை (Ocean Park) என்றழைக்கப்படும் மலைமேல் உள்ள கடற்காட்சியே ஆகும்! இதைக் காண பெரியதொரு (பழனி போன்ற) மலை மீது கயிற்றுக் கூண்டுகள் (Cable Cars) வழியாகச் செல்ல வேண்டும். இக்காட்சியை இப்போது சிங்கப்பூரிலும் காணலாம் என்று சில நாட்களுக்கு முன்பு அங்கு நடைபெற்ற அறிவியல் கருத்தரங்கிற்குச் சென்று வந்த என் மகள் செப்புகிறாள்.

பச்சைப் பசேரென்று— பச்சைக் கம்பளம் போர்த்தியது போன்ற காட்சி தரும் ஆங்காங் மலை மேலே அணி அணியாய்ப் பலநிற வண்ணங்கள் (பெரிதும் சிவப்பு) கொண்டதாய் இரும்புக் கயிற்றில் தொங்கிக் கொண்டு செல்லும் அந்த வண்ணக் கூண்டுகள் செல்லும் காட்சியை இன்றைக்கெல்லாம் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு இருக்கலாம்.

வண்ணக் கூண்டுக்குள் ஏறிவிட்டாலோ முன்னும் பின்னும் செல்லும் கூண்டுகளையும் கீழே தெரியும் துறை

முகக் காட்சிகளையும்—நகரக் கோபுரக் கட்டடங்களையும் நங்கூரம் பாய்ச்சிய கப்பல்களையும்—காணும்போது இக் காட்சியைக் காணக் கொடுத்துவைத்தோமே, இந்த இன்பம் எல்லோருக்கும் கிடைக்காதா என்ற எண்ணமே தோன்று கிறது. ஒவ்வொரு வண்ணக் கண்ணாடிக் கூண்டும் தரை யிலிருந்து மலை மேலே ஒரு சமவெளித் திட்டிற்குச் செல்ல கால்மணி நேரமாவது ஆகும். அந்தச் சிறு சமவெளித் திட்டுக்குள் நுழையும் கூண்டையும் ஓரிளைஞர் தடுத்து நிறுத்தி உள்ளிருப்போரை இறங்க வைக்கிறார்; பின்னர், திரும்பும் போதும் உள்ளிருந்து இறங்குவதற்குத் தள்ளி விடுகிறார். வண்ணக் கூண்டு ஒவ்வொன்றிலும் —கடின மான பிளாஸ்டிக்/ரப்பர் பொருள் ஒன்றால் அது செய்யப் பட்டது என்று எண்ணுகிறேன்—நாலுபேர் நாலு திசை யிலும் உட்காரலாம். கண்ணாடியோ/கண்ணாடி போன்ற பிளாஸ்டிக்கோ என்று சொல்லத்தக்க மூடிய சன்னல்கள் வாயிலாகச் சுற்றிலும் உள்ள காட்சிகளைச் சிறப்பாக அந்த வண்ணக்கூண்டுப் பாதைக்கு வலமாக இருக்கும் திசையில் ஆங்காங் அழகை அள்ளிப் பருகலாம்—இது போன்ற நேரங்களில்—அப்படிச் சொல்வதை விட, இது போன்ற நேரங்களை நினைவு கூறும் நேரங்களில்- மனிதனைப் படைத்த அவனுக்கு—இரு கண்களைப் படைத்து அந்தக் கண்கட்கு அகலத்தையும் நிகலத்தையும் உயரத்தையும் ஆழத்தையும் அடக்கி ஒடுக்கிப் படமாகப் பார்த்து மகிழும் அருமைப் பாட்டை அமைத்த பெருமைமிகு இயற்கையை (இறைவனை?) எண்ணி எண்ணி வியந்து மகிழ்ந்து நன்றி பாராட்ட வேண்டியுள்ளது.

மலைமேல் அமைக்கப்பட்டுள்ள கடற்சோலையிலிருந்து கீழே இருக்கும் துறைமுகத்தைக் காணும் காட்சியே ஒப்பு யர்வு இல்லாதது. அடுத்த நிலையில் ஓரிடத்தில் குளிர்ச்சிப் படுத்தப்பட்ட (ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட) சுரங்க வழியில் ஒருபுறம் பார்த்தால் கடலுக்குள் இருக்கும் மீன் வளக் காட்சியெல்லாம் தெரிகிறது. நாமும்தான் மெரினா

வில் இருக்கும் மீன் காட்சியகத்தைப் பார்த்திருக்கிறோம். ஒரு முறை பார்த்த பின் மறுமுறை பார்க்கத் தோன்றுவதில்லை! ஏன் திரும்ப நினைத்துப் பார்க்கவும் தோன்றுவதில்லை. ஆனால் ஆங்காங் மலைமேல் இருக்கும் இயற்கை போன்ற செயற்கைக் கடற்காட்சியை நினையும் போதெல்லாம் நெஞ்சம் அங்கே வினாடி வேகத்தில் போய் விடுகிறது. உடலைக் கொடுத்த இயற்கை (இறைவன்?) உடலின் சிறந்த பகுதியாகிய இந்த உள்ளத்தையும் கொடுத்தானே; அவன் ஏனோ நமக்கு அழியாத உடலைக் கொடுக்கவில்லை? வைகுந்தத்தில் நித்திய சூரிகளாக இருக்கிறார்களாமே! 'இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் பெறினும்— அச்சுவை பெறினும் வேண்டேன்' ஆனால், ஒரு வேளை கைலாசம் வைகுந்தம் இருந்து விட்டால்! அது முடிவாகும் வரை இந்த இன்பத்தை இழப்பானேன்?

அடுத்து ஆங்காங் மலையில் ஒரு பெரிய நீச்சல் குளம் போன்ற ஒன்றில் 'டால்பின்' என்று சொல்லப்படும் பெரு மீன்களின் நடனக் காட்சிகள் காட்டப்படுகின்றன. நீருக்குள் இருந்து அம்மீன்கள் வெளிவந்து சொன்னபடி எல்லாம் ஆடுகின்றன! அழகிய பெண் ஒருத்தியை நீண்ட அந்த நீச்சல் குளத்தில் ஓரிடத்திலிருந்து மறு இடத்திற்குத் தூக்கிச் செல்கின்றன. நம் ஊர் ராஜரத்தினம் ஸ்டேடியம், சேப்பாக்கம் கிரிக்கெட் ஸ்டேடியம், நேரு ஸ்டேடியம் போன்ற பந்தயம் பார்க்கும் படிக்கட்டு அரங்குகளிலிருந்து இந்த 'டால்பின்' காட்சிகளைக் கண்டு மக்கள் களிக்கின்றனர். முக்கியமாக டால்பின் குதித்துத் தன்னை ஆட்டுவோன் கன்னங்களில் முத்தம் கொடுக்கும் காட்சிக்கு எவ்வளவு முத்துக்கள் வேண்டுமானாலும் பரிசில் வழங்கலாம்!

டாக்டர் மு. நாகநாதன், டாக்டர் து. நடராசன், டாக்டர் சீனிவாசன் ஆகியோருடன் நானும் காணற்கரிய இக்காட்சிகளைக் கண்டுவிட்டு ஆங்காங் நகருக்குத் திரும்பி

னோம். இக்காட்சிகளைக் காண கார் கொடுத்து உதவிய இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு ஆங்காங் கிளை மேலாளருக்கும் அங்குப் பணியாற்றும் நிர்மலுக்கும் நாங்கள் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆங்காங் இயற்கைக் காட்சிகளைக் கண்ட மனநிறை வோடு திரு. மறைக்காடர் வீட்டிற்குத் திரும்பிய நான் அன்றிரவு நன்றாக உறங்கினேன்.

ஆங்காங்கில் உள்ள பல கட்டடங்களைப் போலவே திரு. மறைக்காடர் இருக்கும் பல அடுக்குக் கட்டடமும் மலையை ஒட்டியே — மலைமேலேயே கட்டப்பட்டுள்ளது. பொழுது புலரும் போது— (அந்த நேரத்தைத்தான் நம் அடிவயிறு 'அலாரம்' வைத்தது போல் அறிவித்து விடுமே) சன்னல் வழியே மலையைப் பார்த்தேன்— படுத்தபடியே. செடிகளும் கொடிகளும் மரங்களும் நிறைந்த அம்மலையில் ஒரு மனிதன் மெல்ல மெல்ல இறங்கிக் கொண்டிருந்தான். அவன் உடம்பை ஆங்காங்கின் நாகரிக உடை அணி செய்ய வில்லை. இடுப்புத் துணியும் தலையில் 'முண்டாசும்' மட்டுமே இருந்தன. அவன் ஆங்காங் 'பழங்குடி மகன்' என உணர்ந்து கொண்டேன். அவன் நிறத்தாலும் உடல மைப்பாலும் சீனன் போலிருப்பினும் உடையால் தமிழன் போலத்தான் இருக்கிறான்.

நேயர்களே! 'ஆயிரங்கண்ணோன் அருங்கலச் செப்பு' அகன்றாற் போன்றே ஆங்காங் பற்றிய கட்டுரையும் அகன்று கொண்டே போய்விட்டது. விரைவில் முடிக்க வேண்டும். சீனாவிற்கு—செஞ்சீனாவிற்கு—மக்கள் சீனா விற்கு—மால்கம் ஆதிசேஷய்யா போன்ற யுனஸ்கோ வல்லாளர்களும் 'உலகில் நான் பார்க்காதநாடு சீனா' தான் என்று குறிப்பிடும் அந்த 'மூங்கில் தினா' நாட்டுக்குப் போக வேண்டும். அதற்கு முன் இரண்டு கருத்துகள்: 1.ஆங்காங் பட்டப்பகலிலேயே எவ்வளவோ அழகாய் உள்ளது? நட்ட நடு நிசியிலோ நட்சத்திர இரவாய் இன்பம் செய்கிறது!

ஈரழகும் பேரழகுதான்! 2. அமெரிக்க நூலொன்று எந்த எந்த நாடு பற்றி எந்த எந்த இதழில் எப்போது எப்போது யார் யார் என்ன என்ன தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார்கள் என்று அடைவு செய்து தருகிறது. அதன் வாயிலாக ஆங்காங் பற்றிய கட்டுரைகளைத் தேடினேன். The New Yorker என்ற இதழ் Our Far Flang Correspondents—Hong Kong Dream என்ற தலைப்பில் 1982, செப்டம்பர் 13-ஆம் நாள் இதழில் ஒரு கட்டுரையை கேலிச் சித்திரங்களுடன் வெளியிட்டுள்ளது. அதை எழுதிய 'சாப்பாட்டு ராமனாகிய ஒருவனின் (ஏன் அப்படிச் சொல்கிறேன் என்பதைச் சென்னையில் உள்ள அமெரிக்கன் சென்டரில் உள்ள அக்கட்டுரையைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள்!) சுவைக் கட்டுரையைவிடத் தமிழ்ச்சுவை நாடும் உங்கள் தோழனாகிய என் கட்டுரை உங்கட்கு எவ்வளவோ சுவைக்கும்—பயன்படும்! உறுதி!

# 8

# ஆயிரங்கண்ணோன் அருங்கலச் செப்பு-III

ஆங்காங்கில் இருந்து புறப்பட்டுச் சீனாவுக்குள் நுழையவே ஆவல். ஆனால், ஆங்காங் என்னை எளிதில் பிரிவதாக இல்லை. மறுபடியும் சீனாவிலிருந்து திரும்பி ஆங்காங் வந்துதான் டோக்கியோவிற்குப் பறக்கப் போகிறேன். என்றாலும், ஆயிரங்கண்ணோன் அருங்கலச் செப்பாய் இலங்கும் ஆங்காங் என்னை எளிதாக விடுவதாயில்லையே!

மார்ச்சு 8-ஆம் நாள் சென்னை எத்திராசு கல்லூரிக்குப் போயிருந்தேன்—சென்னைப் பல்கலைக் கழகம் ஐந்தாண்டுகட்கு ஒருமுறை தன் ஆளுகையில் உள்ள கல்லூரிகளை ஆய்வதற்காக நியமிக்கும் குழுவில் ஓர் உறுப்பினனாக.

இதனால் நான் பெற்ற பேறுகளும் மனநிறைவுகளும் பல. முதலாவதாக, திரு. வி. எல். எத்திராஜ் அவர்களின் அறிவாற்றலில் எனக்கு மெத்த மதிப்பும் ஈடுபாடும் உண்டு.

அடுத்து, என் ஒரே பிள்ளை-ஒரே மகள் - திருமதி டாக்டர் எழிலரசி பாலசுப்பிரமணியன் தன் பி. எசி. பட்டத்திற்காகப் படித்த கல்லூரி அந்தக் கல்லூரி.

இவற்றினும் பெரிது அண்மையில் அக்கல்லூரி முதல்வர் திருமதி வசந்திதேவி அவர்கள் மகளிர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமனம் செய்யப்பட்டிருப்பதே

ஆகும். (இவ்வம்மையாரும், யானும் 47—50-இல் பச்சையப்பர் கல்லூரியில் ஒருசாலை மாணவர்கள். இதுவும் என் தனி மகிழ்வுக்குக் காரணம்.)

அரசியல் கருத்து வேறுபாடுகட்கு அப்பாற்பட்ட நிலையில், நம் தமிழக முதல்வர் செய்துள்ள ஒரு பெருஞ் செயல்கள் : 1. தமிழ்ப் பல்கலைக் கழகம்; 2. மகளிர் பல் கலைக் கழகம். அவரிடம் அடியேன் எதிர்பாக்கும் இன்னுமொரு பல்கலைக் கழகம் ஊனமுற்றோர் பல்கலைக் கழகமே ஆகும். இதுவும், உலகச் சிக்கல்களை ஆய்ந்து தீர்க்கத் திட்டங்கள் வகுக்க இருப்பதுபோலவே, ஊனமுற்றோர் சிக்கல்களைத் தீர்க்கவும் அவர்கட்குப் பல்வகைப் பயிற்சிகள்/படிப்புகள் தரவும் பெரிதும் பயன்படும்.

மேற்கண்ட பின்னணியில் யான் எத்திராசு மகளிர் கல்லூரிக்குச் சென்றபோது எடுத்துக்காட்டான - முன் மாதிரியான - முறையில் நடத்தப்படும் அக்கல்லூரியின் நூலகத்திற்கு - அதிலும் நோக்கு நூல்கள் (Reference Books) பகுதிக்குப் போனேன்—எப்போதும் எனக்குள்ள வழக்கம்போல்.

அப்போது, The Great Cities — Time — Life Books — என்ற வரிசையில் இருந்த 20-க்கு மேற்பட்ட புத்தகங்களைப் பார்த்தேன். அதன் விளைவாக அவ்வரிசையிலுள்ள நூல்களில் ஒன்றாகிய Hongkong பற்றிய அரிய அழகிய புத்தகத்தை வாங்கிப் படித்தேன். ஆம்! அந்தப் புத்தகத்தின் அழகையும், அறிவையும் எவராலும் சொல்லி விளக்க முடியாது; பார்த்தால்தான் நம்ப முடியும். you see it to believe it என்பது போல.

மேலும், இப்படிப்பட்ட படப் புத்தகங்களைப் பார்க்கும்போதெல்லாம், இத்தகைய நூல்கள் தமிழில் எப்போது வருமோ என்று என் தமிழ் நெஞ்சம் ஏங்குகிறது.

யுனெஸ்கோ கூரியர்போல், இத்தகு நூல்கள் தமிழ் உள்ளிட்ட உலகமொழிகள் அனைத்திலும் வெளிவர ஏற்பாடு செய்தால், குறைந்த செலவில் நிறைந்த அறிவை உலக மக்கட்குப் புகட்டலாம். இதை யுனெஸ்கோவே செய்யலாம்.

முன்னமே நான் குறிப்பிட்டிருப்பதுபோல் என் பயணக் கட்டுரைகளைப் படிப்புக் கட்டுரைகளாகவும் அமைக்க வேண்டுமென்பதே என் அவா. இதன் காரணமாகவே, ஆங்காங்கிலிருந்து சீனாவின் துறைமுகத் தென்வாயிலாகிய காண்டோனுக்கு டாக்டர் மு. நாகநாதன், டாக்டர் து. நடராசன், திரு. டி. எம். சீனிவாசன் ஆகியோருடன் யான் புறப்படுதல் சற்றுத் தாமதப்படுகிறது. அதுவும் நேயர்கட்காகத்தான். எனவே, அறிவுத் தாகம் உடைய நேயர்கள் அதன் காரணமாகவே சற்றுப்பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன். 'பொறுத்தார் பூமியாள்வார்' ! இக்கட்டுரைகளை எழுத மணிக்கணக்காக நான் படும் பாட்டிற்கு அது ஒன்றுதானே நீங்கள் அளிக்கக் கூடிய பரிசு!

The Great Cities - Time-Life Books-என்ற வரிசையில் Hongkong பற்றிய புத்தகம் (இவ்வரிசையில் உள்ள மற்ற புத்தகங்களைப் போலவே) நமது கலைக்களஞ்சியம் / சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி ஆகியவற்றின் நீள, அகல வடிவினதாய் (டெம்மி $\frac{1}{4}$ - $10\frac{1}{2} \times 6\frac{1}{4}$) உள்ளது; மொத்தத்தில் 200 பக்கங்கள் கொண்ட இந்நூல் 120-க்கு மேற்பட்ட சிறியதும் / பெரியதும் / மிகப்பெரியதுமான வண்ணப்படங்களைக் கொண்டது ! (கேலிச் சித்திரங்களும் உண்டு !)

ஆங்காங்கின் நில அமைப்புகள், வளங்கள் அனைத்தையும் மக்கள் வாழ்க்கைப் போக்குகள் அனைத்தையும் வகைவகையாய், வண்ணவண்ணமாய்க் காட்டுவது; படங்கள் பெரிதோ, கருத்துகள் பெரிதோ என்று எண்ணும்படி செய்வது; ஆங்காங்கைக் கண்டாரும்

காணாதனவற்றைக் காட்டுவது: ஏன் ? ஆங்காங்கில் வாழ்வாரும் அறியா அழகுகளை அறிமுகப்படுத்துவது. இத்தகு தோற்றமும் ஏற்றமும் கொண்ட இந்த அரிய / பெரிய நூலின் பொருளடக்கப் பகுதியே நூலின் உடலையும் உள்ளத்தையும் உணர்த்தும்.

பொருளடக்கம் வருமாறு :

1. Place of passage- picture Essay : Modern Jewel in a Timeless Setting / பயணவழி அல்லது போக்குவரவுப் புகலிடம்—படக் கட்டுரை : காலம் கடந்த தகட்டில் பகட்டான இன்னகை.

2. The Lion and the Dragon - Picture Essay : At home in the water / அரிமாவும் வேதாளமும் (அரிமா பிரிட்டிஷ் சின்னம்; வேதாளம் பழஞ்சீனச் சின்னம்)-படக் கட்டுரை : தண்ணீரிலே தனி வாழ்வு - மகிழ்வு.

3. Money-Mad Metropolis-Picture Essay : Made in Hongkong / பணவெறிப் பெரும் பட்டினம் - படக் கட்டுரை : ஆங்காங்கில் தயாரித்தது.

4. Men, Gods and Spirits Picture Essay : Buns for the Spirits / மாந்தர், தெய்வங்கள், ஆவிகள் - படக் கட்டுரை ; ஆவிகளுக்கு மென்ரொட்டி ஆகுதிகள்.

5. An Infinitely varied Cuisine-Picture Essay : The Liveliest Show in Town / வரம்பற்ற வகைவகையான உணவுகள் - படக் கட்டுரை : நகரத்தில் மிக ஊக்கமான காட்சி.

6. Window into China-Picture Essay : City of Extremes / சீனத்தைக் காட்டும் சாளரம்-படக் கட்டுரை : மிகைப்பாடுகளின் நகரம்.

7. The Price of Progress - Picture Essay : Patterns of Living முன்னேற்றத்தின் விலை-படக் கட்டுரை : வாழ்க்கை முறைகள்.

மேற்கண்ட தலைப்புகளே ஆங்காங்கின் அழகையும் ஆற்றலையும் அறிவிக்கும்.

மேற்கண்ட பொருளடக்கம் உள்ள நூலில் பின்னடைவாகப் பயன்பட்ட 26 நூல்கள் பட்டியல் ஒன்றும் பொருள் அடைவாக இரண்டு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன (ஆம்! நல்ல ஆய்வு நூல்களில் காணப்படுவது போல— சில ஆய்வு நூல்களில் இல்லாத குறை இல்லாதது போல!)

Tbe Great Cities - Time - Life Books - Amsterdam புத்தகங்கள் ஒவ்வொரு நூலகத்திலும் இருக்கத் தக்கவை - வீட்டு நூலகங்கள் உட்பட. காரணம் உலகைச் சுற்றிய வரும் (காரணம், அவர்களும் கண்டு கேட்டு அறியாத காட்சிகளும், செய்திகளும் இருப்பதால்) - சுற்ற முடியாதவரும் கற்றற்குரிய - கற்றுக் கருத்திற்கும் கண்ணிற்கும் வேண்டும் போதெல்லாம் விருந்தாகக்கூடிய விழுமிய நூல்கள்.

பல மணி நேரங்கள்/பல நாட்கள் யான் படித்த Hong kong புத்தகத்திலிருந்து என் உள்ளங்கவர்ந்த ஒரு சில ஒளி மணிகளை மட்டும் (இடம், காலம் என்ற முதல்களின் குறைபாடு கருதி!) நேயர்கட்கு அன்பு-அறிவுக் காணிக்கை ஆக்குகிறேன் :

ஃ

நான் ஆயிரம் முறை பார்த்திருப்பினும் ஆங்காங் துறைமுக அழகு என்னை ஆட்டிப் படைக்கிறது. ஒருதலைப் பற்றுள்ள சிலர் சிட்னி, நேபள்ஸ் அல்லது சான்பிரான்சிஸ்கோ பற்றிப் புகழ்கிறார்கள். ஆனால், எனக்கு ஆங்காங்

உலகின் எந்தச் சிறந்த துறைமுகத்தினும் எழில் மிக்கதாய்த் தோன்றுகிறது. காரணம் ஒன்று முதல் ஆறு மைல் அகலமே உள்ள ஒரு நிலப் பகுதியில் நியூயார்க் போன்ற வான்முட்டும் கட்டடக் கோபுரங்கள் சரேலென எழுந்து நிற்பதுதான். இரு புறமும் இந்த நிலப்பகுதி ஆசியாவிலேயே மிக நீண்ட ஒரு மைல் நீளக் கடலடிக் கரவுப் பாதையால் (Under Water tunnel) இணைக்கப்படுதலே ஆகும்.

ஃ

மூநீர்ப் (தீபகற்பப்) பகுதியாகிய கௌலோன் ஒன்பது வேதாளங்களென்ற பெயருடையது. இதற்குக் காரணம் இது சீனாவின் தென்கிழக்குப் பகுதி முனையில் உள்ள ஒன்பது குன்றுகள் மேல் கட்டப்பட்டதாகும்.

ஃ

உலகிலேயே ஆங்காங் ஒன்றுதான் தனக்குள்ளேயே ஒரு பெரு வெடிகுண்டை வைத்திருக்கும் உலகப் பெருந் துறைமுகம். காரணம் இத்தீவுகளின் பத்தில் ஒரு பகுதி 1997-இல் சீனாவாகிவிடும்!

ஃ

ஆங்காங் தனிச் சிறப்பு வாய்ந்த துறைமுகம். காரணம் கிழக்கும்-மேற்கும், பழைய அருளியலும் புதிய அறிவியலும் கெட்டியாக அணைத்துக் கொள்ளும் இடம் அது.

ஃ

ஆங்காங் என்று ஓரிடம் இருப்பதே அற்புதம். காரணம் 404 சதுர மைல்களேயுள்ள இந்த நிலப் பரப்பில் 80% மலைகளும் குன்றுகளும்!

ஃ

நாலரை இலட்சம் மக்கள் இங்கு விடாப்பிடியாய் வாழ்கிறார்கள்! வளமாக வாழ முனைகிறார்கள். இது அவர்கள் விடா முயற்சியே! உலகிலேயே மற்றவர்கள் பொருள்களையே வாணிபம் புரிய ஆரம்பித்த இந்த இடம்-இப்போது சொந்த உற்பத்திகளையும் செய்யத் தொடங்கியுள்ளது!

ஃ

ஆங்காங் என்ற சீனப் பெயருக்கு "நறுமணத் துறைமுகம்" என்று பெயர். (இது சங்க நூல்களில் தலைவியின் நெற்றிக்கு ஊர்கள் உவமிக்கப் படுவதை நினைவூட்டும்)

ஃ

ஆங்கிலேயருக்கும், சீனருக்கும் இடையே நடந்த அபினிப் போரின் முடிவாக முதலில் 1839-42 லும் பின்னர் 1860 லும் முறையே ஆங்காங்கும், கௌலோனும் பிரிட்டிஷ் பேரரசுக்கு அடகு வைக்கப்பட்டன. ஆங்காங்கிற்கும் இலண்டனிற்கும் 7,852 மைல்கள்! பெரிய பிரிட்டிஷ் பேரரசுக்கு இந்த 29 சதுர மைல் மலைப்பகுதி - பத்து மைல் நீளமும் இரண்டு முதல் ஐந்து மைல் அகலமும் உள்ள இந்த நிலப் பகுதி எதற்கு? மேலும் அந்த நாளில் இந்தத் தீவு கடற்கொள்ளைக்காரர்கட்கும் புகலிடமாய் இருந்தது; 6,000 மக்களே இருந்தனர். கொள்ளை நோய்களுக்கும், சூறாவளிப் புயல்களுக்கும் இலக்காய் இருந்த இடம் இந்த இடம். ஆனால், இன்றோ உலகின் ஒப்பற்ற துறைமுக நகரம்!

ஃ

ஆங்காங்கில் நடைபெறும் திருவிழாக்களுக்குள்ளேயே பழையது—பெரியது பொங்கப்பத் திருவிழா. இறந்த ஆவிகளை மனநிறைவு செய்யக்

கொண்டாடப்படும் விழா இது. நம் ஊர்த் தேர்களைப் போல — இக்காலத்துச் சந்திர மண்டல இராக்கெட்டுகள் போல—அறுபதடி உயரமான மூங்கில்களில் பொங்கப்பங்களைச் சொருகி மூன்று தேர்கள்-இக்கால இராக் கெட்டுகள் போன்ற அமைப்புகள்—உருவாக் கப்படும்.

மூன்று நாள்கட்கு ஆங்காங் பழங்குடியினர் கடுஞ்சைவம் காப்பர் — அதுவரை தின்று தீர்த்த விலங்குகள் பறவைகள் ஆகியவற்றின் இன்னுயிர் அமைதி பெற!

நாலாம் நாள் இரவு ஓர் அடையாள ஒலி எழுப்பப்பட்டதும் நூற்றுக்கணக்கான இளைஞர் கள் இந்த அறுபதடி உயரப் பொங்கப்பங்களைப் பிய்த்துத் தின்பர். அது மெத்த லாபம் (அதிர்ஷ் டம்) தருமாம். உச்சியிலிருக்கும் பொங்கப்பத்தை பிய்க்க முடியாதவரும் கிடைத்தவற்றைப் பொழுது விடிவதற்குள் பிய்த்துத் தின்பராம்— கொஞ்ச அதிர்ஷ்டமும் போய்விடாது காப்பாற்ற!

ஃ

சீனா ஒரு தேசமல்ல— கண்டம்! இதன் கண்ணாடி ஆங்காங். இந்தச் சின்ன சீனாவில்— அதன் மக்கள் வாழ்க்கையில் — பழமையும் புதுமையும் உள்ளும் புறமும் ஒன்றிப் புலனா கின்றன.

ஃ

இந்த ஆங்காங்கில் பெருவிலை மிக்க வானுயர் மாடங்கள் ஒன்றின் உச்சியில் வெள்ளையர் கிரிக்கெட் விளையாடுவதையும், அதன் பின்னே பொதுவுடைமைச் சீனாவின் வங்கி இருப்

பதையும், அதில் ஐந்துமாடி உயர மாவோவின் படம் இருப்பதையும் பார்க்கலாம். இந்த வகையில் பழைய கீழைநாட்டு ஆங்காங் மெல்ல மெல்ல மறைந்து புதிய மேலை நாட்டு ஆங்காங் பூக்கிறது என்றும் சொல்லலாம்.

ஃ

கௌலோன் பக்கமுள்ள ஆங்காங் விமானத் திடல் துறைமுகத்துள் துருத்திக் கொண்டுள்ளது— 11,130' நீளம்.

ஃ

நிலப்பற்றுக் குறை காரணமாக வானுயர் கூடங்களின் மேல்தளத்தில் பந்தயக் குதிரைகள் பயிற்சி பெறுகின்றன.

ஃ

ஆங்காங் சீன மக்களை அபின் கொடுத்து அழிக்க பிரிட்டிஷ் பேரரசால் அபின் கடத்தல் தீவாகப் பயன் படுத்தப்பட்டது. தவிர அதற் கென்று பழமைச் சிறப்பு ஏதும் இல்லை! அதற்கும் முற்பட்ட சிறப்புச் சிறுமை அது கடற்கொள்ளைக் காரர்கள் புகலிடமாகப் பயன்பட்டதே ஆகும்!

ஃ

இரவு நேரங்களில் மணிமாலை போல் விளங்கும் கௌலோன்—ஆங்காங் இயற்கையின் கடல்—மலை அழகுக்கும் மனிதனின் அறிவாற்றல் திறனுக்கும் பெரிய எடுத்துக் காட்டாய் இலங் கிறது.

இயற்கையின் அழகும் செல்வ வளமும் நிறைந்த ஆங்காங்கைப் பிரிட்டிஷ் ஆளுகையி லிருந்து ஒரு குண்டைக் கூடப் போடாமல்

இரண்டு மூன்று தொலைபேசிச் செய்திகள் மூலமே சீனா தன்வசம் ஆக்கிக் கொள்ளலாம்.

ஃ

1843 சூன் 26 ஆம் நாள் ஆங்காங் பிரிட்டிஷ் காலனி ஆனது.

ஃ

ஆங்காங் மக்கள் தொகையின் சீனர் 98%

ஃ

கெளலோன் — ஆங்காங் / ஆங்காங்— கெளலோன் கடல் வெளியை இயந்திரப் படகில் கடக்க 12 மணித்துளிகளே ஆகிறது.

ஃ

ஆசியாவில் வேறெந்த ஆசிய நகரத்தினும் சீன செல்வாக்கு மிக்கது ஆங்காங்; அவ்வாறே டோக்கியோ தவிர வெறெந்த ஆசிய நகரத்தினும் மேற்கத்திய செல்வாக்கு மிக்கது ஆங்காங்.

ஃ

'ஆளப் பிறந்த இனம் ஒன்று; அடிமைப் பட்டு மாளப் பிறந்தது மற்றோர் இனம்' என்னும் பழம்பிரிட்டிஷ் திமிரைச் சுக்கு நூறாக்கி விட்டனர் ஆங்காங் சீனர்.

ஃ

உலகத்திலேயே மிக அதிகமான 'தங்கா' என்ற மக்கள் கூட்டம் ஆங்காங்கைச் சுற்றியுள்ள கடலில் பெரும் படகுகளிலேயே பிறந்து வளர்ந்து, வாழ்ந்து முடிகின்றது. ஆம்! இவர்கள் கூட்டம் ஒரு மிதக்கும் கிராமமாகவே உள்ளது.

ஃ

ஆங்காங்கில் பொம்மை செய்யும் தொழிற் சாலைகள் மட்டும் சிறியனவும் பெரியனவுமாக 3,000 உள்ளன; இவை பன்னூறாயிர வகைப்பட்ட பொம்மைகளை உற்பத்தி செய்கின்றன.

[ஆங்காங்கில் சீனப் பயணத்திற்கு முன் மூன்று நாளும் பின் மூன்று நாளும் இருந்தும் நான் ஒரு பொம்மைகூடப் பார்க்கவில்லை; வாங்கவில்லை! காரணம் பட்டிக் காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்த்தது போல் அல்லவா என் நிலை இருந்தது! உடலும் உள்ளமும் 'போதும்', 'இதுவே போதும்' என்று ஒய்ந்து ஒடுங்கும் நொய்ந்த நிலையல்லவா எந்நிலை!]

ஃ

அகதிகள் நாடாக இருந்த ஆங்காங் ஜப்பானுக்கு அடுத்தபடியாக வானொலிப் பெட்டிகளை வையகத்துக்கு வழங்கும் நாடாக வளர்ந்து விட்டது என்றால் அந்தச் சீனநாட்டு அகதிகளின் அறிவையும் ஆற்றலையும் என்னென்பது?

ஃ

ஆங்காங்கில் ஒவ்வொரு வினாடியும் கழுத்தறுக்கும்படியான போட்டிதான்! எனவே அதற்குரிய தற்காப்பு, எச்சரிக்கையாக எப்போதும் இருத்தல்தான்!

ஃ

ஆங்காங்கில் இடுகாட்டு மண்ணுக்கும் விலை அதிகம்! இடுகாடும் நிலையில்லாதது!—புதைத்த பிணத்தைச் சில ஆண்டுகள் கழித்துத் தோண்டி எடுத்து எலும்புகளை மட்டும் அடுக்கிச் சிறிய இடத்தில் மறுபுதையல் செய்கிறார்கள்.

ஃ

1970-இல் ஓராண்டில் மட்டும் - ஆங்காங்கில் 200 திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன.

ஃ

ஆங்காங்கில் ஓரிடம் (நம் சென்னைக் கடற்கரை சாலையில் இருப்பது போன்ற) ஐஸ்ஹவுஸ்.

இங்கே வட சீனாவிலிருந்து குளிர் காலத்தில் ஐஸ் கட்டிகள் கொண்டுவரப்பட்டுக் கோடைக் காலத்தில் விற்கப்பட்டன.

ஃ

'இன்பத்தை அனுபவி; செல்வத்தைச் சேர்' இதுவே ஒரு ஆங்காங் ஆள் மற்றொருவனுக்கு வழங்கும் நல்வாழ்த்து; புத்தாண்டு வாழ்த்தும் இதுவே.

ஃ

பழமைக்குப் பழமையையும் புதுமைக்குப் புதுமையையும் போற்றும் ஆங்காங்கில் எலெக்ட்ராணிக் கணிப்பிகள் (computers) வளர்ந்திருப்பது போலவே பழங்கால பில்லி, சூனிய, மந்திர, சோதிட வல்லுநர்களும் முற்றிலுமாக மாய்ந்து போகாமல் இருக்கிறார்கள். இது பற்றி இப்போது நாம் அகழ்ந்து வரும் ஆங்காங் செய்திச் சுரங்க நூலாசிரியர் கூறும் சுவையான குறிப்புகளுள் ஒன்றை மட்டும் பார்க்கலாம்.

'அந்தச் சோதிடர் - முகம் பார்த்தே குணம், வாழ்க்கைப் போக்குகள் பற்றி அறுதியிட்டு உறுதி கூறும் வல்லாளர்—எங்கள் முகங்களைப் பலமணித் துளிகள் கூர்ந்து உற்றுப் பார்த்தார். அப்புறம் சீனப் பஞ்சாங்கப்படி எங்கள் பிறந்த நாள்களைக் குறித்துக் கொண்டார். எங்கள் திட்டங்கள்—ஒரு நீண்ட பயணம், வீடு மாற்றல் இவை இந்த ஆண்டு நடைபெறாது; அடுத்த ஆண்டே நடைபெறும் என்று துல்லியமாகக் கூறினார்; அப்படியே நடந்தது. இங்கிலாந்தில் இருந்த எங்கள் குழந்தைகளின் பிறந்த நாளைக் குறித்துக் கொண்டு அக்குழந்தைகளை நேரில் அறிந்தவர் போல அவர்

களின் எதிர்காலம் பற்றி எடுத்துரைத்தார். எங்கள் அடுத்த வீட்டுக்காரர்க்கு அவர் மனைவி பொறுக்க முடியா வயிற்று வலியால் துன்பப்படுவதைப் பொறுக்க முடியவில்லை. எந்த எந்த மருத்துவமோ செய்து பார்த்து விட்டார்; பயனில்லை. ஒரு புகழ் பெற்ற சோதிடரை அழைத்தார்; அவர் நண்பர் வீட்டுக்குள் வந்து பார்த்தார்; 'வேறொன்றும் செய்ய வேண்டாம். சாலையில் உலவும் ஆவிகள் பாதையில் இருக்கும் இந்தக் கட்டிலைச் சற்று அப்பால் நகர்த்திப் போடுங்கள்; போதும்' என்றார். அப்படியே செய்தார்கள்; அம்மையாரின் அடிவயிற்று வலி உடனே பறந்து விட்டது.

(இத்தகைய நம்பிக்கைகள் நம் நாட்டிலும் உண்டு. தெற்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது என்பார்கள்; வீட்டு வாசற்படிக்கும் கோயில் வாசற்படிக்கும் குறுக்கே படுக்கக் கூடாது என்றும் சொல்லுவார்கள்.)

ஃ

இடுகாட்டில் (இடமில்லா நெருக்கடியால் ஆறாண்டுக் குத்தகைக்கு அமைக்கப்படும்) கல்லறைகளில் இறந்தவர்கட்கு விருப்பமான உணவுப் பொருள்களைப் படைத்து வழிபாடு செய்தல் பழஞ்சீனப் பண்பாடு. அதன்படி அப்பழமையில் ஊறிய ஆங்காங் சீனர்கள் இன்றும் வழிபாடு நடத்துகிறார்கள்.

(நம் ஊர் மசானக் கொள்ளைதான்)

ஃ

சீனப்புராணக் கதைகட்கும் பைபிள் புராணக் கதைகட்கும் இடையே சிறப்பு வாய்ந்த ஒப்புமைப் பகுதிகள் உள்ளன. (பிரளயக் கதை — சீர்காழி

தோணீசுவரர் கதை நம் நாட்டிலும் உண்டு! உலகெங்கும் உண்டு!)

ஃ

சீனர்களிடை அடுப்பங்கரைத் தெய்வங்கள் என்றே ஒருவகைத் தெய்வங்கள் உண்டு!

ஃ

சீனர்களிடம் புத்தாண்டு நாளில் வீட்டைக் கூட்டிப் பெருக்கக் கூடாது என்ற நம்பிக்கை இருக்கிறது. காரணம் அப்படிச் செய்தால் ஆகூழ்/அதிர்ஷ்டம் போய்விடும் என்று அஞ்சுகிறார்கள். (இதையொத்த நம்பிக்கைகள் நம் நாட்டிலும் உண்டு. எடுத்துக்காட்டாக, எந்த நாளும் பொழுதுபோய் வீட்டைக் கூட்டக் கூடாது என்பார்கள்! வீட்டுக்குரியவர்கள் புறப்படுமுன் வாசலைக் கூட்டிப் பெருக்கித் தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டுவிட வேண்டும் என்பர்). ஆனால் நாம் நம்பாதது — பின் பற்றாதது, பழமையாகச் சீனப் புத்தாண்டு நாள் கெட்ட நாள் என்பது. மேலும் பழமையாகத் தீய சக்திகளைத் துரத்த வெடிகள் வெடிப்பார் பார்க்கலாம்; மருந்துப் பொருள்களைப் போட்டுக் கொதிக்க வைத்த நீரில் குளிப்பார்களாம்; இரவெல்லாம் விளக்குகளை ஏற்றி வைத்து இருள் இல்லாமல் செய்வார்களாம்; கத்தி போன்ற பொருள்களை மறைத்து வைப்பார்களாம். தங்கட்கு வரக் கூடிய தீங்குகளைத் தவிர்க்க.

ஃ

சின்னஞ்சிறு ஆங்காங் தீவில் மட்டும் பௌத்தம் முதலிய பழைய சமயங்களைப் பின்பற்றுவோர்க்காக ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன!

ஃ

பழஞ்சீனர்களின் மூடநம்பிக்கைக்கு ஒரு சான்று: பெரும்பாலோர் சீனப் புத்தாண்டின் போது 'தொங்கும் மணிகள்' எனப்படும் வெண் மலர்களை வீடுகளை அணி செய்யப் பயன்படுத்துவர். ஆனால் சிலர் இதற்கும் அஞ்சுவர். காரணம் 'தொங்கும் மணிகள்' என்ற தொடரில் உள்ள 'தொங்கும்' என்ற சொல் தூக்குக் கயிற்றை அவர்கட்கு நினைவூட்டி அச்சுறுத்துகிறதாம்! (இத்தகைய சொல் தொடர்பான மூட நம்பிக்கை தமிழர்களிடமும் உண்டு. எடுத்துக் காட்டு: 'இல்லை', 'போகிறேன்' என்று சொல்ல மாட்டார்கள். பிச்சை கேட்போரிடமும் 'வேறிடம் பார்,' 'கை வேலையாய் இருக்கிறது,' 'அப்புறம் வா,' 'போய்வா' என்றே கூறுவர்)

ஃ

கேரளத்தில் ஓணத்தின்போது வள்ளங்கள் (படகுகள்) போட்டி நடப்பது போல வேதாளப் போட்டிப் படகு ஆங்காங்கில் கோடை தொடங்கும்போது (மார்ச்சு 14 முதல் எனலாம்) நடக்கும். இது 2300 ஆண்டுகளாக நடைபெறுகிறது எனலாம். அண்மைக் காலத்தில் மகளிர் மட்டுமே கலந்து கொள்ளும் வேதாளப் படகுப் போட்டிகளும் நடைபெறுகின்றன.

ஃ

சீனர்கள் ஆண்டுதோறும் வேதாளப்படகுப் போட்டி நடத்துவதற்கு ஒரு 'நெஞ்சை அள்ளும்' வரலாற்று நிகழ்ச்சி கூறப்படுகிறது. அது வருமாறு: சூயன் என்பவர் ஒரு புகழ் பெற்ற கவிஞர்; கி.மு. 400-இல் இருந்தார். அக்கவிஞர் சூயூ என்ற கொடுங்கோல் மன்னனின் ஆட்சியைக் கண்டித்து

ஒரு பெரும் ஏரியில் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டார். அதை அறிந்த சீன மீனவர்கள் அவர் திருவுடலைத் தேடி தேடித் துழாவினர்-படகுகளில். ஆனால் புரட்சிப் புலவரின் உடல் கிடைக்கவில்லை. அதனால் மனம் நொந்த சீன மீனவர்கள் நீரிலிருக்கும் தீய ஆவிகளால் கவிஞரின் ஆன்மாவுக்குக் கேடுகள் ஏதும் ஏற்படாமல் அமை தியாக இருக்கப் பொங்கிய சோற்றை! அரிசி அப்பங்களைத் தாமரை இலையில் பொதிந்து போடும் பழக்கத்தை மேற்கொண்டனர். (சீனாவில் நாங்கள் பெரிய பெரிய தாமரைக் குளங்களைக் கண்டோம்!)

ஃ

பதினான்காம் நூற்றாண்டில் சீனாவை ஆண்ட மங்கோலியரை எதிர்த்து மக்கள் புரட்சி புரிந்தனர். அப்போது ஒரே நேரத்தில் கோவில்களின் உச்சியில் விளக்குகளை ஏற்றிப் புரட்சிக்கு அறிவிப்புக் கொடுத்தனர்! அதை நினைவூட்டும் வகையில் இப்பொழுதும் ஒரு முழுநிலா நாளில் ஆங்காங்கில் இருக்கும் சீனர்களும் பலவகையான பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள், மீன்கள், வேதாளங்கள், சிங்கங்கள், யானைகள், தேர்கள், இக்கால உந்து வண்டிகள், ஏன்?—போர் டாங்கிகள் போன்ற வடிவங்களில் விளக்குகள் ஏற்றி விழாக் கொண்டாடுகின்றனர். (மேற்கண்ட சில குறிப்புகள் சீனாவில் புரட்சி மரபே ஒன்றியிருந்ததை ஆராயத் தூண்டும். நம் நாட்டில் காந்தியடிகளின் அகிம்சைக்கு ஒரு பின்னணி இருந்தது போலச் சீனாவையும் மக்கள் / செஞ்சீனாவாக மாவோ மாற்றுதற்கும் ஒரு புரட்சிப் பின்னணி இருந்திருக்கிறது. (இது அண்மையில் சீனாவுக்குச் சென்றதாலும் அது தொடர்பான வரலாற்று நூல்களைப் படிப்பதாலும் எனக்கு ஏற்பட்டிருக்கும் தெளிவு!)

இறந்தோர்களின் ஆவிகட்காக ஆங்காங் சீனர்கள் கொண்டாடும் விழாக்களுக்குள்ளேயே சிறப்பானது 60 மூங்கில் கம்புகளில் பொருத்தப்பட்ட பொங்கப்பங்களைப் பொழுது புலருமுன் சாடிப் பிடித்துப் பிய்த்துத் தின்பதே ஆகும்.

ஃ

ஆங்காங் சீனர்கள் 'சாப்பாட்டு ராமன்கள்'! முன்னம் ஓர் அமெரிக்கர் 'ஆங்காங் அனுபவங்கள்' பற்றி எழுதிய கட்டுரையைப் பார்த்துச் 'சாப்பாட்டு இராமன்' என்று அவரை வைதேன்! அது தவறு; மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். காரணம் ஆங்காங் சீனர்களே 'சாப்பாட்டு இராமன்கள்' தான்! ஆங்காங் பலவற்றுக்கும் புகழ் பெற்றிருப்பது போலவே சாப்பாட்டுக்கும் பேர் பெற்றது. ஆங்காங் சீனர்கள் 'வாழ்வதற்காகச் சாப்பாடு' என்று நினைப்பதில்லை; 'சாப்பிடுவதற்கே வாழ்க்கை' என்று நினைக்கிறார்கள்.

ஃ

ஆங்காங்கில் 'கெட்ட சாப்பாட்டுக் கடை'யைக் காண்பது அரிது.

ஃ

ஆங்காங்கில் ஒரு கடையில் 253 வகை 'நூடுல்கள்' நூலிழைகள் போன்ற-இடியாப்பம் போன்ற - உணவு வகை உண்டு. ஆங்காங்கில் எந்த ஓர் உணவு வகையையும் இரண்டாம் முறை சாப்பிடாமல் வேறு வேறு வகையான உணவுகளை வேறு வேறு உணவு விடுதிகளில் இரண்டாண்டுகள் தொடர்ந்து உண்ணலாம்! இந்த அவிழ்சுவை இப்போதும் ஆங்காங்கில்தான் மிக அதிகம். ஒரு காலத்தில் பீகிங்கும் போட்டியாகத்தான் இருந்

இருந்தது. இப்போதோ - பொதுவுடைமை காரணமாக வாய்ச் சுவையும் கட்டுப் படுத்தப்பட்டு விட்டது!

ஃ

'உனக்குக் கோதுமை, எள், பார்லி, மொச்சை, அரிசி ஆகியவற்றின் 'வேறுபாடு தெரியாது' என்று ஒரு சீனன் மற்றொரு சீனனைச் சொல்வதே பெருத்த அவமதிப்பாகக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகவே கருதப்பட்டு வருகிறது! (முக்கனிகட்கு இடையே வேறுபாடு அறியாத ஒரு தமிழ்ப் பேராசிரியரைப் போல மேற்கண்ட தானியங்கட்கிடையே வேறுபாடு தெரியாத ஒரு அமெரிக்க சீனவியல் பேராசிரியர் நாணினாராம்)

ஃ

---

குறிப்பு : 'ஒற்றுமை ஒளி' என்னும் மாத இதழில் தொடர்ந்து வெளிவந்த இந்தத் தொடர் கட்டுரை, பேராசிரியருக்கு இருந்த பல்வேறு பணிகளின் காரணமாகத் தொடராமல் நின்றுவிட்டது.



சீன நாட்டில் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி



ஹாங்காங்கிலிருந்து காண்டன் நகருக்குப் பேராசிரியர் பயணம் செல்லல்

II

# செந்தமிழ்ப் பாரதி போற்றிய சீனத்துச் சியூசின்

(கலைக்கதிர், சனவரி 1983 - இதழில் வெளிவந்தது.)

அண்மையில் மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் சி. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் டாக்டர் மு. நாகநாதன் அவர்கள் முன் முயற்சியால் மக்கள் சீனத்திற்கு அந்நாட்டு அரசின் அன்பார்ந்த அழைப்பின் பேரில் செல்லும் பெரும்பேறு எளியேனுக்கும் கிடைத்தது. சீனா செல்ல வேண்டும் என்றதுமே பெருங்கவிஞர் பாரதியார் தம் கட்டுரைப் பகுதியில் போற்றிப் புகழ்ந்துள்ள சீனத்து வீரப் பெண்மணி சியூசினைப் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற பேரவா பிடர் பிடித்து உந்தியது.

1918-ஆம் ஆண்டு மே மாதம் 13-ஆம் நாள் தேதியிட்டுப் பெருங்கவிஞர் பாரதியார் புதுவையில் நடைபெற்ற பெண்கள் உரையாடல் கூட்டம் ஒன்றின் நிகழ்ச்சிகளைத் தெரிவித்துள்ளார். அதில் பாரதியார் தம் இரு கண்மணிகளனைய பெண்மணிகளாகிய திருமதிகள் - அப்போது செல்விகள் - தங்கம்மாள் பாரதி, சகுந்தலா பாரதி ஆகிய இருவரின் வாயிலாகவும் சீனத்து வீரப் பெண்மணி சியூசினைப் பற்றிய செய்திகளை முதன்முதலாகத் தமிழ் உலகத்துக்குப் பாரதியார் தெரிவித்துள்ளார் - இல்லை, அறிமுகப்படுத்தியுள்ளார். ஆனால் அறிமுகமே பெருமுகம்! இதில் பெருங்கவிஞர் பாரதியார் 'THE ASIATIC REVIEW' என்ற ஆங்கில இதழில் சியூசினைப் பற்றி வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையில் உள்ளத்தைப் பறிகொடுத்து அவ்வாங்கிலக் கட்டுரையில் உள்ள செய்திகளைத் தமிழுலகம் உடனடியாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற பேராவலால் அக்கட்டுரையின் சுருக்கத்தைத் தம் தலைமகள் தங்கம்மாள் பாரதியின் வாயிலாக வடித்துள்ளார் என்று விளங்குகிறது. அவ்வாறே பெருங்கவிஞர் பாரதியார் தாம் படித்த ஆங்கிலக் கட்டுரையில் உள்ள சியூசினின் கவிதைகளுள் மூன்று பாடல்களைத் தமிழ் கவிதையாக்கித்

தம் இளைய மகள் சகுந்தலா பாரதியைக் கொண்டு மேற்படிப் புதுவைப் பெண்கள் கூட்டத்தில் பாடும்படியும் செய்துள்ளார். சீனமொழிப் பாடல்கள் மூன்றை முதன் முதலாகத் தமிழ் பாடல்களாக்கியது இந்நிகழ்ச்சியின் போதுதான் என்றும் துணியலாம். இவ்வழகிய பாடல்களை மேற்குறித்தவாறு பாரதியின் கட்டுரைகள் தொகுப்பில் 'பெண்கள் சம்பாஷணைக் கூட்டம்' என்ற தலைப்பில் பார்க்கலாம். 1954-இல் வெளிவந்த சென்னை அரசாங்க வெளியீடாகிய 'பாரதி நூல்கள்-கவிதை'த் தொகுப்பில், மூன்றாம் பாகத்தில் 'சமூகம்' என்ற பிரிவில் 'பெண் விடுதலை' என்ற தலைப்பில் 263-ஆம் பக்கத்திலும் இந்த அழகிய பாடல்களைக் கண்டு மகிழலாம். அவை வருமாறு ;

**பெண் விடுதலை**

விடுதலைக்கு மகளிரெல் லோரும்
 வெட்கைகொண்டனம்; வெல்லுவம் என்றே
திடமனத்தின் மதுக்கிண்ண மீது
 சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்.
உடையவள் சக்தி ஆண்பெண்ணிரண்டும்
 ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்;
இடையிலேபட்ட கீழ்நிலை கண்டீர்:
 இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?
திறமை யால்இங்கு மேனிலை சேர்வோம் ;
 தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம் ;
 குறைவி லாது முழுநிகர் நம்மைக்
 கொள்வ ராண்க ளெனிலவ ரோடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
 திரும்ப வெல்வதில் சேர்ந்திங் குழைப்போம் ;
அறவி ழுந்தது பண்டை வழக்கம் ;
 ஆணுக் குப்பெண் விலங்கெனும் அஃதே.
விடியு நல்லொளி காணுதி நின்றே,
 மேவு நாக ரிகம்புதி தொன்றே ;

கொடியர் நம்மை அடிமைகள் என்றே
    கொண்டு, தாம்முதல் என்றனர் அன்றே.
அடியொ டந்த வழக்கைக் கொன்றே,
    அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர், நந்தேசத்து வீரக்
    காரிகைக் கணத்தீர், துணிவுற்றே.

இப்பாடல்கள் பற்றி மேற்படி அரசாங்க வெளியீட்டில் அநுபந்தம் மூன்றில் விளக்கக் குறிப்புகள் என்ற தலைப்பில் பின்வரும் குறிப்பு காணப்படுகிறது. அது வருமாறு :

> சியூசின் என்பாள் சீன பாஷையில் பாடிய பாட்டின் மொழி பெயர்ப்பு. பாரதி கட்டுரைகளில் 'சியூசின் செய்த பிரசங்கம்' என்ற பகுதியில் இப்பாடல் உள்ளது.

இந்தச் சீனத்து வீராங்கனை சியூசின் யார்? இவரைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளவே இக்கட்டுரையின் தொடக்கத்தில் சுட்டியவாறு யான் சீனப் பயணத்தையே மேற்கொண்டேன் என்றால் மிகையாகாது. எனவே, பீஜிங் (Bejing/Peking) விமான நிலையத்தில் இறங்கியதும் வரவேற்க வந்திருந்த சீன நண்பர்களிடம் இந்த வீரப் பெண்மணியைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதே என் முதல் வேலை என்று குறையிரந்தேன். அவர்களும் என் இதயத் துடிப்பை உணர்ந்து கொண்டு உடனடியாக உதவுவதாகக் கூறினார்கள். ஒரு சில நாள்களிலேயே சீனாவின் மிகச் சிறந்த பட இதழாகிய ஓர் இதழில் சியூசினின் படம் இருப்பதைக் கொண்டு வந்து காட்டினார்கள். அதன் ஒரு படியையும் அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். அடுத்த சில நாள்களிலேயே சியூசின் பற்றி உலகப் புகழ் பெற்ற சீன வெளியீடாகிய 'Chinese Litrature' என்ற திங்கள் இதழின் ஜூலை 1982 வெளியீட்டை என்னிடம் மகிழ்ச்சியோடு கொண்டு வந்து கொடுத்தார்கள். ஆம், ஜூன் மாதத்திலேயே வந்து விட்ட ஜூலை இதழைக் கொடுத்தார்கள்! காரணம் அந்த இதழில் சியூசின் பற்றி ஓர் அருமையான ஆய்வுக் கட்டுரை இருப்பதுதான். இந்நிகழ்ச்சியை அடுத்து

பீக்கிங்கில் இருக்கும் மிகப்பெரிய வரலாற்று அருங்கலை அகத்தை (museum) நாங்கள் பார்க்க நேர்ந்தது. அவ் வருங்கலை அகத்தில் இக்காலச் சீனத்தின் வரலாறு பற்றிய பகுதியில் சியூசினின் படம் இருக்கும் செய்தியைச் சொன் னார்கள். மாலை ஐந்தாகிவிட்டபோதிலும் அப்படத்தைப் பார்க்கவேண்டுமென்று நான் ஒற்றைக்காலில் (உண்மை யாகவே இடதுகால் வலியால் நொண்டியாக) நின்றதை உணர்ந்து அந்த அருங்கலையகத்தின் தலைவர் அவசர அவசரமாக அந்தப் படத்தைக் காட்ட என்னை அழைத்துச் சென்றார். படத்தைப் பார்த்தேன். ஆம் கயிலை கண்ட காரைக்கால் அம்மையார் ஆனேன். இல்லை! இல்லை! மாஸ்கோ கண்ட ஜீவா ஆனேன்? அந்தப் படத்தின் அடியில் நானும் அருங்கலைக் காட்சியகத்தின் தலைவரும் கைகோர்த்து நிற்பதை டாக்டர் மு. நாகநாதன் அவர்கள் அழகாகப் படம் பிடித்தார்கள். பாவேந்தர் 'தமிழச்சியின் கத்தி' கற்பனையில் பிறப்பதற்கு முன்பே சீனச்சியின் செங்கத்தி உண்மையிலேயே உண்டாகி யிருத்தலைக் காணலாம். அத்துடன் சியூசின் பற்றிய சீனக் கலைக்களஞ்சியம் ஒன்றிலே வெளிவந்துள்ள ஒரு குறிப்பை பீக்கிங் வானொலி நிலையத்தில் தமிழ்ப்பகுதியில் பணி புரியும் திரு. வாங்போசி அவர்கள் (இவரை நாங்கள் மா.பொ.சி. என்றும் அழைத்து மகிழ்ந்தோம்) தமிழில் மொழி பெயர்த்துத் தம் கைப்பட எனக்கு எழுதிக் கொடுத் துள்ளார்கள். அந்தச் சீனர் படைத்துள்ள செந் தமிழ் ஆக்கம் வருமாறு:

சியூசின், 1879இல் செகியாங் மாநிலத்து சௌசியிங் நகரத்தில் பிறந்தவர். 1904 இல் (சிங் வம்சத்தில்) அவள் படிக்க யப்பானுக்குச் (ஜப்பானுக்குச்) சென்றாள். யப்பானில் தங்கியிருந்தபோது சீன மாணவி மாணவர் களால் ஸ்தாபனம் செய்யப்பட்ட புரட்சிகர நடவடிக்கை களில் அவள் சுறுசுறுப்பாகக் கலந்து கொண்டாள். 1905இல் அவள் மகத்தான ஜனநாயகப் புரட்சிவாதி டாக்டர்

சென்யட்சன் தலைமையிலுள்ள ''கூட்டணி லீக்கில்'' சேர்ந்தாள். 1906இல் சீன மாணவர்களை விரட்டி யடித்த யப்பான் அரசாங்கத்தை எதிர்த்துத் தாய்நாடு திரும்பினாள். அவள் சாங்ஹையில் (சீன மாதர்) என்ற பத்திரிக்கையை நடத்திப் பெண்ணுடைய உரிமையை வென்றெடுக்க புரட்சியைப் பிரச்சாரம் செய்தாள். 1907இல் அவள் சௌசியிங்குக்குத் திரும்பினாள். அங்கு தா டுங்' பள்ளிக்கூடத்துக்குத் தலைமை வகித்தாள். இந்தப் பள்ளிக்கூடத்தைப் பயன்படுத்தி, ஜின்குவா, லென் சி ஆகிய இடங்களிலுள்ள கட்சிகளுடன் தொடர்பு வைத்து ''மறுமலர்ச்சிப் படை'' ஒன்றை ஸ்தாபித்து, அன் ஹியூ சௌகியாங் ஆகிய மாநிலங்களில் கிளர்ச்சியை எழுப்பத் தயாரிப்புச் செய்தாள். 1907 ஜூலை மாதத்திலே இக் கிளர்ச்சித் தோல்வியடைந்தது. சிங்வம்ச அரசு அன் ஹியூ மாநிலத்துக்கும் செங்கியாங் மாநிலத்துக்குமிடையிலுள்ள ரகசியமான தொடர்பைக் கண்டுபிடித்துப் படைகளை (துருப்புகளை) அனுப்பி ''தாடுங்'' பள்ளிக்கூடத்தைச் சுற்றி வளைத்துச் சியூசின்னைக் கைதுசெய்தது. சிறையில் அடைக்கப்பட்டபோது அவள் அடிபணியாமலிருந்து உறுதி யாக போராட்டம் நடத்தினாள். 1907 ஜூலை மாதத் தின் 15 ஆம் தேதியன்று அவள் சௌசியிங் நகரத்தின் (Xuandingkow) வாசலில் கொலை செய்யப்பட்டாள்.

முப்பத்தொன்பது வயதே வாழ்ந்த பெருங்கவிஞர் பாரதியாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் இந்த நேரத்தில் இருபத்தொன்பதாம் வயதிலேயே தம் புரட்சிப் பணிகளுக்காக நடுவிதியில் தலைவேறு உடல் வேறாக வெட்டப்பட்ட வீரக் கவிதைகளும் கட்டுரைகளும் எழுதிய வீர எழுத்தாளர் சியூசினைப் பற்றிய இந்த விவரங்கள் வெளிவருவது அவருக்கும் தமிழ் மக்களுக்கும் பெருமை தருவதாகும். காரணம் தமிழ் இலக்கிய வாலாற்றில் கண்கூடான உலகப் பார்வை படைத்த முதல்வர் பாரதியார் தான். அத்துடன் முதல்முதலாகச் சீன இலக்கியத்தைத் தமிழ் இலக்கிய உலகத்திற்குத் தந்த தலைவரும் அவர்தான்.

THE ASIATIC REVIEW - Aug. 15, 1917

# CH'IU CHIN: A CHINESE HEROINE *

By LIONEL GILES, M.A., D.Litt.

The revolution that changed the face of China in 1911 was only the culminating wave of a movement which had grown steadily in volume for several years, and was heralded by a number of sporadic outbreaks the significance of which was not altogether apparent at the time. The real awakening of China may be said to date from the disastrous war with Japan in 18ɟ4, which was soon followed by territorial agression on the part of the great European Powers. The Reform Edicts of Kuang Hsu seemed to open a door to the new aspirations of the Chinese people, but all hopes were dashed by the return of the Empress-Dowager to power. The "Boxer" explosion of 1900 was directed at first against the throne, and it was only by consummate craft on the part of the Manchu Government that it was turned into a war of extermination against the foreigner. When China emerged, broken and breathless from the unequal fray, saddled with a curshing indemnity, bankrupt and discredited as a civilized nation, she realized the extent to which she had been hoodwinked by her rulers. The anti-foreign animus gradually died away, for the Chinese knew that the real ememy they had to reckon with was within their gates. It became the aim of every patriot to shake off Manchu incubus.

* A paper read before the China Society at Caxton Hall, Westminster, Mrs. Archibald Little in the chair.

# III

# ஜெர்மன் தரும் சிந்தனைகள்

(ஜூனியர் விகடன் இதழில் வெளிவந்த தொடர்)

# 1

# கதேயின் காதலி

கிழக்கு ஜெர்மனியில் உள்ள வைமார் என்ற இடத்தில் நடைபெற்ற கல்வி பற்றிய கருத்தரங்கில் கலந்து கொள்ளவும், மூன்று வாரக் கல்விச் சுற்றுலா செய்யவும் இந்தியா, நேபாளம், ஜோர்டன், பிலிப்பைன்ஸ், ஸ்ரீலங்கா கானா ஆகிய நாடுகளிலிருந்து அழைக்கப்பட்ட 18 கல்வி யாளர்களுள் ஒருவனாக நான் சென்றிருந்தேன். இந்தியா விலிருந்து ஆறு பேர் சென்றோம். அவர்களுள் நானொரு வன் தான் தென்னிந்தியன்— தமிழன்.

சென்ற மே மாதம் 29-ம்தேதி டெல்லியிலிருந்து காலை 10மணிக்கு விமானம் மூலம் மாஸ்கோவுக்குப் பயணமா னோம். ஆறு மணிநேரப் பயணத்திற்குப் பிறகு மாஸ்கோ போய்ச் சேர்ந்தோம். அப்போது மாஸ்கோவில் நேரம் இரவு 8 மணி. ஆனால், மாஸ்கோ நகரமே பட்டப் பகல் போல வெளிச்சமாக இருந்தது. சூரியன் மறையவில்லை! இரவு 10-30 மணிக்கு மேல்தான் அஸ்தமனம் ஆகுமாம். இங்கு உள்ள ஓட்டல்கள், வீடுகள் ஆகியவற்றில் உள்ள ஜன்னல்களில் கறுப்புத் திரைகள் தொங்கிக் கொண்டிருப் பதைப் பார்த்தோம். மாஸ்கோ வாழ் மக்கள் இப்படித் திரைகளைப் போட்டுக் கொண்டு அறைகளை இருட் டாக்கிக் கொண்டு தூங்குகிறார்கள்!

அன்றே மாஸ்கோவிலிருந்து புறப்பட்டு, இரண்டு மணி நேர விமானப் பயணத்திற்குப் பிறகு கி. பெர்லினை அடைந்தோம். இங்கும் மாஸ்கோவைப் போல் சூரியன் காலை 4மணிக்கே உதயமாகி, இரவு 10மணிக்கு மேல்தான் மெல்ல மெல்ல மறையத் தொடங்குகிறது.

ஜெர்மன் நாடு ஒரே நாடாக இருப்பதை வல்லரசுகள் விரும்பவில்லை. கிழக்கு ஜெர்மனியும் மேற்கு ஜெர்மனியும் ஒன்றாகி விட்டால் மீண்டும் உலகப்போர் ஆரம்பமாகி விடும் என்று அமெரிக்காவும் ரஷ்யாவும் பயப்படுவதாக கி.ஜெர்மன் மக்கள் தெரிவித்தார்கள்.

கி. பெர்லினிலிருந்து 300 கி.மீ. தூரத்தில் உள்ள வைமார் என்ற இடத்திற்கு வேன் ஒன்றில் சென்றோம்.

கிழக்கு ஜெர்மனியிலிருந்த மூன்று வாரங்களிலும் எனக்குத் தேவைப்பட்டதெல்லாம் இரண்டு வேட்டிகளும் இரண்டு சட்டைகளுமே! அந்த நாட்டில் எங்கு சென்றாலும் மிக மிகச் சுத்தமாகக் காணப்பட்டதே இதற்குக் காரணம். தெருக்களில் புழுதியே கிடையாது; எவ்வளவு நடந்தாலும் வியர்வையும் கிடையாது.

அங்கே நான் சென்ற எல்லா இடங்களிலும் குடிப்பதற்குப் பீர் மட்டுமே கொடுத்தார்கள். தண்ணீர் வேண்டும் என்று குறிப்பாகக் கேட்டால், புட்டிகளில் அடைக்கப்பட்ட மினரல் வாட்டரைத் தருகிறார்கள். இந்த நீர் குடிப்பதற்குச் சற்று உவர்ப்பாக இருந்தது.

கருத்தரங்கு மே மாதம் காலை 8-30 மணிக்கே துவங்கியது. அப்போது என் எண்ணம் நம் நாட்டை நோக்கிப் பறந்தது. இங்கு நடைபெறும் கருத்தரங்குகள் காலை 11 மணிக்குத்தான் துவங்குகின்றன. அப்போது நம்மவர் பலர் வருவதில்லை. ஆனால் அங்கோ 8-30 மணிக்குச் சற்று முன்பாகவே அரங்கு நிறைந்து விட்டது.

கருத்தரங்கு ஒரு நாள் மட்டும்தான் நடைபெற்றது. அந்த நாட்டின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்கள் பேசினார்கள். ஜெர்மனியின் வரலாறு, சோசலிஷப் போராட்டம், இரண்டாக உடைந்த பின் கிழக்கு ஜெர்மனியின் பொருளாதார நிலை, கல்வி மற்றும் மக்களின் வாழ்க்கை—இப்படிப் பல விஷயங்களைப் பற்றி விரிவாக

வும், சுவாரஸ்யமாகவும் பேசினார்கள். கருந்தரங்கு நடை பெற்ற வைமார் நமது காஞ்சிபுரம், மதுரை ஆகிய இடங் களைப் போலக் கலாச்சாரத் தலைநகரமாகத் திகழ்கிறது.

உலகப் புகழ் பெற்ற மேதை 'கதே' வாழ்ந்த இடமும் வைமார்தான். கதே நம் பாரதியைப் போன்றவன். கதே மகாகவி மட்டும்தான் என்று எண்ணியிருந்தேன். அந்த நாட்டிற்குச் சென்ற பின்தான் அவன் வைமார் குடியரசில் ஒரு மாபெரும் தலைவனாகவும் திகழ்ந்தான் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாகவி கதேயின் புகழ் பாடாத ஜெர்மனியனே இல்லை எனலாம்.

கதே பிரதமராக இருந்தபோது, அவனுக்கு ஒரு காதலியும் உண்டு. ஷீன் என்ற அந்தப் பேரழகி மிகப் பெரும் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அரச குடும்பத் தோடு தொடர்பு கொண்டவள். அவள் கணவன் படைத் தலைவனாகப் பணியாற்றி வந்தான்.

ஷீனைக் காண்பதற்காகவே அந்த மகா கவிஞன் தினமும் குதிரையில் நீண்ட தூரம் சென்று வருவானாம். இவ்வளவு பெரும் புலவனாகத் திகழ்ந்த கதே, சாவைக் கண்டு மிகவும் அஞ்சினான். தானும் ஒருநாள் சாகப் போகிறோம் என்பதை அவன் நினைத்துப் பார்க்கவே பயந்து நடுங்குவானாம்.

அவனுடைய காதலி ஷீன் இதை நன்கு அறிந்திருந் தாள். கதே இறப்பதற்கு ஏழாண்டுகளுக்கு முன்பே ஷீன் காலமாகி விட்டாள். தன் அந்திம காலம் நெருங்கி விட்டது என்பதை அறிந்த ஷீன், ஒரு நீண்ட உயிலைத் தயார் செய்தாள்—

"எனது முடிவு நெருங்கி விட்டது. நான் இறந்ததும் எனது உடல் அடக்கம் செய்யப்பட

வேண்டிய இடுகாட்டுக்குப் போகும் வழியில்தான் எனது அன்பிற்குரிய கதேயின் வீடும் உள்ளது. நான் சவமாகச் செல்வதைக் காண கதே ஒரு போதும் விரும்பமாட்டார். அந்தக் காட்சியை அவரால் தாங்க முடியாது. சாவைக் கண்டால் அஞ்சி நடுங்கும் கதேயை மேலும் கலங்க விடாதீர்கள்.

என் உடலை இடுகாட்டிற்கு வேறு ஏதாவது வழியில் எடுத்துச் செல்லுங்கள். கதே சற்று நிம்மதியாக இருக் கட்டும்!'

—இப்போதும் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்த உயிலைப் படித்துப் பார்த்தபோது, என் கண்களில் நீர் வழிந்தது.

மிகப் பெரும் அறிஞராகப் போற்றப்பட்ட ஷில்லரும் இங்கு வாழ்ந்தவர்தான். ஷில்லரும் கதேயும் சம காலத்த வர்கள். நெருங்கிய நண்பர்கள். ஷில்லரின் கல்லறைக்கு மிக அருகிலேயே தமது உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று விரும்பினார் கதே. சாவு கூட ஷில்லரிட மிருந்து தம்மைப் பிரித்து விடக்கூடாது என்று நினைத்தார் போலும்!

கதேயின் விருப்பப்படியே அவர் இறந்த பின்பு ஷில்லரின் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டார் ஷில்லர்-கதே கல்லறைக்குத் தினமும் ஆயிரக்கணக்கானவர் வருகிறார்கள்; அஞ்சலி செலுத்துகிறார்கள்.

# 2

# பீர் பட்ட பாடு

ஜெர்மன் நாட்டைப்பற்றி, அந்த நாட்டைச் சேர்ந்த யாரிடம் கேட்டாலும் ஒரே மாதிரியான பதிலைத்தான் கூறுகிறார்கள்.

பள்ளி மாணவனிலிருந்து துணைவேந்தர் வரை ஒரே மாதிரியான கருத்தைத்தான் தெரிவிக்கிறார்கள். நான் உண்மையிலேயே அதிசயித்துப் போனேன் !

ஆம்; அவர்களுடைய கல்வி முறை அவ்வளவு சிறப்பாக உள்ளது ! 'சமூக வாழ்வின் அடிப்படையே கல்விதான்; சரியான கல்வி இல்லாவிடில் சரியான சமுதாயம் அமையாது' என்பதை நன்கு உணர்ந்துள்ளார்கள்.

கட்டாயக் கல்வித் திட்டம் அமலில் உள்ளது. ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு குழந்தையையும் தொடர்ந்து மிகவும் பொறுப்போடு கவனித்து வருகிறார்கள். ஒவ்வொரு மாணவனுக்கும் அல்லது மாணவிக்கும் எந்த மாதிரியான கல்வி முறையில் ஈடுபாடு உள்ளது என்பதைக் கூர்ந்து கவனித்து அறிகிறார்கள்.

பள்ளிப் படிப்பு முடிந்த பின்பு அளிக்கப்படும் சான்றிதழில் இதைப் பற்றி விவரமாகக் குறிப்பிடுகிறார்கள்.

இதை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் ஒரு மாணவன் இன்ஜினீயராக வேண்டுமா, டாக்டராக வேண்டுமா என்று முடிவு செய்து, அந்தந்தக் கல்லூரிகளில் இடம் தருகிறார்கள்.

அது மட்டுமல்ல; அந்த நாட்டின் தேவைகள் என்ன என்பதை முதலிலேயே திட்டமிடுகிறார்கள். அதாவது ஒவ்வோர் ஆண்டும், நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு இன்ஜினீயர்கள் தேவை ? மருத்துவத் துறையில் பணியாற்ற எவ்வளவு டாக்டர்கள் தேவை-இப்படிப் பல்வேறு துறைகளுக்கான தேவைகளை நன்கு ஆராய்ந்து அதற்கேற்றாற்போல் வல்லுநர்களைத் தயாராக்கு கிறார்கள். இதற்காகும் எல்லாச் செலவுகளையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.

இங்கு ஒரு சுவையான நிகழ்ச்சியைக் கூற விரும்பு கிறேன்.

டாக்டர் குண்டர்ட் என்பவர், கருத்தரங்கில் அந்நாட்டு வெளிநாட்டுக் கொள்கை பற்றி உரையாற்றி னார். 55 வயதான அவருக்குத் திருமண வயதில் ஒரு பெண் இருந்தாள்.

டாக்டர் குண்டர்ட் எங்களுடன் கி. பெர்லினுக்கு வந்திருந்தார். எங்களது குழுவில் இருந்த பலர் கி. பெர்லி னில் பல பொருட்களை வாங்கினார்கள். நான் சில புத்தகங்களை மட்டும் வாங்கினேன். விமானத்தில் பயணம் செய்யும்போது ஒரு குறிப்பிட்ட எடைக்குள்ளாகவே பொருட்களை எடுத்துச் செல்ல முடியும். அதிகமான பொருட்களை வாங்கியவர்கள் இதற்காக அதிகக் கட்டணம் செலுத்த வேண்டி வந்தது.

என் அருகில் நின்று கொண்டிருந்த டாக்டர் குண்டர்ட், என் பெட்டியைத் தூக்கிப் பார்த்துவிட்டு, 'மிஸ்டர் சஞ்சீவி, நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. உங்கள் பெட்டியின் எடை மிகவும் சரியாகவே இருக்கிறது' என்றார்.

எனக்கு வியப்பாகப் போய் விட்டது. 'அதிசயமா இருக்கிறதே ! கைகளால் தூக்கிப் பார்த்துவிட்டு, எடை சரியாக இருக்கும் என்று எப்படிக் கூறுகிறீர்கள்?' என்று கேட்டேன்.

டாக்டர் குண்டர்ட் என்னைப் பார்த்து, 'மூட்டை தூக்கிய கைகள் இது !' என்றார் புன்னகையோடு.

'வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றிய கல்வியில் உயர் கல்வி பயின்றவராயிற்றே... மூட்டை தூக்கினேன் என்கிறீர்களே ?' என்று கேட்டு விட்டேன்.

'யுத்தம் முடிந்த பின்பு நான் சில காலம் சாக்லெட் தொழிற்சாலையில் மூட்டை தூக்கிக் கொண்டிருந்தேன். மக்களாட்சிக் குடியரசு மலர்ந்தது. யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் படிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. இந்தக் கால கட்டத்தில்தான் எனக்கும் படிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. பகலில் வயிற்றுப் பசியைப் போக்க மூட்டை தூக்கினேன். அறிவுப் பசியைப் போக்கிக் கொள்ள மாலையில் படிக்க ஆரம்பித்தேன். வெளிநாட்டுக் கொள்கையில் டாக்டர் பட்டம் பெற்றேன் !' என்று விளக்கினார் அவர்.

அங்கு மும்மொழித் திட்டம் அமலில் உள்ளது. தாய்மொழி ஜெர்மனையும், இரண்டாம் மொழியாக ரஷ்ய மொழியையும் அனைவரும் கட்டாயமாகக் கற்றாக வேண்டும்.

மூன்றாவது மொழியாக ஆங்கிலத்தையோ, பிரெஞ்சு மொழியையோ அல்லது லத்தீன் மொழியையோ கற்கலாம். பெரும்பாலானவர்கள் ஆங்கில மொழியையே கற்கிறார்கள். உலக அரங்கில் ஆங்கில மொழிக்கு உள்ள முக்கியத்துவத்தை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். அங்கு தொலைக்காட்சியில்கூட ஆங்கில மொழியைக் கற்றுத் தருவதைப் பார்த்தேன்.

அந்நாட்டில் மக்களுக்குப் படிப்பு, வேலை ஆகியவற்றை அந்த நாட்டு அரசாங்கமே நிர்ணயிக்கிறது.

கிழக்கு ஜெர்மனியில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் இருக்கிறார்கள். ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற பல மொழிகளில் அவ்வப்போது வரும் புதிய கலைச் சொற்களையும், புதிய கருத்துகளையும் உடனடியாக ஜெர்மன் மொழியில் பெயர்ப்பதே இவர்களது வேலை.

கி. ஜெர்மனியைச் சுற்றிப் பார்க்க வரும் வெளி நாட்டுப் பயணிகளுக்கு உதவவும் இவர்கள் அனுப்பப்படு கிறார்கள்.

எங்களுடன் வந்த ஒரு மொழிபெயர்ப்பாளருடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தேன். பேச்சுவாக்கில் நான் அவரிடம், 'உங்களுக்குத் திருமணமாகி விட்டதா?'• என்று கேட்டேன்.

'இல்லை. ஆனால்,ஒரு பெண்ணுடன் வாழ்ந்து கொண் டிருந்தேன். அவள் இப்போது என்னுடன் இல்லை. வேறு ஒருவருடன் ஓடி விட்டாள். அதற்குப் பிறகு அவளைப் பல முறை பார்த்தேன். ஆனால் பேசவில்லை. இப்போது வேறு ஒரு நல்ல பெண்ணுக்காகக் காத்திருக்கிறேன்.

விவாகரத்து என்பது ஜெர்மனியில் சர்வ சாதாரணம்! டைவர்ஸ் செய்வது என்பது, கடையில் சென்று ஒரு கோப்பை பீர் அருந்துவதுபோல...பீர் பட்டப்பாடுதான்!" (நம் நாட்டில் தண்ணீர் பட்டபாடு போல) என்றார் அவர் மிகவும் கூச்சத்துடன்!

'இந்த நிலைக்குக் காரணம் என்ன?' என்று அவரிடம் கேட்டபோது—

'பெண்ணுரிமை, ஆணாலும் அதிகமாக வளர்ந்து விட்டதுதான் இதற்குக் காரணம்' என்றார். 'இந்த நாட்டில் படித்த எல்லோருக்குமே வேலை கிடைக்கிறது. எனவே, அவர்கள் மற்றவர்களை நம்பி வாழத் தேவை

யில்லை. இதனால்தான் விவாகரத்து எக்கச்சக்கமாக காணப்படுகிறது.

எங்கள் நாட்டுக் கோர்ட்டுகளும் முடிந்தவரை தம்பதிகளைச் சேர்ந்து வாழ வைக்க எல்லா முயற்சிகளையும் செய்கின்றன. பெரும்பாலான வழக்குகளில் இது முடிவதில்லை. குழந்தைகள் தாயுடன் அனுப்பப்படுகிறார்கள். இந்த ஒரு பிரச்சினையை மட்டும்தான் எங்களால் தீர்க்க முடியவில்லை !' என்றார் அவர் மிகுந்த வருத்தத்துடன். பரிதாபமாக இருந்தது !

இன்னொரு சுவையான விஷயம்—கைரேகை பார்ப்பதில் அந்த நாட்டு மக்களுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு ! இதைத் தெரிந்து கொண்டபோது, மிகவும் அதிசயித்துப் போனேன்-கடவுள் கொள்கையை மறுக்கும் ஒரு கம்யூனிஸ்ட் நாட்டிலா இப்படி ஒரு நம்பிக்கை என்று !

கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர் ஒருவரிடமும் இதைப் பற்றிக் குறிப்பிட்டேன். அவரும் இதை உண்மை என்று ஒப்புக் கொண்டார்.

கி. பெர்லினில் இருக்கும் டி.வி-டவர் கட்டாயம் காண வேண்டிய ஓர் இடமாகும். இரவு நேரங்களில் தூரத்திலிருந்து பார்ப்பதற்கு வெண்பிழம்பாக மின்னுகிறது. மிக மிக உயரமாக, அற்புதமாகக் கட்டப்பட்டுள்ள இந்த டி. வி. டவர் முழுவதுமே விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இதன் மீது சுழலும் ஒரு ஓட்டலும் இருக்கிறது. உருண்டை வடிவத்திலுள்ள இந்த ஓட்டல், ஒரு சுற்றுச் சுற்றுவதற்கு ஒரு மணி நேரமாகிறது. இந்தச் சுழலும் ஓட்டலிலிருந்து பார்த்தால் பெர்லின் நகரம் மிகவும் பிரமாதமாகக் காட்சி தருகிறது. மேற்கு பெர்லினையும் இங்கிருந்து காணமுடிகிறது... !

3

# குழந்தைகளுக்காக வந்த தீயணைப்பு எஞ்சின்

வைமாரில் உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன். இருநூறுக்கு மேற்பட்ட குழந்தைகள் பயிலும் பள்ளிக்கூடம் அது.

கன்னம் குழி விழுந்து ஒட்டிப் போய், கண்கள் பஞ்சடைந்து, உடல் மெலிந்து, பரட்டைத் தலையுடன் கசங்கிய உடைகளுடன் ஏதாவது ஒரே ஒரு குழந்தையாவது காணப்படுகிறதா என்று அந்தக் குழந்தைகளிடையே தேடிப் பார்த்தேன். ஒன்றைக்கூட கண்டுபிடிக்க முடிய வில்லை.

வண்ண வண்ண உடைகளோடு, 'கொழு கொழு' என்று இருந்த அந்தக் குழந்தைகள் முத்துப் போன்ற வெள்ளை வெளேறென்ற பற்களோடு சிரித்துக் கொண்டும், சுறுசுறுப்பாக ஓடிக் கொண்டும், ஆனந்தமாகப் பாடிக்கொண்டும் இருந்தன.

அங்கு பயிலும் குழந்தைகளுக்கு ஏட்டுக் கல்வியோடு பொது நலத்திற்குரியதான வாழ்க்கையைச் சார்ந்த கல்வியையும் கற்றுத் தருவதை நேரில் கண்டேன்.

நாங்கள் சென்றபோது, அந்தக் குழந்தைகளுக்குத் தீ விபத்துகளைப் பற்றியும், அதை எவ்வாறு தடுப்பது என்பதைப் பற்றியும், கற்றுக் கொடுத்துக்கொண்டிருந் தார்கள்.

இதற்காக ஒரு தீயணைக்கும் என்ஜினே அங்கு கொண்டு வரப்பட்டது. தீயணைப்புப் பிரிவைச் சேர்ந்த பல அதிகாரிகள் அந்தக் குழந்தைகளுக்குத் தீ விபத்து களைப் பற்றி எளிய முறையில் விளக்கினார்கள்.

மேலும், இதில் குழந்தைகளையும் பங்குபெறச் செய் தார்கள். ஒரு சிறிய சுவரின் மீது பல சிறிய பிளாஸ்டிக் பக்கெட்டுகள் வைக்கப்பட்டிருந்தன அந்தக் குழந்தைகளை, அங்கு வைக்கப்பட்டிருந்த பக்கெட்டுகளை ஆளுக்கொன் றாக எடுத்துக் கொண்டு, அருகில் இருந்த குழாய்களில் இருந்து நீரை நிரப்பிக் கொண்டு இன்னொரு சுவர் மீது வீசி வீசி ஊற்றச் செய்தார்கள். குழந்தைகள் இந்த வேலையை மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கற்றுக் கொண்டன. பிறகு, அருகில் இருந்த காற்று ஊதப் பட்ட மிகப் பெரிய படுக்கைகளில் குழந்தைகளைத் 'தொப் தொப்' என்று குதிக்கச் செய்தார்கள். (தீ விபத்து ஏற்பட்ட கட்டடங்களின் பல மாடிகளில் இருப்பவர்கள் பிளாட்பாரத்தில் போடப்படும் இம்மாதிரியான படுக்கை யில் குதித்துத் தப்பிப்பது வழக்கமாம்.)

குழந்தைக் கல்வி முறையில் இன்னொரு கம்யூனிஸ்ட் நாடான சீனாவிற்கும் கிழக்கு ஜெர்மனிக்கும் ஒரு முக்கிய வேறுபாட்டைக் கண்டேன்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு சீனாவிற்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சீனக் கல்விக்கூடங்களில் நான் பார்த்த அந்தக் காட்சி மிகவும் கொடுமையானது.

அங்கே பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகள் தங்கள் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு உட்கார வேண்டும். இது கட்டாயம். நான் சீனாவில் பார்த்த பல பள்ளிக் கூடங்களில் இந்த முறை அமலில் இருந்தது. இதை என்னுடன் வந்திருந்த தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்களும் பார்த்தார்கள்.

குழந்தைகள் விஷமம் செய்யாமல் இருப்பதற்காகத் தான் இந்த ஏற்பாடாம். இப்படிப்பட்ட தேவையில்லாத கட்டுப்பாடுகள் கிழக்கு ஜெர்மன் பள்ளிகளில் காணப்பட வில்லை.

கி. ஜெர்மனியில் உள்ள எல்லாப் பள்ளிகள், கல்லூரி களிலும் கூட்டுக்கல்வி முறை அமலில் உள்ளது. மாணவர் களும் மாணவிகளும் சேர்ந்தே படிக்கிறார்கள்.

வைமாரில் நான் பார்த்த அந்தப் பள்ளியில் ஒவ்வொரு வகுப்பறையிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள், சின்ன கம்ப்யூட்டர்கள் இருந்தன.

நாங்கள் அந்தப் பள்ளியிலிருந்து புறப்படும் நேரம் வந்தது;

அந்தப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த குழந்தைகள், ஆசிரியர்கள் அனைவரும் எங்களிடம், "நாம் இந்தப் பிரிவு உபசாரத்தை ஜெர்மன் முறைப்படிக் கொண்டாடு வோம்" என்றார்கள்.

அவர்கள் அனைவரும் சேர்ந்து பாட ஆரம்பித்தார்கள்: 'Time to Part has come...'

'பிரியும் நேரம் வந்து விட்டது தோழர்களே! ஆனால், எப்போதும் சந்திப்போம்!' என்பதுதான் அவர்கள் பாடிய பாடலின் பொருள்.

கடைசியாகப் பல சிறுவர்கள் அவர்களின் விலாசங் களைச் சின்னச் சின்ன காகிதங்களில் பென்சிலால் எழுதி, "ஊருக்குச் சென்றதும் மறக்காமல் அடிக்கடி கடிதம் எழுதுங்கள்; நாங்களும் உங்களுக்குப் பதில் எழுதுகிறோம்" என்றார்கள். அந்தப் பிஞ்சு உள்ளங்களைப் பிரிய மனமே வரவில்லை...!

நாங்கள் பெர்லின் நகரில் தங்கியிருந்த போது, குப்தா என்ற இந்தியர் எங்களைக் காண வந்திருந்தார். மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த குப்தா, பல ஆண்டுகளுக்கு முன்பே மேற்கு ஜெர்மனியில் குடியேறியவர்.

''மேற்கு ஜெர்மனியில் அவ்வளவாக இந்தியர்களுக்கு மரியாதை இல்லை. இந்தியர்களைக் கூலிகளைவிட மிகக் கேவலமாக நடத்தினார்கள். கி. ஜெர்மனியில் வேலை கிடைத்தது. உடனே இங்கே வந்து செட்டில் ஆகி விட்டேன். ஒரு ஜெர்மன் பெண்ணையும் திருமணம் செய்து கொண்டு நிம்மதியாக வாழ்கிறேன்'' என்றார் குப்தா.

திருமணம் பற்றி விசாரித்ததற்கு,

''பல ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்து குடியேறியதுமே என்னைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுவதாக அவள் கூறினாள்.

நான் அவளிடம், 'எங்கள் இந்திய கலாசாரமே வேறு. 'ஒருவனுக்கு ஒருத்திதான்' என்பதையும், விவாகரத்து என்ற வார்த்தைக்கே எங்கள் கலாசாரத்தில் இடமில்லை எனபதையும் அவளிடம் தெரிவித்தேன்.

அவள் தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. தான் ஒரு முழுமையான பெங்காலிப் பெண்ணாக மாறி விடுவதாக ஒப்புக் கொண்டாள். நானும் ஒப்புக் கொண்டேன்.

இப்போது எங்களுக்கு மூன்று குழந்தைகள். ஒரு மகன், இரண்டு மகள்கள். ஆனால், எங்கள் மூத்த மகன் மன நோயால் அவதியுறுகிறான்'' என்றார்.

''குடும்பத்தோடு இந்தியாவில் குடியேறும் வாய்ப் புள்ளதா?'' என்று நான் குப்தாவிடம் கேட்டேன்.

அவர் சிரித்துக் கொண்டே, ''மன்னிக்க வேண்டும். தற்போது எனக்கு இங்கு கிடைக்கும் வசதிகளைப் போல

இந்தியாவில் கிடைக்காது. என்னுடைய மகனுக்கு ஆகும் எல்லா மருத்துவ வசதிகளையும் இந்த நாட்டு அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது. ஓர் உதாரணம் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் ஒரு முறை என் மகனுடன் மருத்துவ மனைக்குச் சென்றபோது அங்கிருந்த டாக்டர் என்னிடம், 'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று கேட்டார். நான் வசிக்கும் இடத்தின் பெயரை அவரிடம் கூறினேன். அதற்கு அவர், 'அடேயப்பா! அவ்வளவு தூரத்திலிருந்தா வருகிறீகள்? இங்கு வந்து போவதற்கே நிறைய செல வாகுமே? கவலைப்படாதீர்கள். அந்தச் செலவையும் அரசாங்கமே ஏற்க உங்களுக்கு உதவுகிறேன்' என்று கூறிய தோடல்லாமல், உடனடியாக அதற்கு வேண்டிய ஏற் பாடுகளைச் செய்தார். அதிலிருந்து என் வீட்டிலிருந்து அந்த மருத்துவமனைக்குச் செல்ல ஆகும் முழுச் செலவு களையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டுவிட்டது!'' என்றார்.

மனநிலை சரியில்லாத மகன் இருக்கிறானே என்ற ஒரு குறை இருந்தாலும் மற்றபடி மனைவி, குழந்தை களுடன் வசதியாகவும் நிம்மதியாகவும் வாழ்வதாகக் குறிப்பிட்டார் குப்தா.

அந்த நாட்டைச் சேர்ந்த ஒவ்வொரு மனிதனும் நலமாக வாழ வேண்டும் என்பதில் அந்த நாட்டு அரசாங்கம் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. அந்த நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல், அங்கு வரும் பயணிகளுக்கும் மருத்துவ வசதிகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுக் குணமடைந்த பின் உடனடியாக வேலைக்குப் போய் சேர வேண்டும் என்ற கட்டாயமில்லை. மருத்துமனையில் சிகிச்சை பெற்ற பின் அவரவர்கள் விருப்பப்படி ஏதாவது ஒரு விடுமுறை இல்லத்தில் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். Right to Rest and Recreate என்ற ஓர் அம்சமும் அந்த நாட்டுச் சட்டத்தில் உண்டு!

# 4

# விளையாட்டை விடத் தன்மானமே பெரியது!

வைமாரில் அமைச்சராகவும், பின்னர் பிரதமராகவும் பதவி வகித்த கதேயை, அறிவிலும் அழகிலும் செல்வத்திலும் சிறந்த திருமதி சார்லெட்பான் ஸ்டீன் என்பவர் தான் முழு மனிதனாக உருவாக்கினார் என்று கூறலாம்.

அந்த அம்மையாருக்கு 1,500-க்கு மேற்பட்ட கடிதங்கள் எழுதியவர் கதே.

வைமார் குடியரசின் பிரதமராக விளங்கிய கதேவுக்கு எல்லா அறிவுத் திறன்களையும் அரசியல் நுட்பங்களையும் கலை உணர்வுகளையும் தெரிவிக்கவும் ஊக்குவிக்கவும் இந்த அம்மையாரே பல்லாண்டு காலம் உதவியுள்ளார்.

நான் இந்த அம்மையாரின் அரண்மனையை நேரில் சென்று பார்த்தபோது, சில சுவைமிக்க நிகழ்ச்சிகளைக் கூறினார்கள். (இந்த அரண்மனை வைமாருக்கு மூன்று மணிப் பயணத் தொலைவில் இருக்கிறது.)

கதே இந்த அரண்மனையிலும், தன் வீட்டிலும் உள்ள ஒவ்வோர் அறையையும் ஒவ்வொரு வண்ணத்தில் அமைக்கச் செய்தார். வண்ணங்களுக்கும் எண்ணங்களுக்கும் உள்ள பொருத்தத்தைப் பல்கலைச் செல்வராகிய கதே உணர்ந்திருந்ததே இதற்குக் காரணம்.

தன் அன்புக்குரியவளின் வீட்டிற்கு முதன் முதலில் வந்து அமர்ந்து எழுதிய மேஜையின் ஓர் ஓரத்தில் தன் பெயரையும் அன்றைய தேதியையும் அவரே செதுக்கி யுள்ளார். (நமது மாணவர்கள் பள்ளியில் உள்ள மேஜை களில் தங்கள் பெயரைப் பிளேடினால் செதுக்குவது போல.)

வைமாரில், அந்நாட்டின் புராதனப் பெருமையை விளக்கக்கூடிய இன்னிசை நாடகங்கள் (opera) பல தியேட்டர்களில் நடைபெறுகின்றன.

அந்த ஒபேராக்கள் நடைபெறும் தியேட்டர்களில் அன்று நடக்கும் கதையைப் படங்களுடன் அச்சிட்டு அழகிய புத்தகங்களாகத் தருகிறார்கள்.

இவை ஒரு மார்க் (சுமார் 4 ரூபாய்) முதல் 10 மார்க் வரை விற்கப்படுகின்றன.

நான் இப்படிப்பட்ட ஒரு நாடகத்திற்குச் சென்றிருந் தேன். என் பக்கத்தில் ஒரு ஜெர்மன் நாட்டவர் அமர்ந் திருந்தார். அவரிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தேன்.

"எங்கள் குழுவினர் அனைவருமே கிழக்கு ஜெர்மனி யைக் கண்டு களித்தோம். நீங்கள் இந்தியாவிற்கு ஒரு முறையாவது வாருங்களேன்!" என்றேன்.

அதற்கு அவர், "நாங்கள் வெளிநாடு செல்வது என்பது முடியாத காரியம். 65 வயது ஆகும் வரை யாருமே வெளி நாடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை" என்றார் அவர் தயக்கத்துடன்.

"ஏன்?" என்றேன் ஆச்சரியத்துடன்.

"இதை விளக்கிக் கூற நீண்ட நேரமாகும்! ஒரே ஒரு வார்த்தையில் கூறுகிறேன்—அதுதான் எங்கள் நாட்டின் சட்டம்... That is our law" என்றார் அந்த மனிதர்.

மக்கட் தொகை மிகவும் குறைவாக உள்ள அந்த நாடு களில் உள்ள அறிஞர்களும் வல்லுநர்களும் வெளிநாடு சென்று தங்கி விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு என்பதைப் பின்னர் தெரிந்து கொண்டேன்.

இந்தச் சுற்றுப் பயணத்தின்போது டிரஸ்டன் மற்றும் லீப்ஸிக் நகரங்களையும் சுற்றிப் பார்த்தோம். டிரஸ்டன் அழகிய சிற்பங்களுக்கும் அற்புதமான ஓவியங்களுக்கும் பெயர் பெற்ற ஒரு நகரமாகும்.

இந்த நகரைப் பற்றிய ஒரு சுவையான கதையை என்னிடம் கூறினார்கள்.

16-ம் நூற்றாண்டில் இந்த நாட்டை ஆண்ட மன்ன னுக்குச் சீன பீங்கான் சிற்பங்கள் என்றால் கொள்ளை ஆசையாம். இந்தப் போர்ஸிலின் பொம்மைகள் செய்யும் கலையைக் கற்றுக்கொள்ள ஜெர்மனியிலிருந்து பல சிற்பக் கலைஞர்களைச் சீனத்திற்கு அனுப்பினான்.

அந்தக் கலையைக் கற்றுக்கொண்டு நாடு திரும்பியதும், சீனத்துப் பொம்மைகள் செய்ய ஏற்ற மண் ஜெர்மனியில் எந்தப் பகுதியில் கிடைக்கும் என்பதை ஆராயத் துவங் கினார்கள்.

டிரஸ்டன் நகரில் அவ்வகை மண் இருப்பதைக் கண்டார்கள்.

முதலில் சீனப் பொம்மைகளைப் பார்த்து அப்படியே Imitate செய்யுமாறு உத்திரவிட்டான். அவர்கள் செய்த அந்தப் பொம்மைகள் சீன தேசத்தில் செய்த பொம்மை களைப் போலவே இருந்தன.

பிறகு சீனரிடம் கற்ற அந்தக் கலையை Improve செய்யவேண்டும் என்று உத்தரவிட்டான் மன்னன்.

இப்படி படிப்படியாகத் தேர்ச்சி பெற்று அந்தக் கலையிலேயே டிரஸ்டன் மக்கள் வல்லவர்களாகவும் ஆகிவிட்டார்களாம்.

இதற்குப் பின் டிரஸ்டனில் செய்யப்பட்ட பொம் மைகள் சீன பொம்மைகளைவிட மிகப் பிரமாதமாக இருந்தன.

இந்த மூன்று விதமான பொம்மைகள் இன்னமும் டிரஸ்டனில் உள்ள ஓர் அருங்காட்சியகத்தில் காணப்படு கின்றன.

இதன் அழகில் மயங்கிப் புகைப்படம் எடுக்க முயன் றேன். ஃப்ளாஷ் உபயோகிக்கக் கூடாது என்று தடுத்தார் கள். ஆகவே படம் எடுக்க முடியவில்லை.

5

# ஒரு நல்ல கணவனுக்கு மனைவியாக இருப்பதைத்தான்...

நான் வைமாரில் இருந்தபோது, கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய—உடற்பயிற்சியில் ஈடுபாடு கொண்ட—ஒரு பெண்மணியைச் சந்தித்தேன். அவருக்கு வயது முப்பது.

சில ஆண்டுகளுக்கு முன்பு கிழக்கு ஜெர்மனியின் புகழ் பெற்ற உடற்பயிற்சி (ஜிம்னாஸ்டிக்ஸ்) வீராங்கனையாகத் திகழ்ந்தவர் அவர். அகில உலக உடற்பயிற்சிப் போட்டிகள் பலவற்றில் கலந்து கொண்டு பல பதக்கங்களைத் தட்டிச் சென்ற அவருக்கு விபத்து ஒன்றில் காலில் பலத்த காயம் ஏற்பட்டு, இந்த விளையாட்டுகளிலிருந்து ஓய்வு பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. உடனே விளையாட்டுக்கு 'டாட்டா' காட்டி விட்டு இசை நாடகத்தையே (Opera) தொழிலாக எடுத்துக் கொண்டேன் என்றார் அவர். எப்படிப்பட்ட மாற்றம்!

அவரிடம், ""இப்போது சொல்லுங்கள். நீங்கள் வாழ்க்கையில் பெருமையாகக் கருதுவது விளையாட்டையா? நாடகத்தையா?"" என்று கேட்டதற்கு ""நிச்சயமாக இந்த இரண்டுமே இல்லை. ஒரு நல்ல கணவனுக்கு மனைவியாக இருப்பதைத்தான்!"" என்று சிரித்துக் கொண்டே பதிலளித்தார் அந்தப் பெண்மணி.

அவருடைய கணவரும் ஒரு விளையாட்டு வீரர். மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் பிரமாதப்படுத்து

கிறார். "என் மீது அவர் உயிரையே வைத்திருக்கிறார். எனக்கென்று அவர் இருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கும் போது நான் உண்மையிலேயே பெருமைப் படுகிறேன்!" என்றார்.

"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?" என்று அவரிடம் கேட்டபோது, "அதற்கு இன்னமும் நேரம் இருக்கிறது... "There is still time for it" என்றார் அமைதியாக!

பாசம் மிக்க ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அந்தப் பெண்ணைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

ஒலிம்பிக்ஸ் விளையாட்டுகளில் கிழக்கு ஜெர்மன் நாடு கலந்து கொள்ளாதது பற்றி ஒரு விளையாட்டு வீரரிடம் விசாரித்தேன். "விளையாட்டு என்பது மிகவும் முக்கியம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அதைவிட எங்கள் தேசத்தின் சுயமரியாதைதான் முக்கியம் என்று நினைக்கிறேன். ஒலிம்பிக்ஸ் விளையாட்டையே ஒரு வியாபாரமாக்கி விட்டது அமெரிக்கா. ஒலிம்பிக்ஸ் விளையாட்டுகளில் முதலில் தூக்கிச் செல்லப்படும் ஜோதியைக்கூடக் காண்ட்ராக்டுக்கு விட்டிருப்பதாகத்தெரிகிறது" என்று குறை கூறினார் அவர். தங்கள் நாடு ரஷ்யாவைப் பின்பற்றி ஒலிம்பிக்ஸ்ஸைப் புறக்கணித்திருந்தாலும் விட்டுக் கொடுக்காமல் பேசினார் அவர்!

கடவுள் கொள்கையை மறுக்கும் கம்யூனிஸ்ட் நாட்டில் மாதா கோயில்களின் மணி ஓசை ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

பழைய கோயில்களைப் புதுப்பிக்கிறார்கள். புதிய தேவாலயங்களைக் கட்டித் தருகிறார்கள். பிரசாரத்திற்கு அனுமதி கிடையாது என்றாலும் அந்த நாட்டில் தனி மனிதனின் மத சுதந்திரத்தில் அரசு ஒருபோதும் தலையிடுவதில்லை.

ஆனால், ஒரு சில விஷயங்களைப் பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறார்கள் என்பதையும் கவனித்தேன். 'மந்திரிகள் வீடு எங்கே இருக்கிறது? அவர்கள் Movements'- இவையெல்லாம் மிகவும் ரகசியமாக வைக்கப்படுகின்றன.

அந்த நாட்டில் மந்திரிகளாக இருந்தாலும் சரி, அல்லது சாதாரண குடிமகனாக இருந்தாலும் சரி, எல்லோரும் காம்ரேடுகள் தான்! 'மாண்புமிகு' என்ற சொல்லுக்கு அவர்கள் அகராதியில் இடமே கிடையாது.

கிழக்கு ஜெர்மனியில் உள்ள பெண்கள் தங்கள் குழந்தைகளைக் கைகளில் தூக்கிக் கொண்டு செல்வதை ஓர் இடத்திலும் என்னால் காண முடியவில்லை.

குழந்தைகளை அழகிய தள்ளுவண்டிகளில் உட்கார வைத்து மெதுவாகத் தள்ளிக் கொண்டு செல்கிறார்கள். கடைகளுக்குச் சென்று பொருட்களை வாங்கும் போது குழந்தைகளைத் தங்களுடன் எடுத்துச் செல்வதில்லை. அந்தந்தக் கடைகளின் வாசல்களிலேயே தள்ளுவண்டியில் குழந்தையை உட்கார வைத்து விட்டு உள்ளே சென்று விடுகிறார்கள்.

ஊல்லி என்ற பெண்ணுடன் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எங்களுடன் வந்த மொழிபெயர்ப்பாளர்களில் ஊல்லியும் ஒருவர்.

ஊல்லிக்கு ஈ.எஸ்.பி. (Extra Sensory Perception) யில் அபார நம்பிக்கை உண்டு. இதைப் பற்றி அவர் என்னிடம் கூறினார்.

"என் அத்தைக்கு எதிர்காலத்தைப் பற்றிக் கூறும் சக்தி உண்டு. என் மகன் மார்ட்டின் பிறக்கும் போது மிகவும் கஷ்டத்திற்குள்ளானேன். உரிய நேரத்தில் அவன் பிறக்கவில்லை. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. உடனே

அத்தையிடம் போனேன். அவர் என்னிடம் 'ஒன்றும் கவலைப்படாதே, நாளைக் காலைக்குள் குழந்தை பிறந்து விடும்' என்றார். அவர் கூறியது போலவே மறுநாள் காலையில் மார்ட்டின் பிறந்து விட்டான்...!'' என்றார்.

நம்மைப் போலவே ஜெர்மானியர்களுக்கும் ஈ.எஸ்.பி., கைரேகை, ஜோஸ்யம் இவற்றில் மிகுந்த நம்பிக்கை இருக்கிறது!



சீன நாட்டில் சங்காய் துறைமுகத்தில் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி, டாக்டர் மு. நாகநாதன்

# IV

# வேலை இல்லாத் திண்டாட்டம் விலகிட

முதலாளித்துவ நாடுகளில் வேலை இல்லாத் திண்டாட்டம் தவிர்க்க முடியாத தீமை என்றே அறிஞர்கள் சொல்லுகின்றனர். அண்மையில் உலகிலேயே மிகப் பெரிய பொதுவுடைமை நாடாகிய சீனாவையும், அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் ஒரே வீச்சில்—ஒரே சுற்றில் பார்த்த எனக்கு இது உண்மை என்றே தோன்றுகிறது. இதற்கான அடிப்படைக் காரணம் முதலாளித்துவ நாடுகளில் கட்டுப்பாட்டின் அடிப்படையிலான திட்டமிடுதல் என்பது முயற்கொம்பாக இருப்பதே ஆகும்.

மேற்கண்ட மெய்ப்பாடு நிலைமாற்றம் பெறும்வரை இந்தியா போன்ற குட்டி முதலாளித்துவ நாடுகளில் இளைஞர்களின் வேலை இல்லாத் திண்டாட்டம் ஒருபெரும் பிரச்சினைதான். அதுவும் சாதி, மத அடிப்படைகள் சமூக வாழ்வை அதிகமாகச் சீர்குலைக்கும் நாடு இந்தியாதான். எனவே, வேலை வாய்ப்புகள் மேலும் மேலும் உண்டு பண்ணப்படாமலும், இருக்கும் வேலை வாய்ப்புகளையும் தகுதி அடிப்படையில் பரிமாறாமல் இருப்பதும் இந்த நாட்டின்—இந்த நாட்டில் தலைவிதிதான். இந்த நிலையில் இச்சிக்கல் தீர சில சிந்தனைகளைச் சிந்திப்பதே இச்சிறு கட்டுரையின் நோக்கம்.

முதலாவதாக, புதிய புதிய வேலைவாய்ப்புகளை எங்கெங்கே எப்படி எப்படி என்ன என்னவாக உண்டு பண்ணலாம் என்று அகலமாகவும் ஆழமாகவும் துணிவாகவும் துல்லியமாகவும் ஆராயும் அமைப்புகள் பல அடுக்குகளிலும் ஏற்படவேண்டும். இப்பொழுதெல்லாம் தெளி

வாகத் தெரியும் ஒரு சிக்கல் வேலைவாய்ப்புகள் இருக்குமிடங்களிலும் அவ்வாய்ப்புகளை நிறைவு செய்யும் நிதி நிலைமை இல்லை என்று கைவிரிக்கப்படுகிறது. இதுதான் முதலாளித்துவ அமைப்பிலிருக்கும் வளர்ச்சிக்கான முட்டுக்கட்டை; இதை நினைக்கும் பொழுது பல அமைப்புகளில் வேலை இல்லாமல்—போதுமான வேலை இல்லாமல் பலர் சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பதும் ஒப்புநோக்கத் தக்கது. இதனினும் இருபெரும் கொடுமைகள் முதலாளிகள் நிர்வாகிகள் இயக்குநர்கள் என்ற பெயரால் நாட்டில் ஒருவருக்குக் கொடுக்கப்படும் குறைந்த சம்பளத்திற்கு ஒரு சிறிதும் தொடர்பில்லாதவகையில் பலநூறு மடங்கு தண்ட சம்பளங்களும் மதிப்பூதியங்களும் கொடுக்கப்படுதல்... மற்றொன்று ஆடம்பரச் செலவுகளைச் செய்தலும் பொருள்களையும் பணங்களையும் பாழாக்குதலும் ஆகும். இதுவும் முதலாளித்துவ அமைப்பின் பெரிய குறைபாடுகளையே புலப்படுத்தும்.

மேற்கூறிய நிலைமையிலும் என்ன செய்வது என்பதே நம்முன் உள்ள சிக்கல். இச்சிக்கலைத் தீர்த்து வைக்கப் புதியதாகப் பூத்துள்ள ஓர் அமைப்பே All India Brotherly Service Council எனப்படும் அனைத்திந்திய உடன்பிறப்பு உதவி மன்றம் பல்வேறு துறைகளிலுமுள்ள பெருமக்களின் அறிவுரைகளையும் ஆதரவுகளையும் வேலை இல்லா இளைஞர்களுக்கு ஒருமுகப்படுத்தி வழங்குதலே இம்மன்றத்தின் குறியும் நெறியும் ஆகும். எனவே முதலில் வேண்டற்பாலது இம்மன்றத்தைப் பற்றிய விரிவான விளம்பரம்தான். அடுத்துத் தேவைப்படுவது இம்மன்றத்திற்கு இன்றியமையாத பொருளாதார பலம். இதன் துணைக்கொண்டுதான் இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல வேலை வாய்ப்புகளுக்கான துல்லிய விவரங்களைத் தொகுக்க முடியும். அந்த வேலைவ ாய்ப்புகளை நிரப்புவதற்கான நிதியுதவிகளைப் பற்றி உரியவர்களுக்கு ஆலோசனைகள் கூறமுடியும். மூன்றாவதாக, தன்முயற்சி

வேலைவாய்ப்புகளை எவ்வெவ்வாறெல்லாம் ஏற்படுத்தலாம் என்பது பற்றிச் செயல்படுத்தத்தக்க கற்பனை அறிவோடு திட்டங்களைத் தீட்டலாம். இவ்வகையில் சமுதாயத்தில் எந்த எந்தப் பிரிவினருக்கு எந்தெந்தத் தேவைகள் இருக்கின்றன என்பது முதலில் விரிவாக ஆராயப்பட்டு (Survey) விவரங்கள் தொகுக்கப்படவேண்டும். அதற்கு ஏற்ப வேலைவாய்ப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இச்சிறு கட்டுரையில் மறவாமல் குறிப்பிடத்தக்க இரு சிக்கல்கள் உண்டு. ஒன்று விலைவாசி ஏற்றம், மற்றொன்று எல்லாவற்றிலும் பெரியது, இளைஞர்கள் உடல்உழைப்புப் பணிகளை பெரிதும் மதிக்காமலும் விரும்பாமலும் நகத்தில் அழுக்குப்படாத நாகரீகப் பணிகளையே (White collered jobs) விரும்புதல். விலைவாசிகள்—அதுவும் அடிப்படை நுகர்பொருள்களில் (Consumer goods) விலைவாசிகள் விடம்போல் ஏறிகொண்டு போவதும், முதலாளித்துவ அமைப்பில் முக்கிய தீமையாகும். இந்த உண்மையையும் அண்மையில் என் உலகப் பயணத்தில் சீனாவையும் பிற நாடுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இந்த முதலாளித்துவ கொடுமை நீங்கத்தான் காந்தியடிகள் கிராமத் தன்னிறைவு கைத்தொழில் திட்டத்தைப் பெரிதும் வற்புறுத்தினார். இதன் வாயிலாக இங்கு குறிப்பிட்ட இரு சிக்கல்களும்—விலைவாசி ஏற்றம், உடலுழைப்பை வெறுத்தல் ஆகிய இரு சிக்கல்களும் - தீரும். ஆனால் உலகப் போக்கைப் பார்க்கும்போது தன் முயற்சியிலும் தடி முயற்சிக்கே வெற்றி கிடைக்கும் என்று தோன்றுகிறது. காரணம் மனிதரிடம் இன்னும் மாறாது இருக்கும் விலங்கு இயல்பு —அறிவுக்கு அஞ்சுவதிலும் அடிக்கு அஞ்சுவதாகவே இருக்கிறது. அதனால்தான் காந்தீயம் தோற்றுக் கம்யூனிசம் வெல்கிறது.



சீனநாட்டு வரவேற்பின்போது பேராசிரியர்
இடம் பெறும் காட்சி



சீன நாட்டைச் சுற்றிப் பார்க்கையில்
பேராசிரியர்

# V

# ஆத்திகம் சொல்லும் ஒழுக்க நடைமுறைகள் நாத்திக சீனாவில்தான் உள்ளன

## பயணம்

நண்பர்களே நான் 14-6-82ல் புறப்பட்டு 55நாட்கள் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் போனேன். 'பயணம்' என்ற சொல்லை நினைக்கும் போது அதற்குத் தொடர்பான வேறு மூன்று சொற்களும் எனது நினைவிற்கு வந்தன. அவை 'பணம்', 'பயம்' என்ற சொற்கள்.

வெளி நாட்டிற்குப் பயணம் போகும்போது, பயணம் எவ்வாறெல்லாம் அமையுமோ என்ற 'பயம்'; அதற்கு அடிப்படையாக அமைவது 'பணம்'. பயணத்தில் சென்று தாயகம் திரும்புவதற்குள் நாம் உயிருடன் வருவோமோ என்ற எண்ணத்தில் தன்னையே பணயமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைமை.

நான் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா, சீனம் ஆகிய நாடுகளுக்குப் போய் வந்தேன்.

சீனாவிற்குப் போக எனக்குப் பெரிதும் உதவியவர், என் அருமை நண்பரும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுபவரும், முழுமையான நாத்திகருமான டாக்டர் மு. நாகநாதன் அவர்கள்தான்.

எங்களோடு தமிழ் நாடு கல்வி அமைச்சர் திரு. அரங்க நாயகமும் சீனாவிற்கு வந்திருந்தார். நாங்கள் அங்கு கண்ட காட்சிகள் என்றும் எங்களது நினைவில் பசுமையாக இருக்கும்.

இந்து மதத்திலிருந்து ஒரு சீர்திருத்த மதமாக தோன்றிய புத்தமதம், சீனாவில் சீனர்களிடையே மூட நம்பிக்கைகளைப் பெரிய அளவில் பரப்பியிருந்தது. சீனா

செஞ்சீனாவாக மாறியபின் அந்த மூட நம்பிக்கைகள் பெரிதும் மறைந்தன. அறிவொளியுடன் அம்மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

முடிவெட்டவும்

சீன மக்களிடையே, ஒரே குழந்தை போதும் என்ற எண்ணம் மேலாங்கியிருக்கிறது.

குழந்தைகள் சமூகப் பார்வையுடன் வளர்க்கப்படுகிறார்கள். குழந்தைகள் படிக்கும் 'கிண்டர் கார்ட்டன்' பள்ளிகளில் 3வயது குழந்தைகளுக்குத் தலைமுடிவெட்டும் பணியைக்கூட கற்றுக் கொடுக்கிறார்கள். இது கேவலமான பணி என்று அவர்கள் கருதுவதில்லை. தன்னம்பிக்கையை ஊட்டும் அளவில் பாடதிட்டங்கள் அமைகின்றன.

'கிண்டர் கார்ட்டன்' வகுப்பு முதல் உயர்கல்வி படிக்கும் வகுப்புவரை தங்கள் தாய் மொழியையே பயிற்சி மொழியாக வைத்துள்ளனர்.

பெண்கள் நல்ல முறையில் முன்னேறியுள்ளனர். 'கேன்டன்' என்ற புகைவண்டி நிலையத்தில் நாங்கள் இறங்கியபோது, வாடகைக்கார் ஒட்டுபவர் அனைவரும் பெண்களாகவே இருந்தது கண்டு நாங்கள் வியப்புற்றோம். அவர்கள் நல்ல உழைப்பாளிகளாய் உள்ளனர்.

அங்கு தோழர் மாசேதுங் அவர்கள் உடலை அப்படியே வைத்துள்ளனர். அந்த நினைவாலயத்திற்குச் சென்றோம். அந்த நினைவாலயத்திலும் அதன் சுற்றுமுள்ள வட்டாரத்திலும் முழு அமைதியான சூழ்நிலையிருக்கிறது. சிறு சந்தடிக்குக்கூட, சிறு ஒலி எழுப்புவதற்குக்கூட வாய்ப்பில்லாமல் ஒரே அமைதியாக இருக்கிறது. அங்கே போகும்போது நம்மையே மறந்து விடுகிற சூழ்நிலை இருக்கிறது.

கூச்சல் மயம்

ஆனால் அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன் அவர்களின் நினைவாலயம் சென்ற போது அதற்கு நேர்மாறான சூழலைத்தான் கண்டோம்; உள்ளேயும் இரைச்சல் வெளியேயும் ஒரே சத்தம்.

அமெரிக்காவில் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளிலும் நடைமுறையிலும் காதலர்கள் அரைநிர்வாணக் கோலத்தில் இருப்பதைக் கண்டோம். ஆனால் இத்தகைய நிலை சீனாவில் இல்லை.

ஜப்பான் மக்கள் குட்டையர்கள் என்ற நிலையை அங்கு தற்போது மாற்றிக் கொண்டு வருகின்றனர். ஜப்பான் நாட்டில் ஜப்பானியர்கள் மிகவும் உயரமான மனிதர்களாக வளர்ந்து வருகின்றனர்.

ஆங்காங், பேங்காக் போன்ற நாடுகளில் விபச்சாரம் தான் பெரிய தொழிலாக இருக்கிறது.

முதலாளித்துவ நாடுகளை விட, பொதுவுடைமை நாடுகளில் நிலைமை நன்றாக உள்ளது.

நாம் விடுதலை பெற்றது 1947ல். சீனா, பொதுவுடைமைப் பூங்காவாக மாறியது 1-10-1949ல். 1949ல் விலைவாசிகள் எந்த நிலையில் இருந்தனவோ அதே நிலையில்தான் இன்றும் இருக்கின்றன.

சீனாவில் காரல் மார்க்ஸ், லெனின், மாசேதுங் படங்கள் பல இடங்களில் இருப்பதைக் காணலாம். அங்கு ஏற்பட்ட 'கலாச்சாரப் புரட்சி' நடவடிக்கைகளில் மக்களுக்கு மகிழ்ச்சி இல்லை. அங்கு பொது சுகாதாரம் நல்ல முறையில் உள்ளது.

சீனாவில் கல்வி நிலையங்களில் கடவுளைப் பற்றியோ சமயங்களைப் பற்றியோ சொல்லப்படுவதில்லை. மக்களுக்குத் தன்னம்பிக்கை வருவதற்காகக் கல்வி நிலையங்கள் உதவுகின்றன.

## அமெரிக்காவில் அண்ணா நினைவு

அமெரிக்காவிற்குப் போய் பல இடங்களையும் பார்த்தேன். அமெரிக்காவிற்குப் போகும்போது, பழம் பெரும் அமெரிக்கப் பல்கலைக் கழகமான 'ஏல்' பல்கலைக் கழகத்தின் 'சப்ஃபெல்லோஷி' என்ற பெரும் சிறப்பைப் பெற்ற முதல் இந்தியரான பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு வந்தது.

அவருக்கு அந்தப் பெருமையை அளித்ததைக் கண்டு பொறாமையடைந்த நம் நாட்டில் இருந்த சில சிறுமதியாளர் கள் 'அண்ணாதுரைக்குக் கிடைத்தது, முழு ஃபெலோஷிப் கூட இல்லை. சின்ன-அதாவது 'சப்' ஃபெலோஷிப்தான்' என்று எண்ணி நகையாடியதும் எனது நினைவிற்கு வந்தது.

பாவம், அந்தப்பித்தர்கள், கெடுமதியாளர்கள், 'சப்' என்பது ஒருவர் பெயரின் சுருக்கம் என்பதை அறியாதவர்கள்.

அந்த 'ஏல்' பல்கலைக் கழகத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது நல்லது.

'ஏல்' பல்கலைக் கழகத்திற்கும் சென்னைக்கும் தொடர்பு உண்டு. சென்னையில்சம்பாதித்த பணம் இறுதி யில் 'ஏல்' பல்கலைக்கழகத்திற்குச் சென்றுள்ளது.

'ஏல்' என்பவன் ஒரு வெள்ளையன். 1649 முதல் 1721 வரை வாழ்ந்தான். பாஸ்டனில் பிறந்தான். லண்டனில் தொடக்கக் கல்வி பெற்றான். 1671ல் கிழக்கிந்தியக் கம்பெனியின் எழுத்தாளராக (கிளார்க்) நியமிக்கப் பட்டான்.

சென்னைக்கு 1672ம் ஆம் ஆண்டு ஜூன் 23-ம் நாள் வந்தான்.

சத்திரங்களில் சென்னை மக்களின் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் குட்டி நீதிபதி ஆனான்.

சென்னையில் அப்போது கைம்பெண்ணாகி ஆறு மாதமே ஆகியிருந்த 'காத்தரீன்' என்னும் ஒரு வெள்ளைச் செல்வச் சீமாட்டியை 1680 நவம்பர் 4ம் நாள் மணந்தான்.

படிப்படியாகப் பதவி உயர்வுகள் பெற்று 1687 ஜூலை 25ம் நாள் செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கவர்னராக ஆனான். கிழக்கிந்தியக் கம்பெனியின் கழுகுக் கண்களினால் அவன் வெள்ளை ஆதிக்கத்தை வேர்பிடிக்கச் செய்வதில் வல்லாளனாக்கப்பட்டான்.

## 7 ஆண்டு இங்கே

1687ல் இறந்துபோன தன் தமையன் டேவிட் என்பவனின் நினைவாகக் கடலூரில் கோட்டை ஒன்றை எழுப்பினான். பிறகு அவனது செல்வாக்கு கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகளுக்கு இடையே ஏற்பட்ட இன்னல்களால் இறங்குமுகம் ஆகியது. அதன் விளைவாக ஏல் இங்கிலாந்து திரும்பினான். ஏல்மேல் ஏற்றபட்ட புகார்கள் விசாரிக்கப்பட்டன.

தன் தமையன் பேராலும் தன் செல்வாக்காலும் அவன் அடித்த பெரும் கொள்ளைகள் அவனாலேயே ஒப்புக் கொள்ளப்பட்டன. ஏழாண்டுக் காலம் கொள்ளையடித்த குற்றத்திற்காக அவன் இங்கிலாந்துக்குப் பயணமாக முடியாதபடி சென்னையிலேயே தடுத்து வைக்கப் பட்டான். 1704லிலிருந்து அவனுக்கு இங்கிலாந்தில் மறுவாழ்வு கிடைத்தது. வைர வியாபாரியும் ஆனான். தன் மூன்று மகள்களும் செல்வக் குடும்பத்தில் மண உறவு கொள்வது கண்டு மகிழ்ந்தான்.

மறுவாழ்வு கண்ட ஏல் கொள்ளை வாழ்வுக்கு மாறாகக் ""கொடுக்கும்"" வாழ்வைத் தொடங்கினான். ஏலின்

கொடை உள்ளம் அறிந்த அமெரிக்க அன்பர்கள் 1786ல் அவனுக்குப் பொருள் உதவி வேண்டி விண்ணப்பன் செய் தனர். எகிப்திய பிரமிடுகளைக்காட்டிலும் அவன் பெரும் புகழ்நிலை உயர, தங்கள் பல்கலைக் கழகத்திற்கு அவனது பெயரைச் சூட்டுவதாக அறிவித்தார்கள்; ஏல் பெருந் தொகையை அளித்தான்.

இதில் சென்னைக்குள்ள சிறப்பு, தன் செல்வத்தைக் கொள்ளையடித்தவனும் கொடையாளியாய் ஆனபோது அவனின் அழகிய வண்ணப்படத்தைப் பாதுகாத்து; விடுதலை பெற்ற இந்தியாவிற்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அய்சனோவர் வந்தபோது அவரிடம் அப்படம் ஏல் பல்கலைக் கழகத்தை அணி செய்யும் வகையில் அன்பளிப்பாக வழங்கியமையே.

ஒரு நூற்றாண்டுக் காலக்கூறில் ஏல் பல்கலைக் கழகம் மிக அதிகமான நன்கொடையை-பொருள்களாக-புத்தகங் களாக-பணமாகப் பெற்றது. அதனால் அந்த முதல் பெருங்கொடையாளியின் பெயர் இன்றும் அப்பல்கலைக் கழகத்தை அணி செய்கிறது. இன்று ஏல் பல்கலைக் கழகம் பெற்றுள்ள-செல்வம் செல்வாக்கை நோக்கும்போது ஏல் கொடுத்த கொடை அதிகமில்லையென்றாலும், காலத் தினாற் செய்த உதவியை அமெரிக்க மக்கள் போற்றும் பண்பு போற்றத் தக்கது.

## தனி வானொலி

இந்தியப் பல்கலைக் கழகங்களில் முதல் மூன்று பல்கலைக் கழகங்களான சென்னை, பம்பாய், கல்கத்தா பல்கலைக் கழகங்கள் தோன்றுவதற்கு ஒன்றரை நூற்றாண்டுகட்கு முன்பே அதாவது 1701-லேயே ஏற் பட்டதுதான், ஏல் பல்கலைக் கழகம்.

அமெரிக்காவில் தோன்றிய மூத்த மூன்று பல்கலைக் கழகங்களுள் மூன்றாவதுதான் இந்த ஏல் பல்கலைக்கழகம்

இதற்கு என்று தனி செய்தி நிலையம், வானொலி நிலையம், மாபெரும் கலையரங்கம் உண்டு. இன்னும் கூட நமது நாட்டில் எந்தப் பல்கலைக் கழகத்திலும் இந்த நிலை இல்லை.

165 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இந்தப் பல்கலைக் கழகத்தின் நூலகத்தில் மட்டும் 74, 01, 953 (எழுபத்து நாலு லட்சத்து ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்று) நூல்கள் உள்ளன. இவற்றுள் 12,95,656 (பன்னிரண்டு லட்சத்து தொண்ணூற்று ஐம்பத்தாறு) நுண்பட ஒளி ஒலிச்சுருள்கள் Aduio Visual ஆகி உள்ளன.

57, 891 (ஐம்பத்து ஏழாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒன்று) இதழ்கள் சந்தா செலுத்தி வர வழைக்கப்படுகின்றன. இப்பல்கலைக் கழகத்தில் கிடைத் தற்கரிய நூல்கள்-சுவடிகள் தொகுப்பு உள்ளன. உலகத் திலேயே மிக அதிகமான நூல் தொகுப்புகள் உடைய பல் கலைக்கழகம் இதுவெனக் கருதப்படுகிறது. பல்கலைக்கழக வளாகத்தை அடுத்து ஒன்றரை மைல் தொலைவில் 720 ஏக்கர் நிலம் விளையாட்டுப் போட்டிகட்கும் பயிற்சி கட்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின் வரலாற்றில் பல முதன்மை இடங்கள் பெற்ற பெருமை ஏல் பல்கலைக் கழகத்திற்கு உண்டு.

இந்த விவரங்களை நான் சொல்வதற்குக் காரணம் அறிஞர் அண்ணா அவர்களை அழைத்துப் பெருமைப் படுத்திய ஏல் பல்கலைக்கழகம் ஏதோ ஒரு சாதாரண பல் கலைக்கழகம் அல்ல, அது ஒரு ஒப்பற்ற பல்கலைக்கழகம் என்று மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகத் தான்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பல்கலைக் கழகத்தின் முன் னாள் மாணவர் 'ஹெண்டன் சப்' எனும் பெயருடை யவர் 1938ல் ஏற்படுத்திய ஃபெல்லோ-ஷிப்பின் நோக்கம்

உலகின் சிறந்த தலைவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அழைத்துச் சிறப்புச் செய்வதுதான்.

'ஹெண்டன் சப்' என்ற பெயரில் உள்ள கடைசி சொல்லான 'சப்' என்ற பெயர் ஃராடு சப்டெல்லோ-ஷிப் என்ற பெயருடன் விளங்குகிறது. 'சப்' என்பது ஒருவரின் பெயரே தவிர, 'சப்' என்றால் 'சிறிய' என்ற பொருள் அல்ல.

இதைத் தெரியாத ஒரு சிலர் அறிஞர் அண்ணாவிற்கு வழங்கப்பட்ட 'சப்ஃபெல்லோஷிப்' என்பது சின்ன ஃபெல்லோஷிப் என்று கேலி பேசினர்.

பாவம்! அவர்கள் அறியாமை கண்டு மன்னிப்போம்.

ஆத்திகம் என்றால் ஒழுக்கம் முதலியவற்றைப் போதிப்பது, கடைப்பிடிப்பது என்று சொல்லப்படுகிறது. ஆனால் நான் பார்த்த நாடுகளில், அந்த ஆத்திகம் சொல்லும் ஒழுக்கம் ஒரு நாத்திக நாடான சீனாவில் தான் பார்த்தேன்.

# VI

# அனைத்திந்திய வானொலியில் ஒரு கலந்துரையாடல்

---

*பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களும் கவிஞர் ஏர்வாடி இராதாகிருஷ்ணன் அவர்களும் 2-12-85 அன்று வானொலியில் நிகழ்த்திய உரையாடல்*

**கவிஞர் ஏர்வாடி**

பேராசிரியர் டாக்டர் சஞ்சீவி அவர்களே! நான் கிரீஸ், இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளைத்தான் பார்த்தேன். தாங்கள் ஜெர்மனி, ஆலந்து ஆகிய நாடுகளையும் பார்த்துள்ளீர்கள். தங்கட்கு ஏற்பட்டிருக்கும் ஐரோப்பா பற்றிய பொதுக் கருத்துகள் எவை?

**பேராசிரியர் சஞ்சீவி**

1. ஐரோப்பாவில் பல நாடுகள் - பலமொழிகள். சில நாடுகள் தமிழகத்தின் சில மாவட்டங்கள் அளவே இருக்கும். அப்படியிருந்தும் ஒவ்வொரு நாடும் தன் தன் மொழியை மருத்துவ, பொறியியல் உயர்கல்விக்கும் உரிய தாய்க் கடந்த சில நூற்றாண்டுகளாகவே - குறிப்பாக அறிவியல், தொழிலியல் புரட்சி தோன்றிய காலத்திலிருந்தே - வளர்த்து வந்துள்ளன. அதனால் இந்திய நாட்டில் இருப்பது போல ஆங்கிலத்தின் ஆக்கிரமிப்பு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சமுதாயத்தின் மிக மேல்பட்ட நிலையிலும் இல்லை (அண்மையில் ஜெனிவாவில் நடந்த இரு வல்லரசுகளின் உச்ச மாநாட்டிலுங்கூட இரு நாடுகளின் தலைவர்களும் மொழிபெயர்ப்பாளர்களின் துணைகொண்டே பேச்சு நடத்தியது நினைக்கத்தக்கது.)

2. இந்தியாவைப் போலல்லாமல் மொழி இன வேறுபாடுகள் இருப்பினும் உணவு, உடை, உறையுள் பெரிதும் ஒரே மாதிரியாக உள்ளன.

3. ஐரோப்பாவில் (கிரீசு முதல் இங்கிலாந்து வரை) பழங்கால வீடுகள் - ஓடு போட்ட வீடுகள் (சைனாவிலும் இப்படியே) இருப்பதைப் பார்க்கும்போது ஐரோப்பிய - ஆசிய ஒருமைப்பாட்டு உணர்வே தோன்றுகிறது.

4. ஆசிய - ஐரோப்பிய நாகரிக ஒருமைப்பாட்டை இந்தோ - ஐரோப்பிய மொழிகள் வலியுறுத்தும்.

சமஸ்கிருதமும் ஐரோப்பிய மொழிகளும் ஒரு குடும்பத் தொடர்புடையவை. அண்மைக்கால மொழியியல் ஆய்வுகள் சமஸ்கிருதத்திலும் பழமையானவை கிரேக்கமும் லத்தீனும் என்று நிறுவியுள்ளன.

6. பழைய ஐரோப்பாவிலிருந்தே சாதி முறை இந்தியாவிற்குள் நுழைந்திருக்க வேண்டும் என்பது அண்மைக்கால இந்தோ ஐரோப்பிய மொழிகளின் ஒப்பாய்வால் விளங்குகிறது.

7. இன்றைய ஐரோப்பாவின் - சிறப்பாகப் பழைய ஐரோப்பாவின் இரு கண்களாகிய கிரீசிலும் ரோமிலும் பழமை இடிபாடுகளாய் உள்ளது. வடக்கே போகப்போக இடைக்காலப் பழமை நன்று பாதுகாக்கப்படுகின்றது. இன்னொன்று : இன்றைய ஐரோப்பாவில் ஏதென்சிலிருந்து லண்டன் வரை பொருளாதார நெருக்கடிகளால் வறுமை மிஞ்சி வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிப் பரவலாகச் சமதர்ம அலை திரும்பியுள்ளது. மதப்பற்றும் ஒழுக்கமும் குன்றி வருகின்றன. குடும்பம் பிணைப்புகள் நாளும் சிதைந்து வருகின்றன. ஐம்புல இன்பங்களிலேயே மக்களுக்கு அதிக நாட்டம் உள்ளது.

8. ஆங்கிலமும் இந்தி போலவே ஆரிய மொழியே. ஆயினும் வரலாற்றுக் காரணங்களால் - சிறப்பாக அமெரிக்காவின் ஆட்சி/கல்வி மொழியும் ஆங்கிலமாக இருப்பதால் அம்மொழி முதிர்ச்சி பெற்றுள்ளது. மேலும், உலக மக்கள்

தொகையில் பாதிப் பேர் ஆங்கிலம் அறிந்தவர். எனவே எல்லா நாடுகளும் ஆங்கிலம் கற்கின்றன. இந்தியாவிலும் இந்தியோடு ஆங்கிலமும் தமிழ் நாட்டிலும் தமிழோடு ஆங்கிலமும் கற்பிக்கப்படுவது சரியே. ஆனால் தமிழ் மக்களின் தாய்மொழியாகிய தமிழே நூற்றுக்குத் தொன்னூறு விழுக்காடேனும் ஆட்சியிலும் பல்கலைக் கழகத்திலும் இடம்பெற வேண்டும்.

9. இறுதியாக—உறுதியாக ஐரோப்பிய மொழிகள்—ஏன்? உலக மொழிகள் அனைத்திலும் திருக்குறள் மொழி பெயர்ப்புகளைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்/யுனஸ்கோ வாயிலாகச் செய்து ஒல்லும் வகையால் எல்லாம் தமிழக அரசு பரப்ப வேண்டும்.

10. தமிழக அரசு இந்திய அரசின் நிதி உதவியோடு அயல் நாடுகள் அனைத்திலும் தமிழறிவும் (பயிற்சி வந்து) பிற மொழியறிவும் உடையவர்களைக் கொண்டு பி.பி.சி. தமிழ்ப் பிரிவுப் போல குறைந்த அளவிலான அமைப்பு நிலையிலேனும் (Skeleton office) அனைத்துலகத் தமிழாய்வு மையங்கள் (International Tamil Studies) ஏற்படுத்தி ஆங்காங்குள்ள அருங் காட்சியகங்களிலும் நூலகங்களிலும் அனைத்து நிலையிலும் வகையிலும் உள்ள குறிப்புகளைத் தொகுத்துக் கால முறைப்படி தொகுதி தொகுதிகளாகப் படங்களுடனும் ஆவணங்களுடனும் வெளியிட வேண்டும்.

11. மேற்படி அனைத்துலகத் தமிழாய்வு மையங்கள் வாயிலாகவே ஐரோப்பிய இலக்கியங்களில் சிறந்தன வற்றைத் தமிழாக்கம் செய்து வெளியிட வேண்டும். அவ்வாறே தமிழிலக்கியங்களில் தலைசிறந்தனவற்றை ஐரோப்பிய மொழிகள் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும்.

12. ஐரோப்பாவில் பலர் செய்திருக்கும் வீர முயற்சிகளை (Adventures) நினைக்கும்போது நம் நாட்டில்—சிறப்பாகத் தமிழ் நாட்டில் அத்தகைய முயற்சிகள் வரலாற்றையும் வரலாற்றுச் சின்னங்களையும் பாதுகாக்கும் முயற்சிகள் எவ்வளவு குறைவாக உள்ளன என்று எண்ணி நாணவும் வருந்தவும் வேண்டியுள்ளது.

**கவிஞர் ஏர்வாடி**

ஐரோப்பியப் பயணத்தில் உங்கள் நெஞ்சைத் தொட்ட சில நிகழ்ச்சிகளைச் சொல்லலாமே !

**பேராசிரியர் சஞ்சீவி**

என்னுடைய ஐந்து வார ஐரோப்பிய பயணத்தில் என்னைப் பெரிதும் கவர்ந்த நிகழ்ச்சிகள் சில :

1. குழந்தை உள்ளம் பற்றியது. மேற்கு ஜெர்மன் தலைநகராகிய 'போன் நகரத்தில் பூபாலன் என்ற ஈழத் தமிழர்; அவர் மனைவி திருநெல்வேலிப் பெண். மேரி என்று பெயர். அவர்கட்கு ஒரே ஒரு பெண் குழந்தை-இப்போதைக்கு! பெயர் கிறிஸ்தி. ஒரு சில நாள்கள் அவர்கள் வீட்டில் விருந்தினராய் இருந்தபோது சுறுசுறுப்பான அந்தக் குழந்தை நன்றாகப் பழகி விட்டது. இக் குழந்தை ஒரு சில மாதங்கட்கு முன்புதான் திருநெல்வேலியில் தன் தாய்வழிப் பாட்டி வீட்டுக்குப் போய் சில மாதங்கள் இருந்துள்ளது. அங்கே அது அதன் சித்தி முதலானவர்களிடம் பெற்ற அன்பை அதனால் மறக்க முடியவில்லை. நான் ஊருக்குப் புறப்படுகிறேன் என்று தெரிந்ததும் அதற்குத் தன் பாட்டி வீட்டு நினைவு வந்து விட்டது. அதற்கு மெத்தவும் பிடித்தவர்கள் ஒரு சித்தி, ஒரு அத்தை போல இருக்கிறது. அடிக்கடி அவர்கள் ஊராகிய அணைக் குடியில் உள்ள அவர்களை நினைந்து நினைந்து தன் தாயாரிடம் சொந்த ஊருக்குப் போகலாம் என்று வற்புறுத்தும். நான் புறப்படும் நேரம் பார்த்து என் முன்னே இரண்டு பெரிய பிளாஸ்டிக் பைகளைக் கொண்டு வந்து வைத்து அப் பைகளில் தன்னுடைய சின்னஞ்சிறு உடுப்புகள் அனைத்தையும் ஓடி ஓடி வாரி வாரி வந்து போட்டது. இரண்டு பை

களையும் மாறி மாறித் தன் பிஞ்சு விரல்களால் சுட்டி, 'இந்தப் பை சித்திக்கு; இந்தப் பை அத்தைக்கு' மறந்திடாம கொடுத்திடுங்க' என்று திரும்பத் திரும்பச் சொல்லியது; வற்புறுத்தியது. கிறிஸ்டியின் அம்மாவும் கூட அக் குழந்தையின் உள்ளன்பை நினைந்து உருகி'ஏண்டி, கிறிஸ்டி உன் உடுப்பு எல்லாவற்றையும் கொடுத்திட்டியே? நீ எதைப் போட்டுக் கொள்வாய்?' என்றார்கள். அதைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படவில்லை.

2. ஈழத்தில் நிகழும் இனப்படுகொலை காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் அயல்நாடுகட்கு 'அகதி'களாகப் போயுள்ளார்கள். அவரவர்கள் படிப்புக்கும் இயல்புக்கும் ஏற்ப வாழ்க்கை நடத்துகிறார்கள். பாரிசில் ஒரு வீட்டு மாடியில் இரு யாழ்ப்பான இளைஞர்கள் தங்கி இருக்கி றார்கள். அவர்கள் ஒட்டல்களில் இரவு நேரத்தில்- இரவு விடுதிகளில்- பரிமாறுபவர்களாக வேலை பார்ப்பவர்கள். இரவெல்லாம் கண்விழித்து வேலை பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல வாடிக்கைக்காரர்களைத் திருப்தி செய்யும் வகையில் உணவுகளையும் குடிகளையும் கொடுத்து மகிழ் விக்க வேண்டும். இது அவர்கள் வீட்டிலிருந்த புத்தகங் களாலேயே விளங்கியது. ஒரு புத்தகம் 'உயர்ந்த மது வகை களைத் தேர்ந்தெடுப்பது எப்படி?' என்ற பிரஞ்சு புத்தகம், மற்றொன்று 'உங்கள் வாடிக்கையாளர்களிடம் நடந்து கொள்வது எப்படி?' என்ற பிரெஞ்சு புத்தகம். இன்னொரு புறம் பார்த்தால் ஒரே சீரான அளவுடைய இருபது தொகுதிகள். முதல் தொகுதியை எடுத்துப் பார்த்தேன்; அத்தொகுதிகள் அனைத்தும் பிரெஞ்சு கற்பதற்காக. அத்தொகுதிகளில் இடையிடையில் கிராம போனில் போட்டுப் போட்டுக் கேட்டுப் பயிற்சி பெறுவதற் கான ஒலித்தட்டுகள். நினைத்துக் கொண்டேன்; ஈழப் போராட்டம் ஏற்படவில்லை என்றால் இவர்கள் எல்லாம் அயல்நாடுகட்கு வருவார்களா? அயல் மொழிகளைக் கற்பார்களா? இரவு பகலாகச் சோம்பலின்றி உழைப்பார் களா? ஆம். தீமையிலும் நன்மை இருக்கத்தான் செய்கிறது!

3. ரோம் நகரம் ஒரு வகையில் துன்ப ஓவியம். எப்படி அந்த நாட்டில் கலையும் கொலையும் ஒன்றாக இருந்தன என்பது பெரிய புதிர். ஒரு வகையில் ரோம் நகரை ஐரோப்பாவின் கல்லறை எனலாம். ஏசு கிறிஸ்துவின் சீடர்களும் அவரைப் பின்பற்றியோரும் முதன்முதல் ரோம் நகரத்தில் நுழைந்தபோது அந்த நாட்டில் அப்போது ஆண்ட அரசர்களால் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்கள். இப்போதைய ரோம் நகரத்திற்குச் சற்றுத் தொலைவிலே மூன்று இடங்களில் சித்திரவதை செய்யப் பட்டவர்கள் அடுக்கடுக்காய்ச் சதுர சதுரப் பெட்டிகள் போன்ற மண்சுவர் அறைகளில் புதைக்கப்பட்ட பாதாள இடுகாடுகள் உள்ளன. ஒரு இடுகாட்டை அவசர அவசர மாய்ப் பார்த்தாலும் ஒரு மணி நேரத்திற்கு மேலாகும். சில அறைகளில் புதைக்கப்பட்டவர்களின் பளிங்கு உருவங்கள் உள்ளன. குப்புற மண்டியிட்டிருக்கும் ஒரு பெண்ணின் கழுத்தில் வெட்டுக்காயம் தெரியுமாறு ஒரு வெண் பளிங்கு உருவத்தைப் பாதாள அறையில் கண்ட போது உலகெங்கும் இருந்து வந்திருந்த பயணிகளின் கண்கள் குளங்களாயின. ஆம். மதவெறியின் கொடுமைகள் இன்னும் தொலையவில்லையே!

**பேராசிரியர் ந. சஞ்சீவி**

கவிஞர் ஏர்வாடி அவர்களே! என்னை நீங்கள் கேட்டது போல் உங்களைநானும் கேட்கிறேன். ஐரோப்பிய பயணத்தில் தங்களைக் கவர்ந்த சுவையான செய்திகள் சிலவற்றை நேயர்களுக்குச் சொல்லலாமே!

**கவிஞர் ஏர்வாடி**

1. கிரீசில் இருக்கும்போது அந்நாட்டுக் கிராமிய நடனத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. காணக்கிடைக்கும் இடத்தைக் கேட்டறிந்த போது ஓர் இரவு விடுதியின் பெயரே எனக்குச் சொல்லப் பட்டது. உங்களுக்குத் தெரியாமல் ஓர் இரவு அங்கே

சென்றேன். எடுத்த எடுப்பில் உடுத்திய உடுப்புகளை நீக்கி விட்டு ஆடுகிற நிர்வாண நடனம் முதல் நிகழ்ச்சி. அதை விவரிக்க மாட்டேன்! ஆனால் அதைத் தொடர்ந்து கிரீசின் கிராமிய நடனம்; அந்த இசையையும் நடனத்தையும் கண்டும் கேட்டும் அனுபவிக்க வேண்டும். அந் நடனத்தில் என்னை மிகவும் கவர்ந்த ஒரு நிகழ்ச்சி, மரக் காலணி அணிந்த பெண்மணி ஒருத்தி அரங்கில் ஆடிய போது எழுந்த ஒலிலயம் பிறழாத ஒரு மிருதங்கக் கச்சேரியை நினைவூட்டியது. கண்ணை மூடிக்கொண்டு கேட்டால் அது ஒரு மிருதங்கக் கச்சேரி நடக்கிற உணர்வையே உண்டு பண்ணும். நான் கண்ணை மூடிக் கொண்டேன். மிருதங்கக் கச்சேரிக்காக மட்டுமல்ல! அந்தப் பெண்ணும் பாவம் சுமாராகவே இருந்தாள்! கிரீசில் பெண்கள் அழகானவர்கள். ஆனால் காபரே பெண்கள் கன்றாவி!

2. கோர்புத் தீவிலிருந்து ஏத்தன்ஸ் திரும்புகிற வழியில் விமானப் பயணத்தில் ஒரு கிரேக்க நண்பர் கிடைத்தார். வாணிகக் கப்பலில் பணிபுரிகிற அவர் பம்பாய், சென்னை, கொச்சின் துறைமுகங்களில் வந்து இறங்கி ஊர் சுற்றிய அநுபவத்தை விவரித்தார். அவருக்கு இந்தியா பிடித்திருக்கிறது; இந்தியர்களையும் பிடித்திருக்கிறது. ஆனால் இந்திராவை இப்படி அநியாயமாகச் சுட்டுக் கொன்று விட்டீர்களே! என்று கொதித்தார். ஏத்தன்சில் இறங்கியதும் இங்கும் உங்கள் நாட்டைப் போல டாக்ஸிக் காரர்கள் அதிகமாகப் பணம் கேட்பார்கள். மொழி தெரியாத உங்களுக்கு நானே டாக்சி பேசி ஏற்றி விடுகின்றேன் என்று கூறி அவ்வாறே செய்து உதவினார். நாங்கள் வந்து சேர வேண்டிய விடுதிக்கு வந்து சில நிமிடங்கள் கூட ஆகியிருக்காது. பெருங்கவிக்கோ சேதுராமன் மறந்து போன பெட்டியைக் கொண்டுவந்து தந்து விட்டு நன்றிக்குக் கூட காத்திராமல் பறந்து விட்டார்.

அதில்தான் சேதுராமனின் பாஸ்போர்ட் (PassPort) இருந்தது. ஒரு நிமிடம் அவருக்கு இதயம் நின்று இயங்கியது. நல்ல மனிதர்கள் எங்கேயும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

3. மிலான், ரோம் விமான நிலையங்களில் சுங்க அதிகாரிகளிடம் பட்ட அனுபவங்களை மறக்கவே முடியாது. என் நண்பர் ஒருவரின் மகள் பாரிசில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள். இங்கிருந்து அவரது தாய் என் மூலம் அனுப்பிய பருப்புப் பொடியைப் பார்த்து விட்டு சுங்க அதிகாரிகளுக்குப் பலத்த சந்தேகம்; இது என்ன பொடி என்று அவருக்கு நான் சொன்ன விளக்கத்தில் அவருக்கு நம்பிக்கை இல்லை! மேலும் நான் எடுத்துச் சென்ற என்னுடைய புத்தகங்கள் எதைப் பற்றியது என்று கேட்க நாங்கள் சொன்ன பதிலில் நம்பிக்கை இல்லாமல் துருவித் துருவி பற்பல கேள்விகளைக் கேட்டது அருவருப்பாகவே இருந்தது. இருந்தாலும் அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அவர்கள் கண்ணிலும் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டுப் போதைப் பொருட்கள் குறிப்பாக ஆசிய நாடுகளிலிருந்து கடத்தப்படுவதை வெட்கத்தோடு ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். ரோமிலும் எனக்கு ஒரு விசித்திர அநுபவம். பம்பாயில் இரயில் கூட்ட நெருக்கடியில் என்னுடைய புதிய காலணியின் அடிப்பாகம் கிழிந்து விட்டது. அதைத் தைத்து அணித்து கொண்டேன். ரோம் விமான நிலையத்தில் சுங்க அதிகாரி என் ஒரு ஜோடி மிதியணியில் ஒன்று மட்டுமே தைத்திருப்பதைப் பார்த்து மிகவும் சந்தேகப்பட்டார். பவவிதமாக என்னை சோதிக்கத் தொடங்கினார். அருவருக்கத் தகுந்த அந்தச் சோதனைகளைப் பொறுக்க முடியாத நான் என் வங்கி முகவரி அட்டையை அவரிடம் காட்டி, நான் ஒரு வங்கி அதிகாரி, புகழ் பெற்ற எழுத்தாளன், இது போல என்னை நடத்துவது சரியில்லை. இந்தக் காலணியில் சந்தேகம் இருந்தால் இரண்டையும் இங்கேயே விட்டுச் செல்

கின்றேன்! 'என்னுடைய அன்பளிப்பாக வைத்துக் கொள் ளுங்கள்!' என்று சீறினேன். அப்புறம்தான் அவன் அடங்கினான். மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயம்?

4. பாரிசில் 'சென்மில்' என்ற பாதாள இரயில் நிலை யத்தில் ஓர் அழகான - மிக அழகான பெண்மணி மிக நேர்த்தியான உடை உடுத்துக் கொண்டு வழியில் அமர்ந்து கொண்டு பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாள். இரந்தும் உயிர் வாழ்பவர்கள் அங்கும் இருக்கத்தான் செய்கின்றார் கள். என்னுடன் வந்த நண்பர் இவ்வளவு அழகையும் இளமையையும் வைத்துக் கொண்டு அதுவும் பாரீஸில் இப்படிப் பிச்சை எடுத்தா வயிற்றைக் கழுவிக் கொள்ள வேண்டும் என்று பொடி வைத்தார். கற்பைப் பெரிதாகப் பேணுகிற சிறப்புக்காக அப்படிப் பிச்சை எடுப்பதும் தவறாய் எனக்குத் தோன்றவில்லை. அந்தப் பெண்ணை ஒளிப்படம் எடுக்க விரும்பியபோது அவள் அதற்கு அனுமதி மறுத்து விட்டாள்; உங்கள் நாட்டுப் பத்திரிக்கையில் எங்களைப் பற்றி எழுதி என் படத்தைப் போடுவதை நான் விரும்பவில்லை என்றாள். நாடும், நாட்டின் கௌரவமும் அவர்களுக்கு முக்கியமாக இருக்கிறது. ஆனால் நம்மவர் களில் சிலர் நம் நாட்டுப் பிச்சைக்காரர்களையும், அவர் களின் அவலங்களையும் படமெடுத்து வெளியில் அனுப்பு கிறார்களே!





சீனப் பயணத்தின்போது பேராசிரியர்

# நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | டாக்டர் ந. சஞ்சீவி |
| பிறந்த நாள் | : | 2-5-1927 |
| மறைந்த நாள் | : | 22-8-1988 |
| பிறந்த இடம் | : | திருச்சி |
| கல்வித் தகுதி | : | எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,<br>நிறை சான்றிதழ்கள்: மானிடவியல்,<br>அரசியல் & ஆட்சியியல்,<br>சான்றிதழ் — மொழியியல் |
| வகித்த பதவிகள் | : | 1. தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம் (1950-1960)<br>2. தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம் (1960-1965)<br>3. இணைப் பேராசிரியர் (1965-சன, 1971)<br>தலைவர் (பிப். 1971-1976)<br>பேராசிரியர் & தலைவர் (செப். 1972)<br>தமிழ்த்துறை சென்னைப் பல்கலைக்கழகம்<br>4. தலைவர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம் (1980-1987) |
| வெளியிட்டுள்ள நூல்கள் | : | 17 + 10 (பதிப்புகள்) |

ஆய்வுக் கட்டுரைகள் : 300 க்கு மேல்

நிகழ்த்திய அறக்கட்டளை உரைகள் : 4

சென்ற நாடுகள் : அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, கிரீசு, சிங்கப்பூர், பிரான்சு, மலேசியா, ஜப்பான், ஜெர்மனி, ஹாங்காங், ஹாலந்து

பெற்ற விருதுகள் : சிந்தனைச் செம்மல்
நூலறி புலவர்
செந்தமிழ் இலக்கியச் செம்மல்

நிறுவிய அறக்கட்டளைகள் : 1. சென்னைப் பல்கலைக் கழகத்தி ரூ. 25,000 வழங்கி, திருமதி கிருஷ்ணா சஞ்சீவி அவர்கள் பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவியுள்ளார்.

2. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், ரூ. 20, 000 வழங்கி, பேராசிரியர்கள் ரா. பி. சே., மு வ., தெ. பொ. மீ. ஆகியோர் பெயரில் ஓர் அறக் கட்டளை நிறுவியுள்ளார்.

3. பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் ரூ. 20,000 வழங்கி, டாக்டர் இராமசாமி முதலியார், டாக்டர் இலட்சுமணசாமி முதலியார், டாக்டர் தி. மு. நாராயணசாமி பிள்ளை, பேராசிரியர் எம். நடேச முதலியார் ஆகியோர் பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவியுள்ளார்.

4. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், ரூ. 20, 000 வழங்கி, திரு ஏ. வி. மெய்யப்ப செட்டியார், திரு. ம. பொ. சி. ஆகியோர் பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவியுள்ளார்.